B5
036



மாலை சூட்டும் நாள்

குறமகள்

வள்ளிநாயகி இராமலிங்கம்

அகிலன்
அசோஷியேற்ஸ்
வெளியீடு
2005

Digitized by the Internet Archive
in 2022 with funding from
University of Toronto Scarborough Library

https://archive.org/details/malisoodumnaal00unse

மாலை சூட்டும் நாள்

கவிதைத் தொகுதி

குறமகள்

வள்ளிநாயகி இராமலிங்கம்

அன்புடனும்
ஆசியுடனும்
குறமகள்

அகிலன் அசோஷியேற்ஸ் வெளியீடு

2005

ISBN:	0-9685364-3-3
நூல்:	மாலை சூட்டும் நாள் கவிதைத் தொகுதி
ஆசிரியர்:	குறமகள் வள்ளிநாயகி இராமலிங்கம்
முதற்பதிப்பு:	மே, 2005 குறமகள் எழுத்துலகப் பொன்விழா வெளியீடு
பக்கங்கள்:	**181**
அச்சு வடிவமைப்பு:	மா. கனகசபாபதி
அச்சுப் பதிப்பு:	அகிலன் அசோஷியேற்ஸ்
வெளியீடு:	அகிலன் அசோஷியேற்ஸ் Ahilan Associates P.O.Box - 3, Station - F Toronto, Ontario. M4Y 2L4 416-920-9250 ahilanassociates@sympatico.ca

சமர்ப்பணம்

காங்கேசன்துறை நடேஸ்வராக் கல்லூரித் தமிழ்ப் பிரிவின்
தலைமையாசிரியரும்,
காங்கேசன்துறை பட்டினசபை அங்கத்தவராகவிளங்கியவரும்,
எமது மதிப்புக்குரிய ஆசிரியரும்,
சிறுவயதில் எனைத்தூக்கி வளர்த்தவர்களுள் ஒருவரும்,
எனது சித்தப்பாவுமாகிய
அமரர்

திரு. மு. அ. குருநாதபிள்ளை

அவர்களுக்கு
இந்நூலைப் படையல் செய்கிறேன்.

சித்தப்பா,

சிறுவயதில் பாலர் பாடல்களைச் சொல்லித்தந்தீர்கள். ஐந்தாம் வகுப்பில் பாரதியாரின் 'பாஞ்சாலி சபதத்தை' அபிநயத்தோடும், பாவத்தோடும் குரல் ஏற்றத் தாழ்வோடும் கற்பித்து; வரும் பிரமுகர்கள், பரிசோதகர் முன்னிலையில் செய்வித்தீர்கள். புவியியல் பாடத்தைக் கற்பித்ததோடு, கடற்கரையில் நின்று வானவெளியின் நட்சத்திரக் கூட்டங்களைக் குறித்துக்காட்டி கிரகங்களையும் தாரகைகளையும் இராசிகளையும் அறிமுகம் செய்துவைத்தீர்கள். சேகரித்து வைத்திருந்த நூல்களை வாசிக்கும் அனுமதியையும் தந்தீர்கள். வாழ்ந்த ஐம்பது வருட காலத்தில் ஒரு முன்னுதாரண ஆசிரியராக விளங்கி எமக்கும் அத் தொழிலின் மகிமையை அறியவைத்தீர்கள். இளமையிற் கல்வி சிலையெழுத்து. அதனால் தங்களை நன்றியுடன் நினைவு கூருவேன். கவிதையின் அழகை உணரவைத்த தங்களுக்கு இந்நூலை மனமகிழ்ச்சியுடன் சமர்ப்பிக்கின்றேன். உறவினர் என்பதற்காக அல்ல, மதிப்புக்குரிய ஆசிரியருக்கான காணிக்கையாக ஏற்றுக் கொள்ளுங்கள்.

அன்பு
'இராசாத்தி'





நாடும் நடப்பும்



போரும் களமும்



மேடையும் கவியும்

ஊருக்கு நான் போவேனா?
பொங்குமாம் கடல்
நனவாகிய கனவுகள்
ஊடகவியலாளர் படுகொலை
களம் பாடிய மாவீரன்
திலீபன் - ஈழத் தமிழ்த் தியாகி
பெண்கள் உலகத்தின் கண்களாம் கேட்டீரோ!
வாழ்க்கையின் ஒப்பந்தங்கள்
வருமோர் நாள்
பாசமும் நேசமும்
அமரர் ஜூனியர் ஜீ. ஜீ


 

தாயும் சேயும்

கடைசிக் கையசைப்பு
துயரத்தின் எல்லையில்
தலையாய கடன் எது?
பெரிய மடுப் போர் நினைவு
இயற்பகை முடிப்போம்
வெஞ்சினம்
எழுந்திரம்மா
பேயாகவாயினும் வருவேன்!
கண்ணே!,
வீராங்கனைகள்
மாவீரர்




கவியும் காலமும்



உளமும் உடலும்

மீளா அடிமை
மகளிர் மாத்திரம்.



குமுறலும் குறுங்கவியும்

கைம்மண்ணளவு
காதல்
முதுகு சொறிதல்
நட்பு
தவளை
கோணேஸ்வரி
எழுத்தாளரா?
கதவம் திறவாய்
வெட்டுண்டு போ!
யார் பேய்?
ஆன்மா வெவ்வேறு.
அப்போதைக்கு இப்போது.
கோபம்.
நளாயினி.
மாவீரர்.



தமிழ் ஈழமும் மாலையும்

பிரபாகரன் வாழ்த்து
மாலைசூட்டும் நாள்

பதிப்புரை

ஈழத்தில் மறுமலர்ச்சிக் காலத்தையடுத்து உருவான எழுத்தாளர்களில் முதன்மையானவராகத் திகழ்பவர் குறமகள் (வள்ளிநாயகி இராமலிங்கம்) அவர்கள். கவிதை, சிறுகதை, தொடர்கதை, நாவல், கட்டுரை, விமர்சனம் என்று எழுத்தின் அறுசுவைப் பரிமாணங்களிலும் தமது எழுதுகோலைக் கடந்த அரைநூற்றாண்டாகத் தவழ விட்டு, அதில் வேரோடிய பெருமை இவருக்குண்டு. இதனால், குறமகள் அவர்கள் "மூத்த எழுத்தாளர்" என்னும் சீரிணைப் பெற்று நிற்கின்றார்.

இலங்கையின் சகல தமிழ்ப் பத்திரிகைகளிலும் இவரது படைப்புகள் நிறையவே பிரசுரமாகியுள்ளன. தமிழகச் சஞ்சிகைகளில் அவ்வப்போது "ஆனைப் பிரசவம்" செய்த குறமகளின் கதைகள் முத்திரை பதித்தவை. சும்மா எழுத வேண்டும் என்ற மன அரிப்புக்காக எழுதாமல் நல்ல கருக்களுக்கு உருக்கொடுத்து அவைகளைப் பிரசவித்ததால், இவரது எழுத்துகள் எப்போதும் ஊன்றிய கவனத்தைப் பெற்று வந்துள்ளன.

ஐம்பது ஆண்டுகளாகத் தாம் எழுதியவைகளை இவர் பக்குவமாகச் சேகரித்து வைத்திருந்திருப்பாராயின், ஆகக்குறைந்தது பத்து நூல்களாவது இதுவரை வெளிவந்திருக்கும். காலவோட்டத்தில் ஆங்காங்கே வெட்டு நறுக்குகள் தவறிப்போனதால், கைவசமிருந்த வைகளைச் சேர்த்து இரு சிறுகதைத் தொகுதிகளை (குறமகள் கதைகள், உள்ளக்கமலமடி) மட்டுமே இவரால் இதுவரை வெளிக்கொணர முடிந்தது.

"மாலை சூட்டும் நாள்" குறமகளின் முதலாவது கவிதைத் தொகுதி. ஒவ்வொரு கவிதையையும் உருவத்திலும் உள்ளடக்கத்திலும் அதன் பண்புகள் சிதையாது கோர்த்து துளசி மாலையாகத் தந்துள்ளார். கவி வடிப்பில் இவர் பெற்ற முறையான பயிற்சியின் முதிர்ச்சியை இங்கு தரிசிக்க முடிகின்றது. இழப்புகள் தரும் சோகங்களின்

ஊடாக வரும் பேறுகள் சாகாவரம் பெறுபவை என்னும் உண்மையை இவைகளைப் படிக்கையில் உணரலாம். இக்கவிதை நூல் முற்றத்து ரோஜாவாகத் திகழ்ந்து என்றும் சுகந்தம் பரப்பும் என்பது திண்ணம்.

ஐம்பதாண்டுகளுக்கு முன்னர் சிறுகதையுடன் இலக்கிய உலகில் பாதம் பதித்த இவர், இவ்வாண்டில் தமது இலக்கிய வாழ்வின் ஐம்பதாண்டுகளைப் பூர்த்தி செய்து பொன்விழாக் காண்கின்றார். எனவே, "குறமகள் எழுத்துலகின் பொன்மகள்" என்று அழைப்பது பொருத்தமானது. இப்பெருமை பெறும் குறமகளை வாழ்த்தி வரவேற்க "தமிழர் தகவல்" எடுக்கும் விழாவில் இந்நூல் அரங்கேற்றம் காண்கின்றது.

இவ்வுலகுக்கு மே மாதத்தில் "வந்து-போன" அகிலனின் நினைவாக உருவான அகிலன் அசோஷியேற்ஸ் வெளியீடாக "மாலை சூட்டும் நாள்" கவிதைத் தொகுப்பை மே மாதத்தில் வெளியிடுவதில் இதயம் ஈரமடைகின்றது. இந்த உரிமையைத் தந்தமைக்காக குறமகள் அவர்களுக்கு நன்றிகள் கூறி, இக் கவிதை மாலையை தமிழ்த் தேசியத்தின் வாயிற் கதவுகளில் சூட்டுகின்றோம்!

திரு எஸ். திருச்செல்வம்
பிரதம ஆசிரியர் - தமிழர் தகவல்
நிறைவேற்று இயக்குனர் - அகிலன் அசோஷியேற்ஸ்

அணிந்துரை

'குறமகள்' என்று எழுத்துலகில் நன்கு அறியப்பெற்ற திருமதி வள்ளிநாயகி இராமலிங்கம் அவர்களது கவிதைகள் 'மாலை சூட்டும் நாள்' என்ற மகுடத்தில் அச்சுவாகனம் ஏறியுள்ளன.

சிறுகதை எழுத்தாளராக, நெடுங்கதை ஆசிரியராகப் பெயர்பெற்ற குறமகள் அவ்வப்போது கவிதைகளும் பாடி வருவதைத் தமிழ் உலகம் நன்கு அறியும். ஈழத்தில் அவரது படைப்புகள் பல மறைந்துவிட்டன. இத்தொகுதியில் உள்ளவை எல்லாமே கனடிய மண்ணிற் பிறந்தவை. பல பத்திரிகைகளில் வெளியானவை; மேடைகளிற் படிக்கப்பட்டவை.

கவிதை என்பது உள்ளத்திற் கருக்கொண்டு கனத்து எழும் அனுபவ உணர்வுக்கு, படிப்பவர்களின் மனத்தில் ஏதாவது ஒருவகையில் பாதிப்பை ஏற்படுத்தக் கூடிய முறையில் அழகானதும் அளவானதுமான சொற்களால், கற்பனையும் விற்பன்னமும் கலந்து கட்டப்பெறும் ஓர் இலக்கிய வடிவம்.

அனுபவ உணர்வு கவிதைக்கு மிக அவசியம். என்னதான் கற்பனை வளம் இருந்தாலும் ஒரு விடயம் குறித்த அனுபவம் உள்ளவர் அதுபற்றிப் பாடுவதற்கும் அனுபவம் இல்லாதவர் பாடுவதற்கும் நிறையவே வேறுபாடுள்ளது.

இந்த இடத்தில் ஒரு கேள்வி எழுப்பப்படலாம். சுனாமி பற்றிப் பாடுவதற்கு அதன் தாக்கத்துக்கு உட்படாத கனடியக் கவிஞருக்குத் தகுதி இல்லையா? அல்லது இறந்தகாலச் சம்பவம் ஒன்றினைப்பற்றி நிகழ்காலக் கவிஞர் பாடக்கூடாதா என்று கேட்கப்படலாம். அனுபவம் நேரடியாகவும் இருக்கலாம் அல்லாமலும் இருக்கலாம். சுனாமியின் தாக்கங்களைப் பற்றிப் பத்திரிகைகளிற் படித்துக் கவலை கொள்வதும் தொலைக்காட்சியிற் பார்த்துக் கண்ணீர் விடுவதும் எல்லாம் அனுபவங்கள்தாம். வரலாறுகளைப் படிக்கையில் ஏதாவது ஒரு சம்பவம் உள்ளத்தைத் தொட்டுவிட்டால் - உள்ளம் அதனால் இன்புற்றாலோ துன்புற்றாலோ அதுவும் அனுபவந்தான்.

கவிதைக்கு உள்ளத்தின் ஈடுபாடே முக்கியம். உடல் அனுபவங்களால் உள்ளம் உடனடியாகவே பாதிக்கப்படும் என்பது உண்மைதான். எனினும் கவிதை, உள்ளத்தில் உள்ளது - உள்ளத்திற் பிறக்கின்றது என்பதுதான் உண்மை.

இந்தத் தொகுதியும் அதனையே எடுத்துக்காட்டுகின்றது. குறமகளின் உள்ளம் கவிதை உள்ளம். பாடுதற்கு எடுத்துக்கொண்ட எல்லாப் பொருள்களிலுமே அவரது உள்ளத்தைக் காணமுடிகிறது.

குருநாதன் சந்நிதி காணேனோ
கும்பிட்டுக் கும்பிட்டு வாழேனோ
இராணுவத் தொலைப்பு எப்போதோ
இடித்து விரட்டுவது எந்நாளோ

என்று குருநாதனைப்பற்றிப் பாடுகையிலும்,

பஞ்சுப் பொதிபோல் பிஞ்சுக் குழந்தையை
நெஞ்சோ டணைத்துத் தோள்மீது சார்த்தி
நிலாவைக் காட்டி நிலாப்பாட்டுப்பாடி
ஒருபிடி சோறு ஊட்ட முயன்று
தூங்க வைக்க முடிந்ததே தவிர.....

என்று நிலாவைப்பற்றிப் பாடுகையிலும் அவரது உள்ளத்து உணர்வு படிப்பவர் உள்ளங்களையும் ஊடுருவி நிற்கின்றது.

குறமகள் தமிழ் கற்றவர்; தமிழ் மரபை அறிந்தவர். அதனால் வெண்பா, விருத்தம், அகவல் போன்ற மரபு வடிவங்களிலும் பாரதியார் பாணியில் வசன கவிதைகளிலும் தமது உணர்வுகளுக்கு உருவங் கொடுத்திருக்கிறார்.

விஜயதசமி வெண்பாக்கள், மாவை முருகன் வெண்பாக்கள், புலம்பெயர் தமிழரின் உள்ளொளி வெண்பாக்கள், தேசியத் தலைவரின் பொன்விழா வாழ்த்து என்பன குறமகளின் கவிதை இலக்கணப் பயிற்சிக்கு நல்ல உதாரணங்களாக அமைகின்றன.

ஆங்கிலத்திலும் அவர் கவிபுனைய வல்லவர் என்பதையும் இசைத்துப்

பாடத்தக்க முறையில் பல்லவி, அனுபல்லவி, சரணம் ஆகிய அமைப்புகளிலும் பாடல்கள் இயற்ற வல்லவர் என்பதையும் இத்தொகுதி காட்டுகின்றது. ஆங்கிலத்திலிருந்தும் மூன்று கவிதைகளைத் தமிழாக்கித் தந்திருக்கின்றார். அவரது மொழிபெயர்ப்புத் திறமைக்கு அவை முத்திரை குத்துகின்றன.

ஜீன் லிற்றிள் என்பாரின் SHE என்ற கவிதையை 'அவள்' என்ற தலைப்பில் மொழிமாற்றம் செய்திருக்கின்றார். மூலக் கவிதையின் முடிவுப் பகுதி வரிகள் இவை:

Let her waste time,
Hand her long hours of wonder
Have faith in her sense of derection
and set her free
And do not stand
waving goodbyes from the door forever
Put a light on the window
but do not sit up
If she had not gone,
She would have grown away
In time, in her own good time
She will come home.

இவற்றை இவ்விதம் தமிழாக்கியிருக்கிறார் குறமகள்:

அவள் தன் நேரத்தை வீணாக்கட்டும்
அவளது அதிசயங்களுள் மூழ்கித் திளைக்க
நீண்ட நேரங்கொடு
அவளுடைய போக்கில் நம்பிக்கை வை
அத்துடன் அவளைச் சுதந்திரமாக
நடமாட விடு.
ஒருநாளும் வாசலில் நின்று கையசைத்து
விடை கொடாதே!
யன்னலில் ஒரு ஒளிவிளக்கை ஏற்றிவை
ஆனால் காத்திருக்காதே!

அவள் போயிருக்காவிட்டால்
நேரத்தோடு பக்குவப்பட்டிருப்பாள் – ஆனால்
அவளுக்கேற்ற நல்ல நேரம் வரும்போது
அவள் வீட்டுக்கு வருவாள்.

மொழிபெயர்ப்புத்திறன் ஒருபுறம் இருக்க, இத்தமிழாக்கக் கவிதைகள், கவிதையில் அவருக்குள்ள ஈடுபாட்டையும் எடுத்துரைக்கின்றன. பத்திரிகைகளிலோ சஞ்சிகைகளிலோ கவிதைகள் வந்தால் அவற்றைப் படித்துப் பார்க்கக்கூட மனமில்லாத பலர் எம்மத்தியில் கவிஞர்களாகப் பவனி வருகையில், குறமகள் தமிழ்க் கவிதைகள் மட்டுமல்லாது ஆங்கிலக் கவிதைகளையும் சுவைத்து வருவது அவரது கவிதைத் தாகத்தின் இயல்பான தொழிற்பாட்டைச் சுட்டிநிற்கின்றது.

பொருளடக்கத்தில் பாலருக்கென்று தனிப்பிரிவு இல்லாது போனாலும் உள்ளே பாலர் பாடல்களும் இடம்பெற்றுள்ளன. பக்திப் பாடல்களும் அணி செய்கின்றன. நையாண்டிக் கவிதைகள் என்ற குறிப்புடன் நகைச்சுவைக் கவிதைகளையும் படைத்திருக்கின்றார்.

இவை எல்லாவற்றுக்கும் மேலாக இத்தொகுதியில் விஞ்சி நிற்பது தாயக விடுதலை உணர்வே! குறமகள் தமிழீழ விடுதலைப்புலிகள் குடும்பத்தைச் சேர்ந்தவர். பெற்ற மகள் றோசாவை மண்ணுக்காகத் தியாகஞ் செய்த தீவிரத் தன்மானத் தாய். மகளை இழந்த சோகம் 'கடைசிக் கையசைப்பு' என்ற கவிதையிற் கண்ணீர் சொரிகிறது.

'இயற்பகை முடிப்போம்' என்ற கவிதையில் மிக அழகாகவே அவரது நாட்டுப்பற்று கொலுக்கொண்டள்ளது.

மன்னவர் தவறி னாலும்
மதித்திடாப் பயிர்ப்புக் கொண்ட
மங்கையர் வாழும் ஈழம்
மறப்பரோ மாற்றார் தாமும்
தென்னவர் அறிதல் வேண்டும்
தெருட்டினால் பணிய மாட்டோம்
தெவ்வரின் உயிரை யுண்ண
தெவிட்டுமோ தமிழர்க் கம்மா

சின்னவ ரென்று எண்ணல்
சிறுமதி உடையோர் புத்தி
சின்னதாம் கடுகின் காரம்
சிறியவர் அறிவரோ சொல்
இன்னுயிர் அழிக்க எண்ணும்
இறுமாப்பு அழியும் வண்ணம்
இறுகிய பூட்டை உடைத்து
இயற்பகை முடிப்போம் வாரீர்

கோட்டைப்போரும் சமாதானமும்' என்ற கவிதையில் இந்த மண்மானத் தாயின் விடுதலை வேட்கை இப்படி வீசுகிறது குண்டுகளை:

திறல் தந்த கோட்டைப்போர் மறக்கப் போமோ
தீண்டரிய சமாதானம் எனும்பெய ரால்நம்
சிறகுகளைக் கட்டி வைத்து, விரித்தார் தமதை
பேடிகளா! கோழைகளா! கேட்பாரிலையா?

விடுதலைக்காதல், முதுமையிற் காதல், அழியாக் காதல், கைம்மையிற் காதல் என்று காதலைப் பல கோணங்களிற் பார்த்து மகிழ்கிறார்.

கைம்மையிற் காதலை ஒரு கதையாகவே நெடும்பாடலில் தருகின்றார். இவர் சிறுகதை எழுத்தாளரல்லவா? குருநாதன் நம் குலதெய்வம், பாகு இறுகிப் பாறையாயிற்று, ஞானவிழிப்பு போன்றவை நல்ல கதைகள் - கவித்துவ வரிகளில். பிறகவிதைகள் பலவற்றிலும் குறமகளின் கதை சொல்லும் பாணி பாயாசம் காய்ச்சுகிறது.

பல கவிதைகள் சரித்திரப் பதிவுகளாகவும் அமைக்கப் பட்டுள்ளன. நுண்மதி இழந்த நூலக எரிப்பு, ஊடகவியலாளர் படுகொலை, திலீபன் - ஈழத்தமிழ் தியாகி போன்றவை நல்ல உதாரணங்கள்.

குறமகள் சில கவிதைகளில் ஆய்வுகளும் நடத்தியிருக்கின்றார். எம்மைக் கவர்ந்த இரு விபுலாநந்த அமிர்தம், பொங்கு தமிழ் ஏன்?, தமிழ் எந்தன் தந்தை என்பேன்!, வாழ்க்கையில் ஒப்பந்தங்கள் போன்ற கவிதைகள் அவரது அறிவாற்றலுக்கும் சிந்தனைத் திறத்துக்கும் விளக்கேற்றுகின்றன.

இந்நெடுங் கவிதைகளும் பிறவற்றுட் பலவும் மக்களுக்குகந்த நல்ல அறிவுரைகளைக் கொண்டுள்ளமையையும் குறிப்பிடல் வேண்டும். குறமகள் தொழிலால் ஓர் ஆசிரியர்; விரிவுரையாளர். குருத்தானத்திலிருந்து மாணவர்களுக்குப் பாடம்புகட்டுவது போன்று,

உள்ளப் புணர்ச்சியே உண்மைக் காதல்
உடலின் வெறியே உரைக்கும் மோகம்

(எம்மைக்கவர்ந்த இரு விபுலாநந்த அமிர்தம்)

அன்பின் வழியே உள்ளொளி துலங்கும்
சோதிதுலங்க ஞானம் பிறக்கும்
ஞானம் முதிரின் சத்யயுகம் வருமே

(சமரசம் காண்போம்)

பாரெல்லாம் போற்றும் மண்பாடு கலாச்சாரம்
பௌத்திரமாகப் போற்றி வாழ்ந்தால்
சீரழிவு இல்லை சிறுப்பினை இல்லைத்
திசைகெட்டுப் போவதில்லை

(பொங்கு தமிழ் ஏன்-1)

வில்லம்பு கொண்டு
வித்துவத்தைக் காட்டாதீர்
சொல்லம்பு கொண்டு
சோதிடத்தைத் துளைக்காதீர்
அறியாத கலையொன்றை
அறிந்ததுபோல் தூற்றாதீர்
இறந்தகாலம் மேதைகள்
இல்லாத காலமாக
அறிவிலிபோல் எண்ணாதீர்
ஆழ்ந்து அகன்றது பிரபஞ்சம்

(கைம்மண்ணளவு)

என்றெல்லாம் அறிவுரைகள் வழங்குகின்றார்.

'கைம்மண்ணளவு' என்ற கவிதை குமுறலும் குறுங்கவியும் என்ற பிரிவில் வரும் உணர்ச்சித் துண்டுகளில் முதலாவது. மற்றுமொரு கவிதை எழுத்தாளரா? என்பது. அதில்

கருவேலங்குச்சி
பல்லுக்கு உதவும்
சொல்லுக் குதவுமோ?

என்று கேட்டு அசத்துகிறார். இப்படிப்பட்ட இடங்களிலேதான் எக்காலத்துக்குமுரிய குறமகள் கொடியுயர்த்துகிறார். மற்றுமொரு பயங்கரக் கேள்வி இது:

பெண்ணெனில் பேயும் இரங்குமாம்
ஏன்?
பேயெனில் பெண்ணும் இரங்குவாள்தானே?

பெண்ணியம் குறமகளின் கண்ணியத்துறை. மேடைப்பேச்சுகளாலும் கதைகள் கட்டுரைகள் போன்றவற்றாலும் பெண்களின் மேம்பாட்டுக்காகக் குரல் கொடுத்து வரும் மூத்த எழுத்தாளர் இவர். இத்தொகுதியிலும் பல கவிதைகள் பெண்களின், பெருமையை நிலைநாட்டுகின்றன. அவற்றுள் விடுதலைக் காதல் என்ற கவிதையின் இறுதிப் பகுதி இது:

அன்பைப் பெற்றால் அன்பைக் கொடுமே
அடியைப் பெற்றால் அடியைக் கொடுமே
அதற்கும் மசியா நிலையைக் காணின்
அடிமைத் தளையை அறுத்தெறி யும்மே!

பெண்ணிய முன்னோடி நோர்வே நாடகச் செம்மல் ஹென்றிக் இப்சன் கூட 'அடியைப் பெற்றால் அடியைக் கொடுமே' என்று சொல்லவில்லை. தமிழ் மரபை நன்கு அறிந்த குறமகள் இப்சனையும் தோற்கடித்துவிட்டார்.

'புரட்சி படைப்போம்' என்ற கவிதை பாரதியாரின் 'புதுமைப்பெண்' என்ற கவிதையைப் போல நெடுங்காலம் பேசப்படும் என்பது திண்ணம்.

இவ்விதம் இத்தொகுதியில் குறமகள் பலவிதமான பொருள்களில் தனது உணர்ச்சிகளையும் சிந்தனைகளையும் சுவைக்கக்கூடிய வகையில் சமைத்துத் தந்திருக்கின்றார். இந்தக் கவிஉணவுக்குப் பாயாசம் போல அமைந்திருக்கிறது 'மாலைசூட்டும் நாள்' என்னும் கவிதை.

அதில் வரும்,

தாயவள் விடுதலைக்கு
தலைமைதாங்கி நின்றவனை
வாயார வாழ்த்தி வாகைமாலை சூட்டுகிறாள்

என்னும் இன்பநாளை எதிர்பார்த்து, அந்நாளுக்காக இறைவனை இறைஞ்சி நானும் இந்த அணிந்துரை மாலையை இந்நூலுக்குச் சூட்டி, எனது அன்புக்குரிய நூலாசிரியரையும் வாழ்த்துகிறேன்.

வி. கந்தவனம்

என் பார்வையில்

'மத்தாப்பு' வாசித்தேன் ஓரளவு பரிச்சயம் ஏற்பட்டது, அங்கு இங்கு காண்பேன். உறவினர் ஒருவரையும் அதன் பின்னர் அவரது மகளையும் கற்பித்தேன். சிறிது பழக்கம் ஏற்பட்டது. முறுவல் ஓரிரு வார்த்தைகள். குடும்பத்துள் பெண் எடுத்தேன். உறவு வந்தது. நெருக்கம் ஏற்பட்டது. நன்கு தெரிய வாய்ப்பு கிடைத்தது. ஏறக்குறைய இப்போ 45 ஆண்டுகள் தொடர்பு. அவரது கட்டுரைகள், கவிதைகள், சிறுகதைகள், திறனாய்வுகள் இடையிடையே பத்திரிகைகளில் வரும்போதும் வாசிக்கும் பொழுதும் அவரைப்பற்றிய எடை நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டு வந்தது உண்மை என்றபோதிலும் வியக்க வைக்கும் அவரின் ஆளுமையை விளங்கிக் கொள்ள எனக்கு நீண்ட காலம் எடுத்தது என்னவோ உண்மையே. ஆனால் அவரது பன்முக ஆற்றலை இன்னும் நான் மாத்திரமல்ல மற்றையோரும் முழுமையாக அறிந்துள்ளனரா என்பதில் சந்தேகமே! அவரை ஓரளவுக்கு முழுமையாக இனம் காட்டுகிறது இந்தக் கவிதைத் தொகுதி 'மாலைசூட்டும் நாள்.'

அவரது கவிதைகளிலே ஊடாடி நிற்கும் சமுதாய உணர்வு, தமிழ் உணர்வு, தமிழீழ உணர்வு, தாய்மை உணர்வு, புதுமை உணர்வு, வீர உணர்வு என அடுக்கிக் கொண்டே போகலாம் அவரை இனம் காண உதவுகின்றன. அவற்றினைப் புலப்படுத்துகையில் வீரம், கோபம், சோகம், ஏக்கம், பெருமை, பாசம் எனப் பல்வகை உணர்வுகள் பிரதிபலிக்கின்றதைக் காண முடிகிறது.

இந்தக் கவிதைத் தொகுதியிலே உணர்ச்சி உதிர்க்கும் சொற்களால் யாப்பிலக்கணத்தோடு கூடிய மரபுசார் கவிதைகள் உள்ளன. அவற்றில் சில இசைப் பாடல்களாகவும் அமைகின்றன. மறுபுறத்திலே நவீனத்துவ கவிதைகளும், இரண்டு வகைக்கும் இடைப்பட்ட நவீனத்துவமும் மரபும் கலந்த கவிதைகளும் உள்ளன.

பொதுவாகவே கவிஞர்கள் தாம் வாழுகின்ற சூழலுடன் ஐக்கியமாகிவிடுகிறார்கள். அவர்கள் மிக விரைவாகவே உணர்ச்சி வசப் படுகின்றவர்கள். எனவே சூழலில் ஏற்படுகின்ற தாக்கம் அவர்களைப் பெரிதும் பாடாய்ப் படுத்துகிறது. இவரில் அதை அதீதமாகக் காணமுடிகிறது. உள்ளத்தில் தோன்றுவது உணர்ச்சிப் பிழம்பாகக் கொட்டப் படுகிறது.

இதோ ஈராக் போர்பற்றியது. இங்கே கோபம் அமெரிக்கனில் என்றாலும் அடி மனதில் சிங்களன் பேரில் என்பது புலனாகிறது.

இது ஒரு புறத்தெறிவாகும் (projection) உள்ளத்திலே அனன்று கொண்டிருக்கிற சீற்றம் சிங்களன் மேல் அது ஈராக்கு மக்களைப் பதம் பார்க்கும் அமெரிக்கன்மேல் தாவுகிறது.உருவத்தில் மாத்திரம்தான் அமெரிக்கன், உள்ளத்தில் நிற்பதோ சிங்களன்.

அவர்களுக்காகக் கண்ணீர் வடிக்கத் தன்னிடம் துளிகூடக் கண்ணீர் இல்லையாம்.ஏன? 'ஆத்திரம் எனது நேத்திரம் மறைக்க ஆவியாகிறது கண்ணீர்' .என்கிறார். எத்தகைய வெஞ்சினம். 'சொல்லி அடிக்கிறான் அமெரிக்கன் சொல்லாமலே அடிக்கிறான் சிங்களவன்' பாருங்கள் கோபத்தை.

கடவுள் என்னடா கடவுள், கண்
காணாத கடவுளை ஏன் அழைக்கிறாய்----
கண்கள் கனல் கக்குகின்றன
காதோரம் புடைத்து விம்முகிறது
வாய் வறழ்கிறது இரத்தம் கொதிக்கிறது

ஓ ஈராக்கியனே
　　　தோல்வி நிச்சயமடா உனக்கு
　　　பின் ஏன் தயங்கி நிற்கிறாய்
　　　அடியடா திருப்பி, தீவிரமாக
　　　அவனை அழித்து நீயும் அழியடா
　　　　'வந்தால்வா போனால் போவென'
　　　　அடியடா திருப்பி அடியடா அடியடா

Wil Haygood எனும் அமெரிக்க இலக்கிய விமர்சகர் Poets found the soil of war rich ground. The soldier fights. The poet seeks to explain what the soldier cannot.

O, the bullet could never kill
What you really are dear friend,
Nor the bayonet stab
What you really are
　　　　(Walt Whitman)

வீரர்களால் முடியாததைக் கவிஞன சொல்லால் விளக்க முனைகிறான் என்கிறார் வில் ஹேகுட். அதனையே இங்கு காண்கிறோம்.

அவருக்கு எது நியாயமாகப் படுகிறதோ, அதை அவர் துணிந்து எடுத்துக் கூறத் தயங்கியதில்லை. சில சமயங்களில் அதனால் சிலரது மனம் புண்படலாம். ஆனால் அவர் அதற்காக

வருந்தினாலும் தனது நிலைப்பாட்டிலிருந்து வழுவியதில்லை. உணர்வு அவருக்கானது. உள்ளடக்கம் அவருக்கானது. அதில் அவர் சமரசம் செய்து கொள்வதற்கில்லை.தனது எண்ணங்களுக்குப் போலிச் சாயம் கொடுப்பதில் அவருக்கு ஒப்பில்லை. பாவனையில் உள்ள வடமொழிச் சொற்கள் பற்றிய அவரது எண்ணம் என்னைப் பெரிதும் கவர்ந்தது.

வெறி ஏறி விட்டால் நீதி நியாயம் பூச்சியமே
தெறி கெட்டுச் செத்த வடமொழியின் சொற்களென
குறியேதுமின்றிக் கூறிட்டு நிராகரிப்பார்
அறிவறிந்து பயின்று வந்த தத்தனையும் புறம்போ?
சொறியாது சேர்ப்போம் தூயதமிழும் ஆக்கிடுவோம். (தமிழும் தொன்மையும்)

பாவனையில் உள்ள வடமொழிச் சொற்களைத் தொடர்ந்து உபயோகிக்கலாம் என்பது அம்மையாரின் வாதம். அது நியாயமானதும் கூட. விபுலானந்த அடிகளாரும் இதனையை தான் எடுத்தியம்புகிறார்.

தமிழ் மேலும் மேலும் புதிய சொல் வளத்தைப் பெறவேண்டும். தொழில் நுட்பம் கணினி எனும் மாபெரும் சக்தியை எம் சமூகத்துக்கும் வழங்கி விட்டமையால் நான்காவது தமிழாக வீறு கொண்டெழுந்த விஞ்ஞானத் தமிழ் கணினித் தமிழையும் உள்ளடக்க வேண்டியதாயுள்ளது. வெளியுலகில் புதிது புதிதாகத் தோன்றும் பொருள்களுக்கெல்லாம் புதுச் சொற்களைக் கண்டு பயன்படுத்த வேண்டும். அச்சொற்கள் எளியனவாய், எழுத்துச் சிக்கனம் உடையவையாய் அமைதல் சிறப்பாக, புலம்பெயரந்த நாட்டில் வாழும் தலைமுறையினருக்கு அனுகூலமானதாக இருக்கும். ஆகவே பாவனையில் உள்ளது பாவனையில் இருக்கட்டும். புதியவை தூயவையாக இருக்கலாம். புதுச் சொற்கள் பொருத்தமாக இருக்குமா என ஐயுற வேண்டியதில்லை. உருவாக்கிப் புழக்கத்தில் விட்டோமாயின் காலவேகத்தில் புது வடிவம் பெற்று நிலைத்து விடும்.

நல்ல கவிஞர்களாப் பலர் இருக்கலாம். அவர்களில் பலர் உண்மை மனிதர்களாக இருப்பதில்லை. இவர் வித்தியாசமானவர். பாடும் ஒவ்வொரு வரியும் பொய் ஏதும் கலவாத கலப்படமற்ற உள்ளதின் உணர்வினைப் பிரதிபலிப்பவை. 'காதல் செய்வீர் ஜெகத்தீரே' என அழைத்தான் பாரதி. இங்கே முதியவருக்கு அழைப்பு வருகிறது

உள்ளங்கலந்த காதலுக்கு மூப்பேது வயதேது?
காதலே வாழ்வின் முழுவடிவம்
காதலே யாரையும் இயக்கும் தெய்வம்
என் முதிய நண்பர்களே ஏனிந்த வெட்கம்?
காதல் பற்றிப் பேசுதல் குற்றமா வெட்கமா?
இளசுகளின் இளிப்பு என்செய்யும் ஆதலால்
முதியோரே காதல் செய்வீர்
கவலை வெண்டாம்.

(முதுமையிற் காதல்)

அறுபத்தியிரண்டு வயதிலே அக்காதல் எப்படி உள்ளது கேளுங்கள். அது பற்றி ஒரு காவியமே வடித்துள்ளார்கள். அங்கே ஒரு வாசகம் என்னை மிகவும் கவர்ந்தது

'காதல் வளர்த்தனரே கைகால்படாமலே'. எமது பண்பாட்டு விழுமியங்கள் பேணப்பட வேண்டும் என்பதில் எத்தனை கவனம்.

காதலுக்கும் காலமுண்டோ காதுகளில் சிந்து பாடும்
ஆம்! புன்சிரிப்புப் பொங்க நரைத்த தலை ஆட
பொன்னான கணங்களை நினைத்து மனம் மகிழும்.
காதலுணர் வுக்கடவுளுக்கோர் காத்தல்செய
ஆழமுள அத்திவாரக் கோபுரமே தேவையன்றோ.
கோபுரமே சாய்ந்தாலும் கூர்ப்பான அத்திவாரம்
காதற் சிலைகாத்து, கல்லறை போகுமட்டும்
நினைவுகளில் நீள்நின்று வாழ்ந்துவரும் தன்மையினால்
காதலுக்கும் காலமுண்டோ சொல்வீர் ஜெகத்தீரே. (கைம்மையிற் காதற் காவியம்.)

அவர் புலம் பெயர்ந்தோர்களில் மூத்த எழுத்தாளர். பெண் எழுத்தாளர் என்பதை அவர் விரும்பமாட்டார் என்பது எனக்குத் தெரியும். ஆனால் அவர் பெண்ணிய வாதி என எல்லோராலும் பேசப்படுபவர். எனவே பெண்ணின் உரிமைக் குரலாக ஏதாவது கவிதை உள்ளதா எனச் சல்லடை போட்டேன் காணமுடியவில்லை. ஏன்? அவர் சற்றே வித்தியாசமான பெண்ணியவாதி. ஆணென்ன பெண்ணென்ன? ஏன் இந்த வேறுபாடு என எண்ணுபவர். பெண் எனக்கூறி சலுகைகள் வேண்டாதவர் கிடைக்க வேண்டியது கிடைக்க வேண்டும் என நியாயம் பேசுபவர். சிறுமை கண்டு பொங்கும் சிந்தனாவாதியேயன்றி

சிறு சலுகைகளால் மனம் திருப்தி கொள்ளும் யாசகர் அல்லர். அவர் சமூகநீதி எனும் அறம் வேண்டி நிற்கும் கவிஞர். எங்கே குறையுள்ளதோ அங்கே நிஷ்டூரமாக அவர் சொல் வாள் ஓங்கி வீசும்.

ஆன்மாவுக்கு ஆண்பெண் பால் இல்லை
மதம்சில கூறும் உண்மை அதுவே.
அடக்கல், சொற்கேட்க வைத்தல்
அதிகாரம் செய்தல்,
எந்த ஆன்மா?
கணவன் ஆன்மா ஈ டேற
மனைவி நோன்பு இருப்பாளாம்
செய்யும் தவறுகளுக்குத் தாளம் போடவாம்
களவு வஞ்சனை சூது ஒத்தோட வேண்டுமாம். அவளே
பத்தினியாம்.

(ஆன்மா வெவ்வேறு)

'நீ முதலில் குளிப்பவளாக, கடைசியில் உண்பவளாக
இருப்பாயானால்.'
எல்லோருக்கும் பால்சோறு போட்டு, நீ
மட்டும் வெறும் சோறு உண்பாயானால்..
நீ ஒரு நல்ல பெண் எனலாம்
இது ஒரு வங்காளப் பெண் பாடிய நாட்டுப்புறப் பாடலின் வரிகள்.
(அமரந்தா 'எனக்குள்
பெய்யும் மழை')
பெண்கள் இவ்விதமாகவே எடை போடப் படுகின்றனர்.

ஆணுக்குப் பெண் தாழ்வெனப் பேசும் வீணரை எதிர்க்கும் அதே சமயம் பெண்ணினம் தறிகெட்டுத் தறிதலைத்தனமாய் நடப்பதை தயக்கமின்றிச் சாடுகிறார்.

சமஉரிமை கேட்கின்ற காரிகையே கேளும்
நகையாசை விட்டீரோ? நாம் என்ன செய்ய
'காந்தியே சொன்னாராம்' என்று தொடங்காதீர்
சாமத்திலும் ஏமத்திலும் நடை பயிலும் உரிமை
எப்போ வருமென்று ஏங்காதீர் நங்கையரே
கற்களை உலோகங்களை காதுமூக்கு
கழுத்து கைகாலென அங்கங்கள் தோறும்

சுமையெனவே சுமத்தி
அன்னநடை அழகு நடை கவர்ச்சி நடைகாட்டி
ஒசிந்தொசிந்து 'வா... வா...' என அழைக்கும் ஒப்பனை
பவனிவர கள்ளனொடு காமுகனும், களங்கமிலா
விடலைகளும் பின் தொடர்வார் யார்பிழை சொல்லம்மா.
(புரட்சி படைப்போம்)

ஈன்று புறந்தருதல் என்றலைக்கடனே என்றாள் ஔவை. .இதனையே இன்றைய காலத்தில் பெற்றோரியம் என்கிறோம்.பெற்றோரியத்தில் பெரும் பங்கு தாயினுடையதே சான்றோனாக்குதல் தான் தந்தையின் கடன் என்கிறார் மூதாட்டி. பெண்பிள்ளையை வளர்ப்பதில் தாய்மார்கள் பெரும் பங்கு ஏற்றனர். அங்கே காலத்தோடு ஏற்றமுறை கையாளப் படவில்லை என்பது கவிஞரின் ஆதங்கம்.

தாயென்ன புதுமை செய்தாள், தாய்மார்கள்
தவறாது செய்ததையே அவளும் செய்தாள்
பெற்றாள், வளர்த்தாள், பேருமிட்டாள்
வேறேன்ன புதமை செய்தாள்
'பெலத்துச் சிரிக்காதே அதிர நடக்காதே
உரத்துப் பேசாதே முன்னுக்கு ஓடாதே
வாசலில் நிற்காதே வாய்க்குவாய் காட்டாதே'
எதிர் மறை வினைகளால் வாட்டி எடுத்தாள்
காலத்துக்கு முன்னரேயே முதிர வைத்தாள்
இதிலென்ன புதுமை கண்டோம்
காலத்துக்கேற்ற புதுமை ஏதையா?
(பெண்மைக்கு ஏது பெருமை)

இக்கவிதையைப் பலர் புலம் பெயரந்த நாடுகளில் வாழ்கின்ற தாய்மாரகளுக்குப் பொருந்தாது என்றே முணுமுணுக்கச் செய்வார்கள். இக் கவிதைத் தொகுதியிலே ஏறக்குறைய 15 ஆண்டுகள் அவர் எழுதிய கவிதைகள் இடம் பெற்றுள்ளன.

இரண்டு குருத்துக்களைப் பறிகொடுத்தவர் அவர் ஒன்று பாலகனாய். மற்றது விடலையாய். முன்னதை நோயினுக்கும் பின்னையதை தாயினுக்கும்(நாடு) ஆழ்மனத்திலே பொதிந்து கிடந்த ஏக்கம் அருமையான கண்ணிகளாகவும் கவிதைகளாகவும் ஊற்றெடுத்துப் பாய்கின்றன.இது கொடுமை

தாயான நானும் ஈமக்கடன் செய்லையே
தனியாய் தவிக்கவிட்டு பரதேசம் போனேனே
வாயாரப் புலம்பலையே வாய்க்கரிசி போடலையே
உச்சி முகரலையே உன்நாமம் செப்பலையே
நாயாக உன் பின்னே நான் தொடர்ந்து வரயிலையே
நசிந்தொடுங்கும் நேரத்திலை நல்வார்த்தை சொல்லலையே
பேயாக ஆயினும்பின் பெயர்ந்தோடி வாரேனோ
ஈழத்தைச் சுற்றி வரும் உன் ஆவியை நான் காண்பேனோ
(பேயாகவாயினும் வருவேன்)

கல்லையும் உருகச் செய்யும் கவிதை என்பாரகளே அது இது தானோ? அங்கு கூட மகளின் தேசீயக் கனவை 'ஈழத்தைச் சுற்றி வரும் உன் ஆவி' எனக் காட்டுகிறார்.

நீ செய்த தியாகம் மகத்தான தென்று
நிலத்தோர்கள் சொல்லார்கள் - மகளே
நினைச் சேர்ந்தோரும் சொல்லார்கள் - மகளே
வீடொன்று வாட நாடொன்று காக்க
நீ செல்லலாமா மகளே - எமை
யாரின்று காப்பார் மகளே
(துயரத்தில் எல்லையில்)

துயரத்தின் எல்லையில் அவர் மாத்திரமல்ல நம்மையும் இட்டுச் சென்று விட்டார். எதற்கும் ஒரு முடிவுள்ளது.இதற்கு இல்லை. காலம் அதன் தாக்கத்தைக் குறைக்கலாம் நீக்கமுடியாது எனவே தாய், மகள் வாயிலாக பதில் பகர்கிறார்.

உரிமையை அழித்து உயிர்தனைக்காத்தால்
அருமைச் சுதந்திர தாகம் தணியுமா?
நிலையான தமிழ்ஈழ நிலை பேற்றிற்காக
நினைவிட்டு வந்தேனே அம்மா
....
நிலைமையை உணர்ந்தும் பெட்டைப் புலம்பலில்
நீயொரு தசரதன் ஆகாதே அம்மா

அவருக்கு நகைச்சுவை உணர்வு நிறையவே உள்ளது. நல்லதொரு துணுக்கினை அட்டகாசச் சிரிப்புடன் அங்கீகரிப்பது அவர்பாணி. அவரது நகைச்சுவை உணர்வே தான் பட்ட இன்னல்களிலும் அவரை எழுந்து நிற்கச் செய்துள்ளன என்றால் மிகையாகாது.

அவரது நகைச்சுவை உணர்வினை இத் தொகுதியில் காணப்படும் நையாண்டிக் கவிதைகள் மூலம் நன்கு அறிய முடிகிறது.

லோக இனம் ஒன்றேயெனும் பூங்குன் றனைவிஞ்சும்
கல, கலக்கு மிளகுடன் பப்பா சிவிதை கலக்கு
அரிசிக்குள் கல் கலக்கு ஆ நெய்யுள் எது கலக்கு?
கறுத்தக் கொழும் பா னுள்புளி மாஒட்டு
குளோனிங் கால் புதியவுடல் உண்டாக்கு
கலக்கல் நன்றா நன்றெ๋ன வைப்போம்

(விருந்தோம்பல்)

வள்ளுவனே! என்ன சொன்னாய்? சான்றோரால்
எண்ணப்படாதவன் என்றா?
நாகரீகம் தெரியாத ஆதிவாசி நீர்ஜயா
சான்றோரேயில்லாத நவயுகம் இது ஐயா
சான்றாண்மை தொலைத்துவிட்ட தனித்தேசம் நாம்ஜயா (போம் காணும் வள்ளுவரே)

அவரது கவிதை பற்றி இன்னம் பல சொல்லலாம். சொல்வதற்கும் உள்ளது. யாழ் நூல் நிலையம் எரித்தது,மாவீரர் பற்றியது , கனடா நாடும் நடப்பும், இன்னும் பல. இடம் கருதி நிறுத்துகிறேன். கவிநாயகர், ஜெகதீசன். சம்பந்தன் என ஆற்றல் மிக்கோர் பலர் எழுதியுள்ளனர் அவரது புலமை போற்றுதற்குரியது. ஒரேயொரு குறை சில கவிதைகள் எப்பவோ நூல்வடிவு பெற்றிருக்க வேண்டியவை. இப்போவாவது அவற்றினை எமக்களிக்க மனம் ஒப்புதல் தந்ததே. நன்றி.

பொ. கனகசபாபதி

நூலாசிரியர் பற்றி

தமிழீழ தலைமகள்

உலகப் புகழ்பூத்த பெண்களில் உயரமானவர்
திருமதி வள்ளிநாயகி இராமலிங்கம்

காத்திரம் மிக்க அவரது எழுத்துக்கள் கம்பீரமானவை
சுமார் ஐம்பது வருடகால தமிழீழ மக்களது
அன்றாட வாழ்வியலை அழகுறப் படம் பிடித்துக்
காட்டுபவை மனித நேயம் மிக்க அவரது படைப்புகள்

அதற்கு முன்னைய காலப்பகுதியைக்கூட காணமுடிகின்றதே
என முதியவர்களையும், அதற்குப் பின்னைய காலப்பகுதியையும்
காட்டிநிற்கின்றதே என இளையவர்களையும் மகிழ்வுடன்
பெருமைப்பட வைப்பவை அவரது இலக்கியம்

அவரது எழுத்தாற்றலைப் பார்த்தே எழுத்தாளரானவர்கள்
பலர் உலகம் பூராவும் இன்று வியாபித்துள்ளார்கள்.

அவரது பேசும் பேராற்றலால் பெரிதும் கவரப்பட்டவர்கள்
பலர் சிறந்த பேச்சாளர்களாக பார் முழுவதும் இன்று பரந்துள்ளார்கள்

பெண்ணியத்தில் சிறந்த அவரது கருத்துக்கள் பல பெண்களை
கண்ணியத்தில் சிறந்தவர்களாக்கியது.

'குறமகள்' என்ற அவரது புனைபெயருடன் பரிச்சயமற்றவர்கள்
தமிழீழத் தமிழுடனும் தமிழீழ இலக்கியத்துடனும்
பரிச்சயமற்றவர்கள்.

தமிழீழ இலக்கியத்தில் அவர் இருக்கின்றார்
அவரது இலக்கியத்தில் தமிழீழம் இருக்கின்றது.

காங்கேசன்துறையைப் பிறந்த ஊராகவும் - சின்னத்தம்பி செல்லமுத்து தம்பதியைப் பெற்றோராகவும் - தில்லைநாயகி - கோகிலா - அகிலா - விமலா - நவநீதன் ஆகியோரை இனிய உடன்பிறப்புக்களாகவும் - தபாலதிபர் இராமலிங்கத்தைக் கணவராகவும் - டாக்டர் சசிகலா - ஆசிரியர் கலைவாணி - பொறியியலாளர் துளசிராம் - வீராங்கனை குகபாலிகா ஆகியோரை பிள்ளைகளாகவும் பெற்றார்.

காங்கேசன்துறை நடேஸ்வரா - இளவாலை கன்னியர்மடம் - கோப்பாய் ஆசிரிய பயிற்சிக்கலாசாலை - கொழும்பு பல்கலைக்கழகம் - யாழ். பல்கலைக்கழகம் - ரொறண்டோ பல்கலைக்கழகம் என்பன உத்தமராகவும் வித்தகராகவும் அவருக்கு பாடம் போதித்தன.

இருபத்தியேழு வருடங்கள் ஆசிரியராகவும் எட்டு வருடங்கள் ஆசிரியப்பயிற்சிக் கலாசாலை விரிவுரையாளராகவும் உன்னதமான பணியினை ஊர்போற்றப் புரிந்தார்.

கனடாவிலும் ஆசிரியப்பணியை சிறிதுகாலம் தொடர்ந்த அவர் சமூக சேவை ஆலோசகராகவும் சிறப்புடன் மிளிர்ந்தார்.

யாழ்இலக்கிய வட்டம் முதல் கனடா எழுத்தாளர் இணையம் வரை பெண்கள் ஆய்வு வட்டம் முதல் தென்ஆசிய மகளிர் மையம் வரை அவரால் வளம்பெற்ற சமூக மேம்பாட்டு நிலையங்கள் அளப்பரியவை.

மிகப்பரவலான எண்ணிக்கையில் வாசகர்களைப் பெற்றுள்ள மிகத் தரமான எழுத்தாளர். குறமகளின் ஒவ்வொரு படைப்பும் மனித நேயத்தையும் மக்கள் மேன்மையையும் முக்கியப்படுத்தும்.

வீரத்தை முதன்மைப்படுத்தி துளசிகா எனும் புனைபெயரில் களமாடுபவரும் அவரே! அவரது இளையமகள் மேஜர் துளசியாக இயக்கத்தில் இணைந்து மண் மீட்பிற்காகத் தன்னை ஆகுதியாகக் கொண்ட பின்னர் வந்தது இப்புனைபெயர்.

இன்னும் சத்யப்பிரியா, ராசாத்திராம், பத்மினிபிரியதர்ஸனி, கோமகள், காங்கயி, சக்திக்கனல் ஆகிய புனைபெயர்களிலும் வலம் வந்தார்

மகளுக்காக என்று இல்லாது ஆரம்பமுதலே ஆயுதப் போராட்டத்தில் தீவிரமுடையவராகத் திகழ்ந்தவர் அவர். அநாதியில் இடதுசாரிக் கொள்கைகளில் நாட்டம் கொண்டிருந்தார்.

பெண்களுக்காகவும் - ஆதரவற்றவர்களுக்காகவும் சமூக சேவையும் மேடைப்பேச்சாளர்களுக்காக இலக்கிய சேவையும் அவருடன் அவரது மோறிஸ்மைனர் காருக்கும் அந்தக் காலத்தில் பெரும் பங்கிருந்தது. 9447 என்ற அக்காரின் இலக்கம்கூட மாணவரிடம் மிகுந்த அபிமானத்தையும் மரியாதையையும் பெற்றிருந்தது.

வீரகேசரியின் பாலர் வட்டாரமும் தினக்குரலின் பாலர் கழகமும் அவரது எழுத்துக்களால் அலங்காரப்பட்டிருந்தாலும் 1955ல் அவரது பொன் எழுத்துக்களுக்கு அட்சதை தூவி ஆசீர்வதித்தது ஈழகேசரி.

குறமகள் கதைகளும் - உள்ளக்கமலமடி சிறுகதைத் தொகுதியும் இதுவரை இவரால் பிரசுரமான நூல்கள். குறமகள் கதைகள் முதலாம் பதிப்பினை யாழ்.இலக்கிய வட்டம் 1990ல் வெளியிட இரண்டாம் பதிப்பு மித்ரா வெளியீடாக 2000ல் வெளிவந்தது. தற்பொழுது அவரது பொன்விழா பரிசாக வருவது மாலை சூட்டும் நாள் - கவிதைத் தொகுதி.

சிறு வயதிலேயே வயலினும், வாய்ப்பாட்டும் சிறிய அளவில் நடனமும் பயின்றதால் அவரது எழுத்துக்களும் சுருதி சுத்தமாக ஆவேச நர்த்தனம் புரிகின்றன.

'உருப்படிகள் மூன்று' என்ற அவரது சிறுகதை சங்கீதத்தை நன்கு லயிக்க வைக்க 'நிறை நிலா பூத்தது' நடனத்தில் இதயங்களை இனிமையுடன் தடம் பதித்தது.

நுணுக்கமான சிந்தனை - பரந்த மனப்பான்மை - மனிதநேயம் - மற்றவர்களை எளிதில் எடைபோடும்திறன் - எதையும் உயர்ந்த நோக்குடன் சித்தரிக்கும் பேராண்மை - சமூக மேம்பாடு என்பனவற்றை பிரதிபலிப்பது அவரது இனிய தமிழ்.

தமிழீழ இலக்கிய உலகில் கடந்த ஐம்பது 'வருட காலமாக தன்னிகரற்றுக் கோலோச்சும் பொன்மகள் அவர்.

கதை - கட்டுரை - கவிதை - நாடகம் - நாட்டியநாடகம் - சினிமா மேடை என சகலதுறைகளிலும் புகழ்பூத்த தமிழீழத்தலைமகள் அவர்.

வாரியாரால் வந்த பெயர் குறமகள்

நவீன இலக்கியத்தில் துணிச்சலான சாகசங்கள் செய்வதில் வல்லவர்.
பிறரது மனநிலையை உணர்வதில் தனித்தன்மையுடன் திகழ்பவர்.
உள்ளதை உள்ளபடியே விமர்சிக்கும் வித்தகர்.
சவால் என்பது அவருக்குப் பிடித்த மந்திர வார்த்தை.
அவரது பேராற்றலின் உயரம் பிரமிக்க வைப்பது.
தங்கமான அவர் என்றென்றும் இதயங்களில் தங்குவார்.
வருகின்ற தலைமுறையும் அவரை வாழவைக்கும்!

வாழ்க வளமுடன்

எஸ். ஜெகதீசன்

உங்களோடு சில வார்த்தைகள்......

நீண்ட இலக்கியப் பாரம்பரியங்களை உற்றுநோக்குவோமானால், எந்தமொழியோ கலாச்சாரமோ காலமாற்றங்களுக்கேற்ப அவையும் மாறுதல் அடைந்து வருகின்றன. புதிதாகத் தோன்றுவன - ஒன்று மற்றொன்றாகத் திரிவன - அழிந்து போய் மீண்டும் பிறப்பன. இத்தகைய விகாரங்கள் உலகநியதியாகி விட்டன.

சங்ககாலம் தொடக்கம் இன்றுவரை மாற்றம் மாற்றம். அப்போது அறிவியல் தொடக்கம் சகலமும் செய்யுள் நடையிலேயே இருந்தன. பின்னர் வசனநடை புகுந்ததும் கட்டுரை கதை நாவல் என விருத்திபெற செய்யுளானது ஆசிரியப்பா - வெண்பா - கலிப்பா - வஞ்சிப்பா - பாவினங்கள் - சிந்து - கண்ணிவகை - ஓசைநயம் பெறும் சந்தக்கவிகள் - இசைப்பாடல் என விருத்திபெற்றுவர பொருளிற்கூட வழிபாட்டுவகை குறைந்து சமூக சிந்தனையும் அக்கறையும் தொனிக்க இன்று புதுக்கவிதை எனும் வடிவம் பெற்று நிற்கிறது.

பாரதியாரிலிருந்து முதலாவது மாற்றம் இலக்கண வரம்பை மீறியமை, அடுத்ததாக எதுகை, மோனை, வர்ணனைகள் போன்றவற்றின் அவசியத்தை நீக்கியமை, தற்போது எழுத்தின் திசைமாறி 'தமிழ் மொழியை அகராதி அர்த்தத்தினின்றும் மாற்றி தமிழ்க் கவிதையின் சொல்லும் பொருளும் புதுப்பிக்கப்பட்டது தான் புதுக்கவிதை' எனப்படுகிறது குறும்பா, ஹைக்கூ போன்ற ஒரு உருவகரீதியான போக்கு. ஒன்றைச் சொல்லி இன்னொன்றைப் புரிய வைத்தலாக இருக்கலாம். அதாவது ஒருசொல், தான் நிற்கும் சூழலைப் பொறுத்து அர்த்தங் கொள்ளும். ஆனால் அகராதி அர்த்தம் வேறாக இருக்கும்.

தற்காலப்போக்குக்கூட, சமூகங் குறித்ததாயினும்சரி, பொதுவான கருத்துக்களால் பயனில்லை எனவும் குறிப்பிட்ட பிரச்சினை சார்ந்த நிலைப்பாடுகளையே பிரதிபலிக்க வேண்டுமெனவும் சொல்லப்படுகிறது. சமூக, பொருளாதார, அரசியற் காரணிகள் ஆழமாகச் சித்தரிக்கப்டும்போது நல்ல உயர்வான பரிணாமத்தைக் கவிதை பெறும். மாறிவரும் சூழலுக்கேற்ப தன்னைத்தானே தகவமைப்பு செய்து கொள்வதால் மங்கி மறையாமல் உத்வேகம் கொள்கிறது.

அசாதாரண அனுபவங்களை சாதாரண வார்த்தைகள் மூலம் கூறுதலும், வாழ்க்கையில் எவையெவை முக்கியமாகப் படுகிறதோ அவற்றை அனுபவமூலமாகச் சொல்லக்கூடிய திறனும் இருந்தால் படைப்பு உன்னதமாக அமையும். கவிஞர் ஒருவர் தாம் பார்க்கும் கேட்கும் விடயங்களையெல்லாம் சொல்லும் தேவை உடையவராகிறார். அதற்காகக் கவிதையில் இருப்பவர் கவிஞர்தான் எனக் கருதி அவரது வாழ்க்கையை ஆராய முயல்தல் அறியாமையாகும். தமது வாழ்விலும் இவை சம்பவித்ததோ, சம்பவிக்குமோ எனச் சிந்தித்து செயற்படுதலே தேவையானது.

'மாலை சூட்டும் நாள்' எனும் இத்தொகுதி வெளிவர வேண்டிய தேவை ஒன்று ஏற்பட்டது. ஒரு குறிப்பிட்ட தலைப்பின் கீழ் எழுதப்பட்டவையல்ல. பத்தும் பலதும் கலந்து வந்திருப்பவை. வகைப்படுத்தித் தொகைப்படுத்தித் தந்தவர் திரு. இரா சம்பந்தன். பத்து பகுதிகளில் இவை வரினும் ஒன்றுக்குள் ஒன்றாகப் பொருந்தவும் கூடும்.

எமது பிரசுரமான முதலாவது கவிதை ஆசிரியப்பாவிலான "கீரிமலை" என்பது. இது குரும்பசிட்டி மு.க. சுப்பிரமணியம் அவர்களால் நடாத்தப்பட்ட 'வெற்றிமணி' பத்திரிகையில் வெளிவந்தது. அதில் ஒருவரியை அமரர் வேந்தனார் அவர்கள் நம்மைக் காணுந்தோறும் "காப்பும் சீப்பும் கடலையும் பொரியும் எனவே அழைப்பார். பின்னர் தி. ச. வரதர் அனுசரணையில் மஹாகவியால் வெளியிடப்பட்ட 'தேன்மொழி' எனும் கவிதைச் சஞ்சிகையில் வெண்பாக்களும் ஆசிரியப்பாக்களும் வந்தன. தமிழன், ஈழநாடு, வீரகேசரி இதழ்களில் மரபுக் கவிதைகள் இடம்பெற்றன. பாடசாலைத் தேவைகளான விழாக்கள், பிரியாவிடைகள், நடனங்கள், நாடகங்கள், போட்டிகள் என்பனவற்றிற்கும் ஊரின் சுகாதாரவாரவிழா, பாராட்டு விழாக்களுக்கும் எழுதியதோடு பண்டத்தரிப்பு மகளிர், கல்லூரிக் கீதமும் எம்மால் எழுதப்பட்டது. தேவைகளுக்கு எழுதியவை தவிர பிரசுரிப்பதற்கென அதிக ஈடுபாடு காட்டவில்லை.

கனடா தேசம் கைகொடுத்தபின் தமிழர் தகவல், தமிழோசை, தாயகம், நான்காவது பரிமாணம், செந்தாமரை, இளவாலை ஜெகதீசனின் பொதிகை, நம்நாடு, உலகத்தமிழர் ஆகிய செய்தித்தாள்களுக்கு அவ்வப்போது எழுதப்படுகிறது.

CTBC வானொலியில் கலாதரனால் ஆரம்பிக்கப்பட்டு, கலாராஜனால் தொடரப்பட்ட 'வெட்டவெளியில் கொட்டிக்கிடக்கிறது' கவியரங்கத்தில் இடைக்கிடை பங்குபற்றியும், (CTR) கனேடிய தமிழ்வானொலியிலும் இதே பகுதியில் பாடல்கள் வாசிக்கப்பட்டும் எம் கவிதை நடந்தது.

ஆத்மார்த்தமான - உணர்வுபூர்வமான கவிதைகள் பண்ண வேண்டும் என நினைந்து எழுதுவதில்லை. கிடைத்த தலையங்கத்துக்கு அந்தக் கணநேரத்தில் அவசரமாக எழுதப்பட்டு மறுபரிசீலனை செய்யப்படாமலே வாசிக்கப்பட்டவை அநேகம். அதனைச் செம்மைப்படுத்துவோமெனத் தொடங்கினால் சேறள்ளிக் கொட்டுவது போலத்தான் முடிகிறது.

சமுதாயத்தில் மனதை நோகடித்தவை, அனுபவித்தவை, அவை எத்தகைய விளைவுகளை ஏற்படுத்தும், பூரண சமுதாய மாற்றம் ஏற்படுமா எனும் தாக்கங்களை பிரதிபலித்த அக்கவிதைகளை வேறொரு சீரமைப்பில் கொண்டுவர முடியாத திணறல்.

கருவுக்கும் அதன் உணர்வுக்கும் ஏற்றவாறான ஓசைநயத்தை மனதில் நிறுத்தி அந்த ஓசைக்கேற்றவாறான கவிதைகளைப் புனைய முயன்றுள்ளேன். அத்தகைய நிலையில் சில சாந்தமான போக்கில் கீர்த்தனைகள் எனப்படும் இசைப் பாடல்களையும் யாத்துள்ளேன்.

பெண்ணியப் போராளி எனப் பேர் பெற்றுக் கொண்டு பெண்களுக்காக ஒரு பகுதி வைக்கவில்லையே எனக் கேள்வி ஒன்று இருக்கின்றது. அறிவுகள் எல்லாம் ஆணுக்கும் பெண்ணுக்கும் பொதுவானவை என்பது என் அசைக்க முடியாத அபிப்பிராயம். எனவே அத்தகைய கவிதைகள் பல பகுதிகளுள்ளும் காணப்படுகின்றன.

'திருமணம் பெண்களுக்கு விடுதலை தராது' எனும் கொள்கை பல இடங்களிலும் எடுத்தாளப்படுகிறது. அது எமக்கு ஏற்புடைத்தல்ல. "கடமைகள் உரிமைகள் நோக்கி மட்டுப்படுத்தப்படுகிறது" என்பதுதான் என் முடிவு. ஆண், மனச்சாட்சியுடன் நடந்தால் அவனுக்கும் 'கால்கட்டு வாய்கட்டு' த் தான். ஆனால் அரசியலில் பெண்ணின் உடல் பழிவாங்கப்படுகிறது. மானபங்கப்படுகிறது. இதனை எதிர்த்தும், 'உடற்காயங்களே' எனக் கூறியும் குரல் கொடுக்கிறேன். தீவிரமும் வலுவுங்கொண்ட இத்தகைய கவிதைகள் இன்னும் உள.

ஆங்கிலக் கவிதைகள் லான்ஸ்டவுண் பகவான் ஸ்ரீ சத்யசாயி நிறுவனத்தின் சார்பாக பல்லினத்தவருக்குமான பாட்டுப் போட்டிகளுக்கு எம் இளைஞர் பாடுவதற்காக எழுதப்பட்டவை.

மொழிமாற்றுக் கவிதை நமக்குப் பிடித்தவை. கருத்தைக் களவு செய்ய விருப்பமின்றி அக்கவிஞர்களுக்குக் கொடுக்கும் கௌரவமாக மாற்றப்பட்டிருக்கின்றன.

தாயும் சேயும் பகுதி மாவீரர் துளசியை நினைவுகூரும் வண்ணம் வருடாவருடம் எழுதப்பட்டவையும் சில மாவீரர் அனைவருக்குமே பொதுவானதாகவும், சோகத்திலிருந்து முளைக்கும் வீரத்தைப் பிரதிபலித்துப் பெற்றோர் ஆறுதல் பெறத்தக்கதாகவும் இயற்றப்பட்டவை. தாயும் சேயும் பகுதிக்கு பிள்ளைகளை வளர்த்த எனது தாயாரும், என் இளையமகள் றோசாவும் காணப்படுகின்றனர்.

மாலை சூடும்நாள், மாலை சூட்டும் நாள் என இரு பாடல்கள் உள. முதலாவது மேஜர் துளசியின் கல்லறைக்கு மாலைசூடும் நாள் எமக்கு வாராதோ என்பது. அடுத்தது தமிழீழத் தாயகத்துக்கு மாலை சூட்டும் நாள் வந்துவிட்டது என்பது.

இக்கவிதைகள் ஆயிரம் வருஷம் நின்றுநிலைக்க வேண்டுமென ஆசைப்பட நானென்ன அற்புதக் கவிஞரா? அன்றாடம் காணும் பிரச்சனைக்கு விடிவு காணும் உணர்வைத் தரமுடியும். ஆனால் இவை பொய்கலவாத - முன்னுக்குப்பின் முரண்படாத உண்மைகள். சில மரபுக்கவிதைகளில்கூட ஓரிரு இலக்கணப் பிழை நேர்ந்தும் வேறு சொற்கள் அந்தக் கனதியைத் தராதெனக் கண்டால் அது அப்படியே விடப்பட்டிருக்கிறது.

கவிதைத் தொகுதி வெளிவர உதவி செய்தோர் பலர். கவிதைகளிற் பல வானொலிக்காக எழுதப்பட்டவை. எனவே இரு வானொலிப் பொறுப்பாளர்களுக்கும், பிரசுரம் செய்த பத்திரிகைகளுக்கும் நன்றி.

ஆலோசனைகள் வழங்கியும், கட்டுரைகள் தந்தும் ஆதரித்த நண்பர் கவிஞர் கந்தவனம், உறவினர் அதிபர் பொ. கனகசபாபதி, அன்புக்குரிய இரா. சம்பந்தன், மாணவன் இளவாலை S. ஜெகதீஸன் ஆதியோருக்கும் எனது மனப்பூர்வமான நன்றி.

நூலை வெளியிட ஆதரவு தந்தும், பொறுப்பேற்று நூலுருவம் ஆக்க உதவி செய்தும், பதிப்புரை வழங்கியும் அனுசரணையாக இருந்த சகோதரர் திரு எஸ். திருச்செல்வம் அவர்களுக்கும்

உளமார்ந்த நன்றி.

நூலைத் திருத்தமுற அச்சமைப்புச் செய்துதந்த திரு. மா. கனகசபாபதி அவர்களுக்கும் அட்டை வரைந்து பதிப்பித்து வெளியிட்டுவைத்த அகிலன் அசோஷியேற்ஸ் நிறுவனத்துக்கும் இதயம் கனிந்த நன்றி.

சொல்லுவதென்பது யார்க்கும் எளிது. சொன்னபடி செய்தல் கஷ்டமானது. எனவே கவிதை பற்றிக் கொள்கை ரீதியாக துறைபோக அறிந்திருந்தாலும், படைப்பில் அவையெல்லாம் கையாளப்பட்டிருக்குமோ எனும் ஆதங்கம் உண்டு. எம் இனிய வாசகர்களே! சரியான விமர்சகர்களும் தீர்வு கூறக்கூடியவர்களும் நீங்களே.

நன்றி வணக்கம்

- குறமகள் -

20 WADE AVENUE
UNIT 516
TORONTO

திருப்பதி
கல்லூரி வீதி
காங்கேசன்துறை

மாலை சூட்டும் நாள்

கவிதைத் தொகுதி

குறமகள்

வள்ளிநாயகி இராமலிங்கம்

அகிலன் அசோஷியேற்ஸ் வெளியீடு

2005

ISBN: 0-9685364-3-3

நூல்: மாலை சூட்டும் நாள்
கவிதைத் தொகுதி

ஆசிரியர்: குறமகள்
வள்ளிநாயகி இராமலிங்கம்

முதற்பதிப்பு: மே, 2005
குறமகள் எழுத்துலகப் பொன்விழா வெளியீடு

பக்கங்கள்: 181

அச்சு வடிவமைப்பு: மா. கனகசபாபதி

அச்சுப் பதிப்பு: அகிலன் அசோஷியேற்ஸ்

வெளியீடு: அகிலன் அசோஷியேற்ஸ்
Ahilan Associates
P.O.Box - 3, Station - F
Toronto, Ontario. M4Y 2L4
416-920-9250
ahilanassociates@sympatico.ca

சமர்ப்பணம்

காங்கேசன்துறை நடேஸ்வராக் கல்லூரித் தமிழ்ப் பிரிவின்
தலைமையாசிரியரும்,
காங்கேசன்துறை பட்டினசபை அங்கத்தவராகவிளங்கியவரும்,
எமது மதிப்புக்குரிய ஆசிரியரும்,
சிறுவயதில் எனைத்தூக்கி வளர்த்தவர்களுள் ஒருவரும்,
எனது சித்தப்பாவுமாகிய
அமரர்

திரு. மு. அ. குருநாதபிள்ளை


அவர்களுக்கு
இந்நூலைப் படையல் செய்கிறேன்.

சித்தப்பா,

சிறுவயதில் பாலர் பாடல்களைச் சொல்லித்தந்தீர்கள். ஐந்தாம் வகுப்பில் பாரதியாரின் 'பாஞ்சாலி சபதத்தை' அபிநயத்தோடும், பாவத்தோடும் குரல் ஏற்றத் தாழ்வோடும் கற்பித்து; வரும் பிரமுகர்கள், பரிசோதகர் முன்னிலையில் செய்வித்தீர்கள். புவியியல் பாடத்தைக் கற்பித்ததோடு, கடற்கரையில் நின்று வானவெளியின் நட்சத்திரக் கூட்டங்களைக் குறித்துக்காட்டி கிரகங்களையும் தாரகைகளையும் இராசிகளையும் அறிமுகம் செய்துவைத்தீர்கள். சேகரித்து வைத்திருந்த நூல்களை வாசிக்கும் அனுமதியையும் தந்தீர்கள். வாழ்ந்த ஐம்பது வருட காலத்தில் ஒரு முன்னுதாரண ஆசிரியராக விளங்கி எமக்கும் அத் தொழிலின் மகிமையை அறியவைத்தீர்கள். இளமையிற் கல்வி சிலையெழுத்து. அதனால் தங்களை நன்றியுடன் நினைவு கூருவேன். கவிதையின் அழகை உணரவைத்த தங்களுக்கு இந்நூலை மனமகிழ்ச்சியுடன் சமர்ப்பிக்கின்றேன். உறவினர் என்பதற்காக அல்ல, மதிப்புக்குரிய ஆசிரியருக்கான காணிக்கையாக ஏற்றுக் கொள்ளுங்கள்.

அன்பு
'இராசாத்தி'

பதிப்புரை
அணிந்துரை
என் பார்வையில்
நூலாசிரியரைப் பற்றி
உங்களோடு சில வார்த்தைகள்

தெய்வமும் குருவும்

குருநாதன் எம் குலதெய்வம்
காத்தருள் தாயே
விஜயதசமி வெண்பாக்கள்
மாவை முருகன்
உள்ளமே கோயில்
திருவருளே குருவடிவாய்
அ. தஞ்சம்
ஆ. At the lotus Feet
இ. His Master's Voice
விபுலானந்தம்
சமரசம் காண்போம்



தமிழும் தொன்மையும்

தமிழும் வாழ்வும்
மலரும் தமிழ்
ஔவைத் தமிழ்
மேன்மை பெற்று வாழ்வதற்கே!!
பொங்கு தமிழ் ஏன்?
பொங்குதமிழ் காண வாரீர்
தமிழ் எந்தன் தந்தை என்பேன்!



நாடும் நடப்பும்



போரும் களமும்



மேடையும் கவியும்

ஊருக்கு நான் போவேனா?
பொங்குமாம் கடல்
நனவாகிய கனவுகள்
ஊடகவியலாளர் படுகொலை
களம் பாடிய மாவீரன்
திலீபன் - ஈழத் தமிழ்த் தியாகி
பெண்கள் உலகத்தின் கண்களாம் கேட்டீரோ!
வாழ்க்கையின் ஒப்பந்தங்கள்
வருமோர் நாள்
பாசமும் நேசமும்
அமரர் ஜூனியர் ஜீ. ஜீ





தாயும் சேயும்


கடைசிக் கையசைப்பு
துயரத்தின் எல்லையில்
தலையாய கடன் எது?
பெரிய மடுப் போர் நினைவு
இயற்பகை முடிப்போம்
வெஞ்சினம்
எழுந்திரம்மா
பேயாகவாயினும் வருவேன்!
கண்ணே!,
வீராங்கனைகள்
மாவீரர்

திடமாய் போரிடு
மாலை சூடும் நாள்



கவியும் காலமும்


முதற்பணி
வன்னி வெள்ளம்
மறைந்த கனவுகள்
ஐந்து பரிமாணங்களில் பார்த்த நிலவுகள்
ஞான விழிப்பு
இயற்கையின் மடியில்
உன் தாயே உனையடித்தால்........ ஆழிப்பேரலை
காதலுக்கும் காலம் உண்டோ
பிரபஞ்ச ரகசியம்



உளமும் உடலும்

ஒரு பெண் எழுத்தாளர் முடங்குகிறார்
அது ஒரு பொற் கூடு
சிந்தனைக் குழப்பம்
யாதும் கூற வல்லீரோ
புரட்சி படைப்போம்
தீர்வு திடமானது
புலம்பெயர் தமிழரின் உள்ளொளி
அவள் (மொழிமாற்றம்)
தாய் (மொழி மாற்றம்)
கண் பேசும் ஆவல் (மொழிமாற்றம்)
கண்டுபிடி

மீளா அடிமை
மகளிர் மாத்திரம்.



குமுறலும் குறுங்கவியும்

கைம்மண்ணளவு
காதல்
முதுகு சொறிதல்
நட்பு
தவளை
கோணேஸ்வரி
எழுத்தாளரா?
கதவம் திறவாய்
வெட்டுண்டு போ!
யார் பேய்?
ஆன்மா வெவ்வேறு.
அப்போதைக்கு இப்போது.
கோபம்.
நளாயினி.
மாவீரர்.



தமிழ் ஈழமும் மாலையும்

பிரபாகரன் வாழ்த்து
மாலைசூட்டும் நாள்

பதிப்புரை

ஈழத்தில் மறுமலர்ச்சிக் காலத்தையடுத்து உருவான எழுத்தாளர்களில் முதன்மையானவராகத் திகழ்பவர் குறமகள் (வள்ளிநாயகி இராமலிங்கம்) அவர்கள். கவிதை, சிறுகதை, தொடர்கதை, நாவல், கட்டுரை, விமர்சனம் என்று எழுத்தின் அறுசுவைப் பரிமாணங்களிலும் தமது எழுதுகோலைக் கடந்த அரைநூற்றாண்டாகத் தவழ விட்டு, அதில் வேரோடிய பெருமை இவருக்குண்டு. இதனால், குறமகள் அவர்கள் "மூத்த எழுத்தாளர்" என்னும் சீரினைப் பெற்று நிற்கின்றார்.

இலங்கையின் சகல தமிழ்ப் பத்திரிகைகளிலும் இவரது படைப்புகள் நிறையவே பிரசுரமாகியுள்ளன. தமிழகச் சஞ்சிகைகளில் அவ்வப்போது "ஆனைப் பிரசவம்" செய்த குறமகளின் கதைகள் முத்திரை பதித்தவை. சும்மா எழுத வேண்டும் என்ற மன அரிப்புக்காக எழுதாமல் நல்ல கருக்களுக்கு உருக்கொடுத்து அவைகளைப் பிரசவித்ததால், இவரது எழுத்துகள் எப்போதும் ஊன்றிய கவனத்தைப் பெற்று வந்துள்ளன.

ஐம்பது ஆண்டுகளாகத் தாம் எழுதியவைகளை இவர் பக்குவமாகச் சேகரித்து வைத்திருந்திருப்பாராயின், ஆகக்குறைந்தது பத்து நூல்களாவது இதுவரை வெளிவந்திருக்கும். காலவோட்டத்தில் ஆங்காங்கே வெட்டு நறுக்குகள் தவறிப்போனதால், கைவசமிருந்த வைகளைச் சேர்த்து இரு சிறுகதைத் தொகுதிகளை (குறமகள் கதைகள், உள்ளக்கமலமடி) மட்டுமே இவரால் இதுவரை வெளிக்கொணர முடிந்தது.

"மாலை சூட்டும் நாள்" குறமகளின் முதலாவது கவிதைத் தொகுதி. ஒவ்வொரு கவிதையையும் உருவத்திலும் உள்ளடக்கத்திலும் அதன் பண்புகள் சிதையாது கோர்த்து துளசி மாலையாகத் தந்துள்ளார். கவி வடிப்பில் இவர் பெற்ற முறையான பயிற்சியின் முதிர்ச்சியை இங்கு தரிசிக்க முடிகின்றது. இழப்புகள் தரும் சோகங்களின்

ஊடாக வரும் பேறுகள் சாகாவரம் பெறுபவை என்னும் உண்மையை இவைகளைப் படிக்கையில் உணரலாம். இக்கவிதை நூல் முற்றத்து ரோஜாவாகத் திகழ்ந்து என்றும் சுகந்தம் பரப்பும் என்பது திண்ணம்.

ஐம்பதாண்டுகளுக்கு முன்னர் சிறுகதையுடன் இலக்கிய உலகில் பாதம் பதித்த இவர், இவ்வாண்டில் தமது இலக்கிய வாழ்வின் ஐம்பதாண்டுகளைப் பூர்த்தி செய்து பொன்விழாக் காண்கின்றார். எனவே, “குறமகள் எழுத்துலகின் பொன்மகள்” என்று அழைப்பது பொருத்தமானது. இப்பெருமை பெறும் குறமகளை வாழ்த்தி வரவேற்க “தமிழர் தகவல்” எடுக்கும் விழாவில் இந்நூல் அரங்கேற்றம் காண்கின்றது.

இவ்வுலகுக்கு மே மாதத்தில் “வந்து-போன” அகிலனின் நினைவாக உருவான அகிலன் அசோஷியேற்ஸ் வெளியீடாக “மாலை சூட்டும் நாள்” கவிதைத் தொகுப்பை மே மாதத்தில் வெளியிடுவதில் இதயம் ஈரமடைகின்றது. இந்த உரிமையைத் தந்தமைக்காக குறமகள் அவர்களுக்கு நன்றிகள் கூறி, இக் கவிதை மாலையை தமிழ்த் தேசியத்தின் வாயிற் கதவுகளில் சூட்டுகின்றோம்!

திரு எஸ். திருச்செல்வம்
பிரதம ஆசிரியர் - தமிழர் தகவல்
நிறைவேற்று இயக்குனர் - அகிலன் அசோஷியேற்ஸ்

அணிந்துரை

'குறமகள்' என்று எழுத்துலகில் நன்கு அறியப்பெற்ற திருமதி வள்ளிநாயகி இராமலிங்கம் அவர்களது கவிதைகள் 'மாலை சூட்டும் நாள்' என்ற மகுடத்தில் அச்சுவாகனம் ஏறியுள்ளன.

சிறுகதை எழுத்தாளராக, நெடுங்கதை ஆசிரியராகப் பெயர்பெற்ற குறமகள் அவ்வப்போது கவிதைகளும் பாடி வருவதைத் தமிழ் உலகம் நன்கு அறியும். ஈழத்தில் அவரது படைப்புகள் பல மறைந்துவிட்டன. இத்தொகுதியில் உள்ளவை எல்லாமே கனடிய மண்ணிற் பிறந்தவை. பல பத்திரிகைகளில் வெளியானவை; மேடைகளிற் படிக்கப்பட்டவை.

கவிதை என்பது உள்ளத்திற் கருக்கொண்டு கனத்து எழும் அனுபவ உணர்வுக்கு, படிப்பவர்களின் மனத்தில் ஏதாவது ஒருவகையில் பாதிப்பை ஏற்படுத்தக் கூடிய முறையில் அழகானதும் அளவானதுமான சொற்களால், கற்பனையும் விற்பன்னமும் கலந்து கட்டப்பெறும் ஓர் இலக்கிய வடிவம்.

அனுபவ உணர்வு கவிதைக்கு மிக அவசியம். என்னதான் கற்பனை வளம் இருந்தாலும் ஒரு விடயம் குறித்த அனுபவம் உள்ளவர் அதுபற்றிப் பாடுவதற்கும் அனுபவம் இல்லாதவர் பாடுவதற்கும் நிறையவே வேறுபாடுள்ளது.

இந்த இடத்தில் ஒரு கேள்வி எழுப்பப்படலாம். சுனாமி பற்றிப் பாடுவதற்கு அதன் தாக்கத்துக்கு உட்படாத கனடியக் கவிஞருக்குத் தகுதி இல்லையா? அல்லது இறந்தகாலச் சம்பவம் ஒன்றினைப்பற்றி நிகழ்காலக் கவிஞர் பாடக்கூடாதா என்று கேட்கப்படலாம். அனுபவம் நேரடியாகவும் இருக்கலாம் அல்லாமலும் இருக்கலாம். சுனாமியின் தாக்கங்களைப் பற்றிப் பத்திரிகைகளிற் படித்துக் கவலை கொள்வதும் தொலைக்காட்சியிற் பார்த்துக் கண்ணீர் விடுவதும் எல்லாம் அனுபவங்கள்தாம். வரலாறுகளைப் படிக்கையில் ஏதாவது ஒரு சம்பவம் உள்ளத்தைத் தொட்டுவிட்டால் - உள்ளம் அதனால் இன்புற்றாலோ துன்புற்றாலோ அதுவும் அனுபவந்தான்.

கவிதைக்கு உள்ளத்தின் ஈடுபாடே முக்கியம். உடல் அனுபவங்களால் உள்ளம் உடனடியாகவே பாதிக்கப்படும் என்பது உண்மைதான். எனினும் கவிதை, உள்ளத்தில் உள்ளது - உள்ளத்திற் பிறக்கின்றது என்பதுதான் உண்மை.

இந்தத் தொகுதியும் அதனையே எடுத்துக்காட்டுகின்றது. குறமகளின் உள்ளம் கவிதை உள்ளம். பாடுதற்கு எடுத்துக்கொண்ட எல்லாப் பொருள்களிலுமே அவரது உள்ளத்தைக் காணமுடிகிறது.

குருநாதன் சந்நிதி காணேனோ
கும்பிட்டுக் கும்பிட்டு வாழேனோ
இராணுவத் தொலைப்பு எப்போதோ
இடித்து விரட்டுவது எந்நாளோ

என்று குருநாதனைப்பற்றிப் பாடுகையிலும்,

பஞ்சுப் பொதிபோல் பிஞ்சுக் குழந்தையை
நெஞ்சோ டணைத்துத் தோள்மீது சார்த்தி
நிலாவைக் காட்டி நிலாப்பாட்டுப்பாடி
ஒருபிடி சோறு ஊட்ட முயன்று
தூங்க வைக்க முடிந்ததே தவிர.....

என்று நிலாவைப்பற்றிப் பாடுகையிலும் அவரது உள்ளத்து உணர்வு படிப்பவர் உள்ளங்களையும் ஊடுருவி நிற்கின்றது.

குறமகள் தமிழ் கற்றவர்; தமிழ் மரபை அறிந்தவர். அதனால் வெண்பா, விருத்தம், அகவல் போன்ற மரபு வடிவங்களிலும் பாரதியார் பாணியில் வசன கவிதைகளிலும் தமது உணர்வுகளுக்கு உருவங் கொடுத்திருக்கிறார்.

விஜயதசமி வெண்பாக்கள், மாவை முருகன் வெண்பாக்கள், புலம்பெயர் தமிழரின் உள்ளொளி வெண்பாக்கள், தேசியத் தலைவரின் பொன்விழா வாழ்த்து என்பன குறமகளின் கவிதை இலக்கணப் பயிற்சிக்கு நல்ல உதாரணங்களாக அமைகின்றன.

ஆங்கிலத்திலும் அவர் கவிபுனைய வல்லவர் என்பதையும் இசைத்துப்

பாடத்தக்க முறையில் பல்லவி, அனுபல்லவி, சரணம் ஆகிய அமைப்புகளிலும் பாடல்கள் இயற்ற வல்லவர் என்பதையும் இத்தொகுதி காட்டுகின்றது. ஆங்கிலத்திலிருந்தும் மூன்று கவிதைகளைத் தமிழாக்கித் தந்திருக்கின்றார். அவரது மொழிபெயர்ப்புத் திறமைக்கு அவை முத்திரை குத்துகின்றன.

ஜீன் லிற்றிள் என்பாரின் SHE என்ற கவிதையை 'அவள்' என்ற தலைப்பில் மொழிமாற்றம் செய்திருக்கின்றார். மூலக் கவிதையின் முடிவுப் பகுதி வரிகள் இவை:

Let her waste time,
Hand her long hours of wonder
Have faith in her sense of derection
and set her free
And do not stand
waving goodbyes from the door forever
Put a light on the window
but do not sit up
If she had not gone,
She would have grown away
In time, in her own good time
She will come home.

இவற்றை இவ்விதம் தமிழாக்கியிருக்கிறார் குறமகள்:

அவள் தன் நேரத்தை வீணாக்கட்டும்
அவளது அதிசயங்களுள் மூழ்கித் திளைக்க
நீண்ட நேரங்கொடு
அவளுடைய போக்கில் நம்பிக்கை வை
அத்துடன் அவளைச் சுதந்திரமாக
நடமாட விடு.
ஒருநாளும் வாசலில் நின்று கையசைத்து
விடை கொடாதே!
யன்னலில் ஒரு ஒளிவிளக்கை ஏற்றிவை
ஆனால் காத்திருக்காதே!

அவள் போயிருக்காவிட்டால்
நேரத்தோடு பக்குவப்பட்டிருப்பாள் – ஆனால்
அவளுக்கேற்ற நல்ல நேரம் வரும்போது
அவள் வீட்டுக்கு வருவாள்.

மொழிபெயர்ப்புத்திறன் ஒருபுறம் இருக்க, இத்தமிழாக்கக் கவிதைகள், கவிதையில் அவருக்குள்ள ஈடுபாட்டையும் எடுத்துரைக்கின்றன. பத்திரிகைகளிலோ சஞ்சிகைகளிலோ கவிதைகள் வந்தால் அவற்றைப் படித்துப் பார்க்கக்கூட மனமில்லாத பலர் எம்மத்தியில் கவிஞர்களாகப் பவனி வருகையில், குறமகள் தமிழ்க் கவிதைகள் மட்டுமல்லாது ஆங்கிலக் கவிதைகளையும் சுவைத்து வருவது அவரது கவிதைத் தாகத்தின் இயல்பான தொழிற்பாட்டைச் சுட்டிநிற்கின்றது.

பொருளடக்கத்தில் பாலருக்கென்று தனிப்பிரிவு இல்லாது போனாலும் உள்ளே பாலர் பாடல்களும் இடம்பெற்றுள்ளன. பக்திப் பாடல்களும் அணி செய்கின்றன. நையாண்டிக் கவிதைகள் என்ற குறிப்புடன் நகைச்சுவைக் கவிதைகளையும் படைத்திருக்கின்றார்.

இவை எல்லாவற்றுக்கும் மேலாக இத்தொகுதியில் விஞ்சி நிற்பது தாயக விடுதலை உணர்வே! குறமகள் தமிழீழ விடுதலைப்புலிகள் குடும்பத்தைச் சேர்ந்தவர். பெற்ற மகள் றோசாவை மண்ணுக்காகத் தியாகஞ் செய்த தீவிரத் தன்மானத் தாய். மகளை இழந்த சோகம் 'கடைசிக் கையசைப்பு' என்ற கவிதையிற் கண்ணீர் சொரிகிறது.

'இயற்பகை முடிப்போம்' என்ற கவிதையில் மிக அழகாகவே அவரது நாட்டுப்பற்று கொலுக்கொண்டுள்ளது.

மன்னவர் தவறி னாலும்
மதித்திடாப் பயிர்ப்புக் கொண்ட
மங்கையர் வாழும் ஈழம்
மறப்பரோ மாற்றார் தாமும்
தென்னவர் அறிதல் வேண்டும்
தெருட்டினால் பணிய மாட்டோம்
தெவ்வரின் உயிரை யுண்ண
தெவிட்டுமோ தமிழர்க் கம்மா

சின்னவ ரென்று எண்ணல்
சிறுமதி உடையோர் புத்தி
சின்னதாம் கடுகின் காரம்
சிறியவர் அறிவரோ சொல்
இன்னுயிர் அழிக்க எண்ணும்
இறுமாப்பு அழியும் வண்ணம்
இறுகிய பூட்டை உடைத்து
இயற்பகை முடிப்போம் வாரீர்

கோட்டைப்போரும் சமாதானமும்' என்ற கவிதையில் இந்த மண்மானத் தாயின் விடுதலை வேட்கை இப்படி வீசுகிறது குண்டுகளை:

திறல் தந்த கோட்டைப்போர் மறக்கப் போமோ
தீண்டரிய சமாதானம் எனும்பெய ரால்நம்
சிறகுகளைக் கட்டி வைத்து, விரித்தார் தமதை
பேடிகளா! கோழைகளா! கேட்பாரிலையா?

விடுதலைக்காதல், முதுமையிற் காதல், அழியாக் காதல், கைம்மையிற் காதல் என்று காதலைப் பல கோணங்களிற் பார்த்து மகிழ்கிறார்.

கைம்மையிற் காதலை ஒரு கதையாகவே நெடும்பாடலில் தருகின்றார். இவர் சிறுகதை எழுத்தாளரல்லவா? குருநாதன் நம் குலதெய்வம், பாகு இறுகிப் பாறையாயிற்று, ஞானவிழிப்பு போன்றவை நல்ல கதைகள் - கவித்துவ வரிகளில். பிறகவிதைகள் பலவற்றிலும் குறமகளின் கதை சொல்லும் பாணி பாயாசம் காய்ச்சுகிறது.

பல கவிதைகள் சரித்திரப் பதிவுகளாகவும் அமைக்கப் பட்டுள்ளன. நுண்மதி இழந்த நூலக எரிப்பு, ஊடகவியலாளர் படுகொலை, திலீபன் - ஈழத்தமிழ் தியாகி போன்றவை நல்ல உதாரணங்கள்.

குறமகள் சில கவிதைகளில் ஆய்வுகளும் நடத்தியிருக்கின்றார். எம்மைக் கவர்ந்த இரு விபுலாநந்த அமிர்தம், பொங்கு தமிழ் ஏன்?, தமிழ் எந்தன் தந்தை என்பேன்!, வாழ்க்கையில் ஒப்பந்தங்கள் போன்ற கவிதைகள் அவரது அறிவாற்றலுக்கும் சிந்தனைத் திறத்துக்கும் விளக்கேற்றுகின்றன.

இந்நெடுங் கவிதைகளும் பிறவற்றுட் பலவும் மக்களுக்குகந்த நல்ல அறிவுரைகளைக் கொண்டுள்ளமையையும் குறிப்பிடல் வேண்டும். குறமகள் தொழிலால் ஓர் ஆசிரியர்; விரிவுரையாளர். குருத்தானத்திலிருந்து மாணவர்களுக்குப் பாடம்புகட்டுவது போன்று,

உள்ளப் புணர்ச்சியே உண்மைக் காதல்
உடலின் வெறியே உரைக்கும் மோகம்

(எம்மைக்கவர்ந்த இரு விபுலாநந்த அமிர்தம்)

அன்பின் வழியே உள்ளொளி துலங்கும்
சோதிதுலங்க ஞானம் பிறக்கும்
ஞானம் முதிரின் சத்யயுகம் வருமே
(சமரசம் காண்போம்)

பாரெல்லாம் போற்றும் மண்பாடு கலாச்சாரம்
பௌத்திரமாகப் போற்றி வாழ்ந்தால்
சீரழிவு இல்லை சிறுப்பினை இல்லைத்
திசைகெட்டுப் போவதில்லை
(பொங்கு தமிழ் ஏன்-1)

வில்லம்பு கொண்டு
வித்துவத்தைக் காட்டாதீர்
சொல்லம்பு கொண்டு
சோதிடத்தைத் துளைக்காதீர்
அறியாத கலையொன்றை
அறிந்ததுபோல் தூற்றாதீர்
இறந்தகாலம் மேதைகள்
இல்லாத காலமாக
அறிவிலிபோல் எண்ணாதீர்
ஆழ்ந்து அகன்றது பிரபஞ்சம்

(கைம்மண்ணளவு)

என்றெல்லாம் அறிவுரைகள் வழங்குகின்றார்.

'கைம்மண்ணளவு' என்ற கவிதை குமுறலும் குறுங்கவியும் என்ற பிரிவில் வரும் உணர்ச்சித் துண்டுகளில் முதலாவது. மற்றுமொரு கவிதை எழுத்தாளரா? என்பது. அதில்

கருவேலங்குச்சி
பல்லுக்கு உதவும்
சொல்லுக் குதவுமோ?

என்று கேட்டு அசத்துகிறார். இப்படிப்பட்ட இடங்களிலேதான் எக்காலத்துக்குமுரிய குறமகள் கொடியுயர்த்துகிறார். மற்றுமொரு பயங்கரக் கேள்வி இது:

பெண்ணெனில் பேயும் இரங்குமாம்
ஏன்?
பேயெனில் பெண்ணும் இரங்குவாள்தானே?

பெண்ணியம் குறமகளின் கண்ணியத்துறை. மேடைப்பேச்சுகளாலும் கதைகள் கட்டுரைகள் போன்றவற்றாலும் பெண்களின் மேம்பாட்டுக்காகக் குரல் கொடுத்து வரும் மூத்த எழுத்தாளர் இவர். இத்தொகுதியிலும் பல கவிதைகள் பெண்களின், பெருமையை நிலைநாட்டுகின்றன. அவற்றுள் விடுதலைக் காதல் என்ற கவிதையின் இறுதிப் பகுதி இது:

அன்பைப் பெற்றால் அன்பைக் கொடுமே
அடியைப் பெற்றால் அடியைக் கொடுமே
அதற்கும் மசியா நிலையைக் காணின்
அடிமைத் தளையை அறுத்தெறி யும்மே!

பெண்ணிய முன்னோடி நோர்வே நாடகச் செம்மல் ஹென்றிக் இப்சன் கூட 'அடியைப் பெற்றால் அடியைக் கொடுமே' என்று சொல்லவில்லை. தமிழ் மரபை நன்கு அறிந்த குறமகள் இப்சனையும் தோற்கடித்துவிட்டார்.

'புரட்சி படைப்போம்' என்ற கவிதை பாரதியாரின் 'புதுமைப்பெண்' என்ற கவிதையைப் போல நெடுங்காலம் பேசப்படும் என்பது திண்ணம்.

இவ்விதம் இத்தொகுதியில் குறமகள் பலவிதமான பொருள்களில் தனது உணர்ச்சிகளையும் சிந்தனைகளையும் சுவைக்கக்கூடிய வகையில் சமைத்துத் தந்திருக்கின்றார். இந்தக் கவிஉணவுக்குப் பாயாசம் போல அமைந்திருக்கிறது ‘மாலைசூட்டும் நாள்’ என்னும் கவிதை.
அதில் வரும்,

தாயவள் விடுதலைக்கு
தலைமைதாங்கி நின்றவனை
வாயார வாழ்த்தி வாகைமாலை சூட்டுகிறாள்

என்னும் இன்பநாளை எதிர்பார்த்து, அந்நாளுக்காக இறைவனை இறைஞ்சி நானும் இந்த அணிந்துரை மாலையை இந்நூலுக்குச் சூட்டி, எனது அன்புக்குரிய நூலாசிரியரையும் வாழ்த்துகிறேன்.

வி.

கந்தவனம்

என் பார்வையில்

'மத்தாப்பு' வாசித்தேன் ஓரளவு பரிச்சயம் ஏற்பட்டது, அங்கு இங்கு காண்பேன். உறவினர் ஒருவரையும் அதன் பின்னர் அவரது மகளையும் கற்பித்தேன். சிறிது பழக்கம் ஏற்பட்டது. முறுவல் ஓரிரு வார்த்தைகள். குடும்பத்துள் பெண் எடுத்தேன். உறவு வந்தது. நெருக்கம் ஏற்பட்டது. நன்கு தெரிய வாய்ப்பு கிடைத்தது. ஏறக்குறைய இப்போ 45 ஆண்டுகள் தொடர்பு. அவரது கட்டுரைகள், கவிதைகள், சிறுகதைகள், திறனாய்வுகள் இடையிடையே பத்திரிகைகளில் வரும்போதும் வாசிக்கும் பொழுதும் அவரைப்பற்றிய எடை நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டு வந்தது உண்மை என்றபோதிலும் வியக்க வைக்கும் அவரின் ஆளுமையை விளங்கிக் கொள்ள எனக்கு நீண்ட காலம் எடுத்தது என்னவோ உண்மையே. ஆனால் அவரது பன்முக ஆற்றலை இன்னும் நான் மாத்திரமல்ல மற்றையோரும் முழுமையாக அறிந்துள்ளனரா என்பதில் சந்தேகமே! அவரை ஓரளவுக்கு முழுமையாக இனம் காட்டுகிறது இந்தக் கவிதைத் தொகுதி 'மாலைசூட்டும் நாள்.'

அவரது கவிதைகளிலே ஊடாடி நிற்கும் சமுதாய உணர்வு, தமிழ் உணர்வு, தமிழீழ உணர்வு, தாய்மை உணர்வு, புதுமை உணர்வு, வீர உணர்வு என அடுக்கிக் கொண்டே போகலாம் அவரை இனம் காண உதவுகின்றன. அவற்றினைப் புலப்படுத்துகையில் வீரம், கோபம், சோகம், ஏக்கம், பெருமை, பாசம் எனப் பல்வகை உணர்வுகள் பிரதிபலிக்கின்றதைக் காண முடிகிறது.

இந்தக் கவிதைத் தொகுதியிலே உணர்ச்சி உதிர்க்கும் சொற்களால் யாப்பிலக்கணத்தோடு கூடிய மரபுசார் கவிதைகள் உள்ளன. அவற்றில் சில இசைப் பாடல்களாகவும் அமைகின்றன. மறுபுறத்திலே நவீனத்துவ கவிதைகளும், இரண்டு வகைக்கும் இடைப்பட்ட நவீனத்துவமும் மரபும் கலந்த கவிதைகளும் உள்ளன.

பொதுவாகவே கவிஞர்கள் தாம் வாழுகின்ற சூழலுடன் ஐக்கியமாகிவிடுகிறார்கள். அவர்கள் மிக விரைவாகவே உணர்ச்சி வசப் படுகின்றவர்கள். எனவே சூழலில் ஏற்படுகின்ற தாக்கம் அவர்களைப் பெரிதும் பாடாய்ப் படுத்துகிறது. இவரில் அதை அதீதமாகக் காணமுடிகிறது. உள்ளத்தில் தோன்றுவது உணர்ச்சிப் பிழம்பாகக் கொட்டப் படுகிறது.

இதோ ஈராக் போர்பற்றியது. இங்கே கோபம் அமெரிக்கனில் என்றாலும் அடி மனதில் சிங்களன் பேரில் என்பது புலனாகிறது.

இது ஒரு புறத்தெறிவாகும் (projection) உள்ளத்திலே அனன்று கொண்டிருக்கிற சீற்றம் சிங்களன் மேல் அது ஈராக்கு மக்களைப் பதம் பார்க்கும் அமெரிக்கன்மேல் தாவுகிறது.உருவத்தில் மாத்திரம்தான் அமெரிக்கன், உள்ளத்தில் நிற்பதோ சிங்களன்.

அவர்களுக்காகக் கண்ணீர் வடிக்கத் தன்னிடம் துளிகூடக் கண்ணீர் இல்லையாம்.ஏன? 'ஆத்திரம் எனது நேத்திரம் மறைக்க ஆவியாகிறது கண்ணீர்' .என்கிறார். எத்தகைய வெஞ்சினம். 'சொல்லி அடிக்கிறான் அமெரிக்கன் சொல்லாமலே அடிக்கிறான் சிங்களவன்' பாருங்கள் கோபத்தை.

கடவுள் என்னடா கடவுள், கண்
காணாத கடவுளை ஏன் அழைக்கிறாய்----
கண்கள் கனல் கக்குகின்றன
காதோரம் புடைத்து விம்முகிறது
வாய் வறழ்கிறது இரத்தம் கொதிக்கிறது

ஓ ஈராக்கியனே
தோல்வி நிச்சயமடா உனக்கு
பின் ஏன் தயங்கி நிற்கிறாய்
அடியடா திருப்பி, தீவிரமாக
அவனை அழித்து நீயும் அழியடா
'வந்தால்வா போனால் போவென'
அடியடா திருப்பி அடியடா அடியடா

Wil Haygood எனும் அமெரிக்க இலக்கிய விமர்சகர் Poets found the soil of war rich ground. The soldier fights. The poet seeks to explain what the soldier cannot.
O, the bullet could never kill
What you really are dear friend,
Nor the bayonet stab
What you really are
(Walt Whitman)

வீரர்களால் முடியாததைக் கவிஞன சொல்லால் விளக்க முனைகிறான் என்கிறார் வில் ஹேகுட். அதனையே இங்கு காண்கிறோம்.

அவருக்கு எது நியாயமாகப் படுகிறதோ, அதை அவர் துணிந்து எடுத்துக் கூறத் தயங்கியதில்லை. சில சமயங்களில் அதனால் சிலரது மனம் புண்படலாம். ஆனால் அவர் அதற்காக

வருந்தினாலும் தனது நிலைப்பாட்டிலிருந்து வழுவியதில்லை. உணர்வு அவருக்கானது. உள்ளடக்கம் அவருக்கானது. அதில் அவர் சமரசம் செய்து கொள்வதற்கில்லை.தனது எண்ணங்களுக்குப் போலிச் சாயம் கொடுப்பதில் அவருக்கு ஒப்பில்லை. பாவனையில் உள்ள வடமொழிச் சொற்கள் பற்றிய அவரது எண்ணம் என்னைப் பெரிதும் கவர்ந்தது.

வெறி ஏறி விட்டால் நீதி நியாயம் பூச்சியமே
தெறி கெட்டுச் செத்த வடமொழியின் சொற்களென
குறியேதுமின்றிக் கூறிட்டு நிராகரிப்பார்
அறிவறிந்து பயின்று வந்த தத்தனையும் புறம்போ?
சொறியாது சேர்ப்போம் தூயதமிழும் ஆக்கிடுவோம். (தமிழும் தொன்மையும்)

பாவனையில் உள்ள வடமொழிச் சொற்களைத் தொடர்ந்து உபயோகிக்கலாம் என்பது அம்மையாரின் வாதம். அது நியாயமானதும் கூட. விபுலானந்த அடிகளாரும் இதனையை தான் எடுத்தியம்புகிறார்.

தமிழ் மேலும் மேலும் புதிய சொல் வளத்தைப் பெறவேண்டும். தொழில் நுட்பம் கணினி எனும் மாபெரும் சக்தியை எம் சமூகத்துக்கும் வழங்கி விட்டமையால் நான்காவது தமிழாக வீறு கொண்டெழுந்த விஞ்ஞானத் தமிழ் கணினித் தமிழையும் உள்ளடக்க வேண்டியதாயுள்ளது. வெளியுலகில் புதிது புதிதாகத் தோன்றும் பொருள்களுக்கெல்லாம் புதுச் சொற்களைக் கண்டு பயன்படுத்த வேண்டும். அச்சொற்கள் எளியனவாய், எழுத்துச் சிக்கனம் உடையவையாய் அமைதல் சிறப்பாக, புலம்பெயரந்த நாட்டில் வாழும் தலைமுறையினருக்கு அனுகூலமானதாக இருக்கும். ஆகவே பாவனையில் உள்ளது பாவனையில் இருக்கட்டும். புதியவை தூயவையாக இருக்கலாம். புதுச் சொற்கள் பொருத்தமாக இருக்குமா என ஐயுற வேண்டியதில்லை. உருவாக்கிப் புழக்கத்தில் விட்டோமாயின் காலவேகத்தில் புது வடிவம் பெற்று நிலைத்து விடும்.

நல்ல கவிஞர்களாப் பலர் இருக்கலாம். அவர்களில் பலர் உண்மை மனிதர்களாக இருப்பதில்லை. இவர் வித்தியாசமானவர். பாடும் ஒவ்வொரு வரியும் பொய் ஏதும் கலவாத கலப்படமற்ற உள்ளதின் உணர்வினைப் பிரதிபலிப்பவை. ‘காதல் செய்வீர் ஜெகத்தீரே’ என அழைத்தான் பாரதி. இங்கே முதியவருக்கு அழைப்பு வருகிறது

உள்ளங்கலந்த காதலுக்கு மூப்பேது வயதேது?
காதலே வாழ்வின் முழுவடிவம்
காதலே யாரையும் இயக்கும் தெய்வம்
என் முதிய நண்பர்களே ஏனிந்த வெட்கம்?
காதல் பற்றிப் பேசுதல் குற்றமா வெட்கமா?
இளசுகளின் இளிப்பு என்செய்யும் ஆதலால்
முதியோரே காதல் செய்வீர்
கவலை வெண்டாம்.

(முதுமையிற் காதல்)

அறுபத்தியிரண்டு வயதிலே அக்காதல் எப்படி உள்ளது கேளுங்கள். அது பற்றி ஒரு காவியமே வடித்துள்ளார்கள். அங்கே ஒரு வாசகம் என்னை மிகவும் கவர்ந்தது

'காதல் வளர்த்தனரே கைகால்படாமலே'. எமது பண்பாட்டு விழுமியங்கள் பேணப்பட வேண்டும் என்பதில் எத்தனை கவனம்.

காதலுக்கும் காலமுண்டோ காதுகளில் சிந்து பாடும்
ஆம்! புன்சிரிப்புப் பொங்க நரைத்த தலை ஆட
பொன்னான கணங்களை நினைத்து மனம் மகிழும்.
காதலுணர் வுக்கடவுளுக்கோர் காத்தல்செய
ஆழமுள அத்திவாரக் கோபுரமே தேவையன்றோ.
கோபுரமே சாய்ந்தாலும் கூர்ப்பான அத்திவாரம்
காதற் சிலைகாத்து, கல்லறை போகுமட்டும்
நினைவுகளில் நீள்நின்று வாழ்ந்துவரும் தன்மையினால்
காதலுக்கும் காலமுண்டோ சொல்வீர் ஜெகத்தீரே. (கைம்மையிற் காதற் காவியம்.)

அவர் புலம் பெயர்ந்தோர்களில் மூத்த எழுத்தாளர். பெண் எழுத்தாளர் என்பதை அவர் விரும்பமாட்டார் என்பது எனக்குத் தெரியும். ஆனால் அவர் பெண்ணிய வாதி என எல்லோராலும் பேசப்படுபவர். எனவே பெண்ணின் உரிமைக் குரலாக ஏதாவது கவிதை உள்ளதா எனச் சல்லடை போட்டேன் காணமுடியவில்லை. ஏன்? அவர் சற்றே வித்தியாசமான பெண்ணியவாதி. ஆணென்ன பெண்ணென்ன? ஏன் இந்த வேறுபாடு என எண்ணுபவர். பெண் எனக்கூறி சலுகைகள் வேண்டாதவர் கிடைக்க வேண்டியது கிடைக்க வேண்டும் என நியாயம் பேசுபவர். சிறுமை கண்டு பொங்கும் சிந்தனாவாதியேயன்றி

சிறு சலுகைகளால் மனம் திருப்தி கொள்ளும் யாசகர் அல்லர். அவர் சமூகநீதி எனும் அறம் வேண்டி நிற்கும் கவிஞர். எங்கே குறையுள்ளதோ அங்கே நிஷ்டூரமாக அவர் சொல் வாள் ஓங்கி வீசும்.

ஆன்மாவுக்கு ஆண்பெண் பால் இல்லை
மதம்சில கூறும் உண்மை அதுவே.
அடக்கல், சொற்கேட்க வைத்தல்
அதிகாரம் செய்தல்,
எந்த ஆன்மா?
கணவன் ஆன்மா ஈ டேற
மனைவி நோன்பு இருப்பாளாம்
செய்யும் தவறுகளுக்குத் தாளம் போடவாம்
களவு வஞ்சனை சூது ஒத்தோட வேண்டுமாம். அவளே
பத்தினியாம்.

(ஆன்மா வெவ்வேறு)

'நீ முதலில் குளிப்பவளாக, கடைசியில் உண்பவளாக
இருப்பாயானால்.'
எல்லோருக்கும் பால்சோறு போட்டு, நீ
மட்டும் வெறும் சோறு உண்பாயானால்..
நீ ஒரு நல்ல பெண் எனலாம்
இது ஒரு வங்காளப் பெண் பாடிய நாட்டுப்புறப் பாடலின் வரிகள்.
(அமரந்தா 'எனக்குள்
பெய்யும் மழை')
பெண்கள் இவ்விதமாகவே எடை போடப் படுகின்றனர்.

ஆணுக்குப் பெண் தாழ்வெனப் பேசும் வீணரை எதிர்க்கும் அதே சமயம் பெண்ணினம் தறிகெட்டுத் தறிதலைத்தனமாய் நடப்பதை தயக்கமின்றிச் சாடுகிறார்.

சமஉரிமை கேட்கின்ற காரிகையே கேளும்
நகையாசை விட்டீரோ? நாம் என்ன செய்ய
'காந்தியே சொன்னாராம்' என்று தொடங்காதீர்
சாமத்திலும் ஏமத்திலும் நடை பயிலும் உரிமை
எப்போ வருமென்று ஏங்காதீர் நங்கையரே
கற்களை உலோகங்களை காதுமூக்கு
கழுத்து கைகாலென அங்கங்கள் தோறும்

சுமையெனவே சுமத்தி
அன்னநடை அழகு நடை கவர்ச்சி நடைகாட்டி
ஒசிந்தொசிந்து 'வா... வா...' என அழைக்கும் ஒப்பனை
பவனிவர கள்ளனொடு காமுகனும், களங்கமிலா
விடலைகளும் பின் தொடர்வார் யார்பிழை சொல்லம்மா.
(புரட்சி 'படைப்போம்)

ஈன்று புறந்தருதல் என்றலைக்கடனே என்றாள் ஔவை. .இதனையே இன்றைய காலத்தில் பெற்றோரியம் என்கிறோம்.பெற்றோரியத்தில் பெரும் பங்கு தாயினுடையதே சான்றோனாக்குதல் தான் தந்தையின் கடன் என்கிறார் மூதாட்டி. பெண்பிள்ளையை வளர்ப்பதில் தாய்மார்கள் பெரும் பங்கு ஏற்றனர். அங்கே காலத்தோடு ஏற்றமுறை கையாளப் படவில்லை என்பது கவிஞரின் ஆதங்கம்.

தாயென்ன புதுமை செய்தாள், தாய்மார்கள்
தவறாது செய்ததையே அவளும் செய்தாள்
பெற்றாள், வளர்த்தாள், பேருமிட்டாள்
வேறேன்ன புதமை செய்தாள்
'பெலத்துச் சிரிக்காதே அதிர நடக்காதே
உரத்துப் பேசாதே முன்னுக்கு ஓடாதே
வாசலில் நிற்காதே வாய்க்குவாய் காட்டாதே'
எதிர் மறை வினைகளால் வாட்டி எடுத்தாள்
காலத்துக்கு முன்னரேயே முதிர வைத்தாள்
இதிலென்ன புதுமை கண்டோம்
காலத்துக்கேற்ற புதுமை ஏதையா?
(பெண்மைக்கு ஏது பெருமை)

இக்கவிதையைப் பலர் புலம் பெயரந்த நாடுகளில் வாழ்கின்ற தாய்மாரகளுக்குப் பொருந்தாது என்றே முணுமுணுக்கச் செய்வார்கள். இக் கவிதைத் தொகுதியிலே ஏறக்குறைய 15 ஆண்டுகள் அவர் எழுதிய கவிதைகள் இடம் பெற்றுள்ளன.

இரண்டு குருத்துக்களைப் பறிகொடுத்தவர் அவர் ஒன்று பாலகனாய். மற்றது விடலையாய். முன்னதை நோயினுக்கும் பின்னையதை தாயினுக்கும்(நாடு) ஆழ்மனத்திலே பொதிந்து கிடந்த ஏக்கம் அருமையான கண்ணிகளாகவும் கவிதைகளாகவும் ஊற்றெடுத்துப் பாய்கின்றன.இது கொடுமை

தாயான நானும் ஈமக்கடன் செய்லையே
தனியாய் தவிக்கவிட்டு பரதேசம் போனேனே
வாயாரப் புலம்பலையே வாய்க்கரிசி போடலையே
உச்சி முகரலையே உன்நாமம் செப்பலையே
நாயாக உன் பின்னே நான் தொடர்ந்து வரயிலையே
நசிந்தொடுங்கும் நேரத்திலை நல்வார்த்தை சொல்லலையே
பேயாக ஆயினும்பின் பெயர்ந்தோடி வாரேனோ
ஈழத்தைச் சுற்றி வரும் உன் ஆவியை நான் காண்பேனோ
(பேயாகவாயினும் வருவேன்)

கல்லையும் உருகச் செய்யும் கவிதை என்பாரகளே அது இது தானோ? அங்கு கூட மகளின் தேசீயக் கனவை 'ஈழத்தைச் சுற்றி வரும் உன் ஆவி' எனக் காட்டுகிறார்.

நீ செய்த தியாகம் மகத்தான தென்று
நிலத்தோர்கள் சொல்லார்கள் - மகளே
நினைச் சேர்ந்தோரும் சொல்லார்கள் - மகளே
வீடொன்று வாட நாடொன்று காக்க
நீ செல்லலாமா மகளே - எமை
யாரின்று காப்பார் மகளே
(துயரத்தில் எல்லையில்)

துயரத்தின் எல்லையில் அவர் மாத்திரமல்ல நம்மையும் இட்டுச் சென்று விட்டார். எதற்கும் ஒரு முடிவுள்ளது.இதற்கு இல்லை. காலம் அதன் தாக்கத்தைக் குறைக்கலாம் நீக்கமுடியாது எனவே தாய், மகள் வாயிலாக பதில் பகர்கிறார்.

உரிமையை அழித்து உயிர்தனைக்காத்தால்
அருமைச் சுதந்திர தாகம் தணியுமா?
நிலையான தமிழ்ஈழ நிலை பேற்றிற்காக
நினைவிட்டு வந்தேனே அம்மா
....
நிலைமையை உணர்ந்தும் பெட்டைப் புலம்பலில்
நீயொரு தசரதன் ஆகாதே அம்மா

அவருக்கு நகைச்சுவை உணர்வு நிறையவே உள்ளது. நல்லதொரு துணுக்கினை அட்டகாசச் சிரிப்புடன் அங்கீகரிப்பது அவர்பாணி. அவரது நகைச்சுவை உணர்வே தான் பட்ட இன்னல்களிலும் அவரை எழுந்து நிற்கச் செய்துள்ளன என்றால் மிகையாகாது.

அவரது நகைச்சுவை உணர்வினை இத் தொகுதியில் காணப்படும் நையாண்டிக் கவிதைகள் மூலம் நன்கு அறிய முடிகிறது.

லோக இனம் ஒன்றேயெனும் பூங்குன் றனைவிஞ்சும்
கல, கலக்கு மிளகுடன் பப்பா சிவிதை கலக்கு
அரிசிக்குள் கல் கலக்கு ஆ நெய்யுள் எது கலக்கு?
கறுத்தக் கொழும் பா னுள்புளி மாஒட்டு
குளோனிங் கால் புதியவுடல் உண்டாக்கு
கலக்கல் நன்றா நன்றென வைப்போம்

(விருந்தோம்பல்)

வள்ளுவனே! என்ன சொன்னாய்? சான்றோரால்
எண்ணப்படாதவன் என்றா?
நாகரீகம் தெரியாத ஆதிவாசி நீர்ஐயா
சான்றோரேயில்லாத நவயுகம் இது ஐயா
சான்றாண்மை தொலைத்துவிட்ட தனித்தேசம் நாம்ஐயா (போம் காணும் வள்ளுவரே)

அவரது கவிதை பற்றி இன்னம் பல சொல்லலாம். சொல்வதற்கும் உள்ளது. யாழ் நூல் நிலையம் எரித்தது,மாவீரர் பற்றியது , கனடா நாடும் நடப்பும், இன்னும் பல. இடம் கருதி நிறுத்துகிறேன். கவிநாயகர், ஜெகதீசன். சம்பந்தன் என ஆற்றல் மிக்கோர் பலர் எழுதியுள்ளனர் அவரது புலமை போற்றுதற்குரியது. ஒரேயொரு குறை சில கவிதைகள் எப்பவோ நூல்வடிவு பெற்றிருக்க வேண்டியவை. இப்போவாவது அவற்றினை எமக்களிக்க மனம் ஒப்புதல் தந்ததே. நன்றி.

பொ. கனகசபாபதி

நூலாசிரியர் பற்றி

தமிழீழ தலைமகள்

உலகப் புகழ்பூத்த பெண்களில் உயரமானவர்
திருமதி வள்ளிநாயகி இராமலிங்கம்

காத்திரம் மிக்க அவரது எழுத்துக்கள் கம்பீரமானவை
சுமார் ஐம்பது வருடகால தமிழீழ மக்களது
அன்றாட வாழ்வியலை அழகுறப் படம் பிடித்துக்
காட்டுபவை மனித நேயம் மிக்க அவரது படைப்புகள்

அதற்கு முன்னைய காலப்பகுதியைக்கூட காணமுடிகின்றதே
என முதியவர்களையும், அதற்குப் பின்னைய காலப்பகுதியையும்
காட்டிநிற்கின்றதே என இளையவர்களையும் மகிழ்வுடன்
பெருமைப்பட வைப்பவை அவரது இலக்கியம்

அவரது எழுத்தாற்றலைப் பார்த்தே எழுத்தாளரானவர்கள்
பலர் உலகம் பூராவும் இன்று வியாபித்துள்ளார்கள்.

அவரது பேசும் பேராற்றலால் பெரிதும் கவரப்பட்டவர்கள்
பலர் சிறந்த பேச்சாளர்களாக பார் முழுவதும் இன்று
பரந்துள்ளார்கள்

பெண்ணியத்தில் சிறந்த அவரது கருத்துக்கள் பல பெண்களை
கண்ணியத்தில் சிறந்தவர்களாக்கியது.

'குறமகள்' என்ற அவரது புனைபெயருடன் பரிச்சயமற்றவர்கள்
தமிழீழத் தமிழுடனும் தமிழீழ இலக்கியத்துடனும்
பரிச்சயமற்றவர்கள்.

தமிழீழ இலக்கியத்தில் அவர் இருக்கின்றார்
அவரது இலக்கியத்தில் தமிழீழம் இருக்கின்றது.

காங்கேசன்துறையைப் பிறந்த ஊராகவும் - சின்னத்தம்பி செல்லமுத்து தம்பதியைப் பெற்றோராகவும் - தில்லைநாயகி - கோகிலா - அகிலா - விமலா - நவநீதன் ஆகியோரை இனிய உடன்பிறப்புக்களாகவும் - தபாலதிபர் இராமலிங்கத்தைக் கணவராகவும் - டாக்டர் சசிகலா - ஆசிரியர் கலைவாணி - பொறியியலாளர் துளசிராம் - வீராங்கனை குகபாலிகா ஆகியோரை பிள்ளைகளாகவும் பெற்றார்.

காங்கேசன்துறை நடேஸ்வரா - இளவாலை கன்னியர்மடம் - கோப்பாய் ஆசிரிய பயிற்சிக்கலாசாலை - கொழும்பு பல்கலைக்கழகம் - யாழ். பல்கலைக்கழகம் - ரொறண்டோ பல்கலைக்கழகம் என்பன உத்தமராகவும் வித்தகராகவும் அவருக்கு பாடம் போதித்தன.

இருபத்தியேழு வருடங்கள் ஆசிரியராகவும் எட்டு வருடங்கள் ஆசிரியப்பயிற்சிக் கலாசாலை விரிவுரையாளராகவும் உன்னதமான பணியினை ஊர்போற்றப் புரிந்தார்.

கனடாவிலும் ஆசிரியப்பணியை சிறிதுகாலம் தொடர்ந்த அவர் சமூக சேவை ஆலோசகராகவும் சிறப்புடன் மிளிர்ந்தார்.

யாழ்இலக்கிய வட்டம் முதல் கனடா எழுத்தாளர் இணையம் வரை பெண்கள் ஆய்வு வட்டம் முதல் தென்ஆசிய மகளிர் மையம் வரை அவரால் வளம்பெற்ற சமூக மேம்பாட்டு நிலையங்கள் அளப்பரியவை.

மிகப்பரவலான எண்ணிக்கையில் வாசகர்களைப் பெற்றுள்ள மிகத் தரமான எழுத்தாளர். குறமகளின் ஒவ்வொரு படைப்பும் மனித நேயத்தையும் மக்கள் மேன்மையையும் முக்கியப்படுத்தும்.

வீரத்தை முதன்மைப்படுத்தி துளசிகா எனும் புனைபெயரில் களமாடுபவரும் அவரே! அவரது இளையமகள் மேஜர் துளசியாக இயக்கத்தில் இணைந்து மண் மீட்பிற்காகத் தன்னை ஆகுதியாகக் கொண்ட பின்னர் வந்தது இப்புனைபெயர்.

இன்னும் சத்யப்பிரியா, ராசாத்திராம், பத்மினிபிரியதர்ஸனி, கோமகள், காங்கயி, சக்திக்கனல் ஆகிய புனைபெயர்களிலும் வலம் வந்தார்

மகளுக்காக என்று இல்லாது ஆரம்பமுதலே ஆயுதப் போராட்டத்தில் தீவிரமுடையவராகத் திகழ்ந்தவர் அவர். அநாதியில் இடதுசாரிக் கொள்கைகளில் நாட்டம் கொண்டிருந்தார்.

பெண்களுக்காகவும் - ஆதரவற்றவர்களுக்காகவும் சமூக சேவையும் மேடைப்பேச்சாளர்களுக்காக இலக்கிய சேவையும் அவருடன் அவரது மோறிஸ்மைனர் காருக்கும் அந்தக் காலத்தில் பெரும் பங்கிருந்தது. 9447 என்ற அக்காரின் இலக்கம்கூட மாணவரிடம் மிகுந்த அபிமானத்தையும் மரியாதையையும் பெற்றிருந்தது.

வீரகேசரியின் பாலர் வட்டாரமும் தினக்குரலின் பாலர் கழகமும் அவரது எழுத்துக்களால் அலங்காரப்பட்டிருந்தாலும் 1955ல் அவரது பொன் எழுத்துக்களுக்கு அட்சதை தூவி ஆசீர்வதித்தது ஈழகேசரி.

குறமகள் கதைகளும் - உள்ளக்கமலமடி சிறுகதைத் தொகுதியும் இதுவரை இவரால் பிரசுரமான நூல்கள். குறமகள் கதைகள் முதலாம் பதிப்பினை யாழ்.இலக்கிய வட்டம் 1990ல் வெளியிட இரண்டாம் பதிப்பு மித்ரா வெளியீடாக 2000ல் வெளிவந்தது. தற்பொழுது அவரது பொன்விழா பரிசாக வருவது மாலை சூட்டும் நாள் - கவிதைத் தொகுதி.

சிறு வயதிலேயே வயலினும், வாய்ப்பாட்டும் சிறிய அளவில் நடனமும் பயின்றதால் அவரது எழுத்துக்களும் சுருதி சுத்தமாக ஆவேச நர்த்தனம் புரிகின்றன.

'உருப்படிகள் மூன்று' என்ற அவரது சிறுகதை சங்கீதத்தை நன்கு லயிக்க வைக்க 'நிறை நிலா பூத்தது' நடனத்தில் இதயங்களை இனிமையுடன் தடம் பதித்தது.

நுணுக்கமான சிந்தனை - பரந்த மனப்பான்மை - மனிதநேயம் - மற்றவர்களை எளிதில் எடைபோடும்திறன் - எதையும் உயர்ந்த நோக்குடன் சித்தரிக்கும் பேராண்மை - சமூக மேம்பாடு என்பனவற்றை பிரதிபலிப்பது அவரது இனிய தமிழ்.

தமிழீழ இலக்கிய உலகில் கடந்த ஐம்பது வருட காலமாக தன்னிகரற்றுக் கோலோச்சும் பொன்மகள் அவர்.

கதை - கட்டுரை - கவிதை - நாடகம் - நாட்டியநாடகம் - சினிமா மேடை என சகலதுறைகளிலும் புகழ்பூத்த தமிழீழத்தலைமகள் அவர்.

வாரியாரால் வந்த பெயர் குறமகள்

நவீன இலக்கியத்தில் துணிச்சலான சாகசங்கள் செய்வதில் வல்லவர்.
பிறரது மனநிலையை உணர்வதில் தனித்தன்மையுடன் திகழ்பவர்.
உள்ளதை உள்ளபடியே விமர்சிக்கும் வித்தகர்.
சவால் என்பது அவருக்குப் பிடித்த மந்திர வார்த்தை.
அவரது பேராற்றலின் உயரம் பிரமிக்க வைப்பது.
தங்கமான அவர் என்றென்றும் இதயங்களில் தங்குவார்.
வருகின்ற தலைமுறையும் அவரை வாழவைக்கும்!

வாழ்க வளமுடன்

எஸ். ஜெகதீசன்

உங்களோடு சில வார்த்தைகள்......

நீண்ட இலக்கியப் பாரம்பரியங்களை உற்றுநோக்குவோமானால், எந்தமொழியோ கலாச்சாரமோ காலமாற்றங்களுக்கேற்ப அவையும் மாறுதல் அடைந்து வருகின்றன. புதிதாகத் தோன்றுவன - ஒன்று மற்றொன்றாகத் திரிவன - அழிந்து போய் மீண்டும் பிறப்பன. இத்தகைய விகாரங்கள் உலகநியதியாகி விட்டன.

சங்ககாலம் தொடக்கம் இன்றுவரை மாற்றம் மாற்றம். அப்போது அறிவியல் தொடக்கம் சகலமும் செய்யுள் நடையிலேயே இருந்தன. பின்னர் வசனநடை புகுந்ததும் கட்டுரை கதை நாவல் என விருத்திபெற செய்யுளானது ஆசிரியப்பா - வெண்பா - கலிப்பா - வஞ்சிப்பா - பாவினங்கள் - சிந்து - கண்ணிவகை - ஓசைநயம் பெறும் சந்தக்கவிகள் - இசைப்பாடல் என விருத்திபெற்றுவர பொருளிற்கூட வழிபாட்டுவகை குறைந்து சமூக சிந்தனையும் அக்கறையும் தொனிக்க இன்று புதுக்கவிதை எனும் வடிவம் பெற்று நிற்கிறது.

பாரதியாரிலிருந்து முதலாவது மாற்றம் இலக்கண வரம்பை மீறியமை, அடுத்ததாக எதுகை, மோனை, வர்ணனைகள் போன்றவற்றின் அவசியத்தை நீக்கியமை, தற்போது எழுத்தின் திசைமாறி 'தமிழ் மொழியை அகராதி அர்த்தத்தினின்றும் மாற்றி

தமிழ்க் கவிதையின் சொல்லும் பொருளும்

புதுப்பிக்கப்பட்டது தான் புதுக்கவிதை' எனப்படுகிறது குறும்பா, ஹைக்கூ போன்ற ஒரு உருவகரீதியான போக்கு. ஒன்றைச் சொல்லி இன்னொன்றைப் புரிய வைத்தலாக இருக்கலாம். அதாவது ஒருசொல், தான் நிற்கும் சூழலைப் பொறுத்து அர்த்தங் கொள்ளும். ஆனால் அகராதி அர்த்தம் வேறாக இருக்கும்.

தற்காலப்போக்குக்கூட, சமூகங் குறித்ததாயினும்சரி, பொதுவான கருத்துக்களால் பயனில்லை எனவும் குறிப்பிட்ட பிரச்சினை சார்ந்த நிலைப்பாடுகளையே பிரதிபலிக்க வேண்டுமெனவும் சொல்லப்படுகிறது. சமூக, பொருளாதார, அரசியற் காரணிகள் ஆழமாகச் சித்தரிக்கப்டும்போது நல்ல உயர்வான பரிணாமத்தைக் கவிதை பெறும். மாறிவரும் சூழலுக்கேற்ப தன்னைத்தானே தகவமைப்பு செய்து கொள்வதால் மங்கி மறையாமல் உத்வேகம் கொள்கிறது.

அசாதாரண அனுபவங்களை சாதாரண வார்த்தைகள் மூலம் கூறுதலும், வாழ்க்கையில் எவையெவை முக்கியமாகப் படுகிறதோ அவற்றை அனுபவமூலமாகச் சொல்லக்கூடிய திறனும் இருந்தால் படைப்பு உன்னதமாக அமையும். கவிஞர் ஒருவர் தாம் பார்க்கும் கேட்கும் விடயங்களையெல்லாம் சொல்லும் தேவை உடையவராகிறார். அதற்காகக் கவிதையில் இருப்பவர் கவிஞர்தான் எனக் கருதி அவரது வாழ்க்கையை ஆராய முயல்தல் அறியாமையாகும். தமது வாழ்விலும் இவை சம்பவித்ததோ, சம்பவிக்குமோ எனச் சிந்தித்து செயற்படுதலே தேவையானது.

'மாலை சூட்டும் நாள்' எனும் இத்தொகுதி வெளிவர வேண்டிய தேவை ஒன்று ஏற்பட்டது. ஒரு குறிப்பிட்ட தலைப்பின் கீழ் எழுதப்பட்டவையல்ல. பத்தும் பலதும் கலந்து வந்திருப்பவை. வகைப்படுத்தித் தொகைப்படுத்தித் தந்தவர் திரு. இரா சம்பந்தன். பத்து பகுதிகளில் இவை வரினும் ஒன்றுக்குள் ஒன்றாகப் பொருந்தவும் கூடும்.

எமது பிரசுரமான முதலாவது கவிதை ஆசிரியப்பாவிலான "கீரிமலை" என்பது. இது குரும்பசிட்டி மு.க. சுப்பிரமணியம் அவர்களால் நடாத்தப்பட்ட 'வெற்றிமணி' பத்திரிகையில் வெளிவந்தது. அதில் ஒருவரியை அமரர் வேந்தனார் அவர்கள் நம்மைக் காணுந்தோறும் "காப்பும் சீப்பும் கடலையும் பொரியும் எனவே அழைப்பார். பின்னர் தி. ச. வரதர் அனுசரணையில் மஹாகவியால் வெளியிடப்பட்ட 'தேன்மொழி' எனும் கவிதைச் சஞ்சிகையில் வெண்பாக்களும் ஆசிரியப்பாக்களும் வந்தன. தமிழன், ஈழநாடு, வீரகேசரி இதழ்களில் மரபுக் கவிதைகள் இடம்பெற்றன. பாடசாலைத் தேவைகளான விழாக்கள், பிரியாவிடைகள், நடனங்கள், நாடகங்கள், போட்டிகள் என்பனவற்றிற்கும் ஊரின் சுகாதாரவாரவிழா, பாராட்டு விழாக்களுக்கும் எழுதியதோடு பண்டத்தரிப்பு மகளிர், கல்லூரிக் கீதமும் எம்மால் எழுதப்பட்டது. தேவைகளுக்கு எழுதியவை தவிர பிரசுரிப்பதற்கென அதிக ஈடுபாடு காட்டவில்லை.

கனடா தேசம் கைகொடுத்தபின் தமிழர் தகவல், தமிழோசை, தாயகம், நான்காவது பரிமாணம், செந்தாமரை, இளவாலை ஜெகதீசனின் பொதிகை, நம்நாடு, உலகத்தமிழர் ஆகிய செய்தித்தாள்களுக்கு அவ்வப்போது எழுதப்படுகிறது.

CTBC வானொலியில் கலாதரனால் ஆரம்பிக்கப்பட்டு, கலாராஜனால் தொடரப்பட்ட 'வெட்டவெளியில் கொட்டிக்கிடக்கிறது' கவியரங்கத்தில் இடைக்கிடை பங்குபற்றியும், (CTR) கனேடிய தமிழ்வானொலியிலும் இதே பகுதியில் பாடல்கள் வாசிக்கப்பட்டும் எம் கவிதை நடந்தது.

ஆத்மார்த்தமான - உணர்வுபூர்வமான கவிதைகள் பண்ண வேண்டும் என நினைந்து எழுதுவதில்லை. கிடைத்த தலையங்கத்துக்கு அந்தக் கணநேரத்தில் அவசரமாக எழுதப்பட்டு மறுபரிசீலனை செய்யப்படாமலே வாசிக்கப்பட்டவை அநேகம். அதனைச் செம்மைப்படுத்துவோமெனத் தொடங்கினால் சேறள்ளிக் கொட்டுவது போலத்தான் முடிகிறது.

சமுதாயத்தில் மனதை நோகடித்தவை, அனுபவித்தவை, அவை எத்தகைய விளைவுகளை ஏற்படுத்தும், பூரண சமுதாய மாற்றம் ஏற்படுமா எனும் தாக்கங்களை பிரதிபலித்த அக்கவிதைகளை வேறொரு சீரமைப்பில் கொண்டுவர முடியாத திணறல்.

கருவுக்கும் அதன் உணர்வுக்கும் ஏற்றவாறான ஓசைநயத்தை மனதில் நிறுத்தி அந்த ஓசைக்கேற்றவாறான கவிதைகளைப் புனைய முயன்றுள்ளேன். அத்தகைய நிலையில் சில சாந்தமான போக்கில் கீர்த்தனைகள் எனப்படும் இசைப் பாடல்களையும் யாத்துள்ளேன்.

பெண்ணியப் போராளி எனப் பேர் பெற்றுக் கொண்டு பெண்களுக்காக ஒரு பகுதி வைக்கவில்லையே எனக் கேள்வி ஒன்று இருக்கின்றது. அறிவுகள் எல்லாம் ஆணுக்கும் பெண்ணுக்கும் பொதுவானவை என்பது என் அசைக்க முடியாத அபிப்பிராயம். எனவே அத்தகைய கவிதைகள் பல பகுதிகளுள்ளும் காணப்படுகின்றன.

'திருமணம் பெண்களுக்கு விடுதலை தராது' எனும் கொள்கை பல இடங்களிலும் எடுத்தாளப்படுகிறது. அது எமக்கு ஏற்புடைத்தல்ல. "கடமைகள் உரிமைகள் நோக்கி மட்டுப்படுத்தப்படுகிறது" என்பதுதான் என் முடிவு. ஆண், மனச்சாட்சியுடன் நடந்தால் அவனுக்கும் 'கால்கட்டு வாய்கட்டு' த் தான். ஆனால் அரசியலில் பெண்ணின் உடல் பழிவாங்கப்படுகிறது. மானபங்கப்படுகிறது. இதனை எதிர்த்தும், 'உடற்காயங்களே' எனக் கூறியும் குரல் கொடுக்கிறேன். தீவிரமும் வலுவுங்கொண்ட இத்தகைய கவிதைகள் இன்னும் உள.

ஆங்கிலக் கவிதைகள் லான்ஸ்டவுண் பகவான் ஸ்ரீ சத்யசாயி நிறுவனத்தின் சார்பாக பல்லினத்தவருக்குமான பாட்டுப் போட்டிகளுக்கு எம் இளைஞர் பாடுவதற்காக எழுதப்பட்டவை.

மொழிமாற்றுக் கவிதை நமக்குப் பிடித்தவை. கருத்தைக் களவு செய்ய விருப்பமின்றி அக்கவிஞர்களுக்குக் கொடுக்கும் கௌரவமாக மாற்றப்பட்டிருக்கின்றன.

தாயும் சேயும் பகுதி மாவீரர் துளசியை நினைவுகூரும் வண்ணம் வருடாவருடம் எழுதப்பட்டவையும் சில மாவீரர் அனைவருக்குமே பொதுவானதாகவும், சோகத்திலிருந்து முளைக்கும் வீரத்தைப் பிரதிபலித்துப் பெற்றோர் ஆறுதல் பெறத்தக்கதாகவும் இயற்றப்பட்டவை. தாயும் சேயும் பகுதிக்கு பிள்ளைகளை வளர்த்த எனது தாயாரும், என் இளையமகள் றோசாவும் காணப்படுகின்றனர்.

மாலை சூடும்நாள், மாலை சூட்டும் நாள் என இரு பாடல்கள் உள. முதலாவது மேஜர் துளசியின் கல்லறைக்கு மாலைசூடும் நாள் எமக்கு வாராதோ என்பது. அடுத்தது தமிழீழத் தாயகத்துக்கு மாலை சூட்டும் நாள் வந்துவிட்டது என்பது.

இக்கவிதைகள் ஆயிரம் வருஷம் நின்றுநிலைக்க வேண்டுமென ஆசைப்பட நானென்ன அற்புதக் கவிஞரா? அன்றாடம் காணும் பிரச்சனைக்கு விடிவு காணும் உணர்வைத் தரமுடியும். ஆனால் இவை பொய்கலவாத - முன்னுக்குப்பின் முரண்படாத உண்மைகள். சில மரபுக்கவிதைகளில்கூட ஓரிரு இலக்கணப் பிழை நேர்ந்தும் வேறு சொற்கள் அந்தக் கனதியைத் தராதெனக் கண்டால் அது அப்படியே விடப்பட்டிருக்கிறது.

கவிதைத் தொகுதி வெளிவர உதவி செய்தோர் பலர். கவிதைகளிற் பல வானொலிக்காக எழுதப்பட்டவை. எனவே இரு வானொலிப் பொறுப்பாளர்களுக்கும், பிரசுரம் செய்த பத்திரிகைகளுக்கும் நன்றி.

ஆலோசனைகள் வழங்கியும், கட்டுரைகள் தந்தும் ஆதரித்த நண்பர் கவிஞர் கந்தவனம், உறவினர் அதிபர் பொ. கனகசபாபதி, அன்புக்குரிய இரா. சம்பந்தன், மாணவன் இளவாலை S. ஜெகதீஸன் ஆதியோருக்கும் எனது மனப்பூர்வமான நன்றி.

நூலை வெளியிட ஆதரவு தந்தும், பொறுப்பேற்று நூலுருவம் ஆக்க உதவி செய்தும், பதிப்புரை வழங்கியும் அனுசரணையாக இருந்த சகோதரர் திரு எஸ். திருச்செல்வம் அவர்களுக்கும்

உளமார்ந்த நன்றி.

நூலைத் திருத்தமுற அச்சமைப்புச் செய்துதந்த திரு. மா. கனகசபாபதி அவர்களுக்கும் அட்டை வரைந்து பதிப்பித்து வெளியிட்டுவைத்த அகிலன் அசோஷியேற்ஸ் நிறுவனத்துக்கும் இதயம் கனிந்த நன்றி.

சொல்லுவதென்பது யார்க்கும் எளிது. சொன்னபடி செய்தல் கஷ்டமானது. எனவே கவிதை பற்றிக் கொள்கை ரீதியாக துறைபோக அறிந்திருந்தாலும், படைப்பில் அவையெல்லாம் கையாளப்பட்டிருக்குமோ எனும் ஆதங்கம் உண்டு. எம் இனிய வாசகர்களே! சரியான விமர்சகர்களும் தீர்வு கூறக்கூடியவர்களும் நீங்களே.

நன்றி வணக்கம்

- குறமகள் -

20 WADE AVENUE
UNIT 516
TORONTO

திருப்பதி
கல்லூரி வீதி
காங்கேசன்துறை

தெய்வமும் குருவும்

குருநாதன் நம் குலதெய்வம்

காங்கேசன்துறை வாழ்மக்கள்
கண்டிடும் இறங்கணிய வளைக்
கூடலில் கோவில் கொண்ட
குலதெய்வம் நம் குருநாதன்
சிலப்பதிகாரத் தொடர்பில்
சிவகுருநாதற் காய
சிறுகதை யொன்றுண்டு
செப்புவேன் கேட்பீராக
பாண்டிநாட்டெரிப்பின்பின்
படருமே வெங்குருநோய்
பக்தர்கள் ஏங்கி ஏத்த
பார்வதி மனம் கனிந்தாள்
சித்துக்கள் செய்மருத்துவனாம்
சின்னமகனைப்படைத்தருளி
முத்துநோய் தீர்க்கத்தென்னாடு
எங்கணும் அனுப்பிவைத்தாள்
வைத்தியன் சிவகுருநாதன்
மாவெள்ளைப் புரவி யிவர்ந்து
வருத்திய நோய்கள் தீர்த்து
வடதமிழ் ஈழம் வந்தார்
துறைமுகத் தருகே அமைந்த
ஊர்மனைப் புறம்பே படர்
அரசமரக் கீழ் அமர்ந்து
அவல நோய் தீர்த்துவந்தார்
தேங்குமொளி வீசும் தேஜஸ்
தியானநிலைமௌ னங்கண்டு
தெய்வமாய்ப் போற்றுங் காலை
தெய்வீக ஒளிமேலெழவும்
சமாதி நிலை கண்டார் கந்தனின் அம்சமென்றே
குருநாதன் என வணக்கம் பெற்றார் ☞

ஆயிரம் வருஷங் கண்ட
　　அற்புத மக்கள் தெய்வம்
மாருதப் புரவீ கவல்லியொடு
　　மாவைக் கந்தனும் வந்துசேர
பாயிரம் பனுவல் பலகாண்
　　பண்டிதர் சிந்தையிலுதித்து
மாபெருங் மாற்றங் கண்டே
　　மந்திரக் கோவிலாச்சே

அந்தணர் பூசகராக
அதற்கேற்ப புராணக்கதை விரிய
சிவனுக்குப் பிரணவப் பொருளுரைத்த
கந்தசாமியே சிவகுரு நாதனென
கீர்த்தி பெற்றது குருநாதர் கோவில்
புனிதம் பொருந்திய மண்ணின் தன்மை
மூர்த்தி மாறினும் முகூர்த்தம் மாறாது
முன்பே பொங்கிய அருளுமற் புதமும்
பின்பும் தொடர்ந்து பெரிதும் பெருகின

பசுமையற்ற நம்நிலப் பசுக்கள், அந்நாள்
வன்னிக்கு அனுப்பப்பட்டு
வயல்களில் மேயவிட்டு
பின்னொரு போதில் ஓட்டிவரும் வழக்கம்
ஒன்றிருந்து வந்தது
　　வன்னியிலிருந்து வந்த மந்தையுடன் சேர்ந்து
　　வந்ததொரு புதிய வெள்ளைப்பசு
　　ஓட்டிக் கலைத்துக் காட்டுக்குள் விடினும்
　　மாட்டேன் என்பதுபோல் வந்துசேரும்
　　வழியெலாம் வித்தைகாட்டித் துள்ளிவந்து
　　கிளித்தட்டு மறிப்பதுபோல் ஆட்டங்காட்டி
　　மயங்கவைத்து அரசமரத்தின் கீழ் படுத்துவிட்டது
　　உடையார் கனவில் தோன்றித் தனக்கொரு
　　கோவில் கட்டெனக் கூறி
　　மக்கள் முன்னிலையில் மாயமாய் மறைந்தது
　　நந்திக் கொருசிறு கோவிலும் எழுந்தது ☞

அந்தக் குருநாதன் அவ்விடங் கோயில் கொண்டான்
அவனே நம் குலதெய்வமாய் அருள்சொரிந்து காத்தான்
பால்யப்பருவத்து வழிபடுதெய்வமாய்
பணிபல செய்து பூஞ்சோலை மலர்பறித்து
அந்தணர்க்கீயும் ஆண்டாளாய்
தர்ப்பை போட்டு விழாச்செய்து
வீதியெங்கும் விளையாடி
சிந்திக்கும் பருவத்தின்முன் சில்லறை நூல்கள் படித்து
சிந்தை புரண்டு, தீவிரங் காட்டா விடினும்
ஆலயம் செல்லல் அருகிய போதிலும்
நங்குலத்தெய்வம் "குருநாதா" சொல்
நாவில் என்றும் மறையாது.

தெய்வம் ஒன்றேயெனும் தெளிவுநன்றே பெறினும்
பிள்ளைப் பருவத்து நினைவு ஆணியடித்தாற் போல
"குருநாதன் சந்நிதி காணேனோ?
கும்பிட்டுக் கும்பிட்டு வாழேனோ?
இராணுவத் தொலைப்பு எப்போதோ
இடித்து விரட்டுவது எந்நாளோ"?
ஏங்கியுயிர்க்கும்வண்ணம், சிறைப்பட்டுள்ளாயே முருகா

காத்தருள் தாயே

இராகம் - ஹம்சத்வனி தாளம்: ஆதி

அன்னைபராசக்தி அருள் புரிவாள் - எங்கள்
ஆன்மீகஞானம் பெருகிடவே (அன்னை)

அனுபல்லவி

கருணையும் அன்பும் கசடற்ற சிந்தையும்
கலந்தொளிவீசிக்கவின் பெறவே (அன்னை)

சரணம்

1. இன்னலைத் தீர்ப்பாள் இதயத்திலிருப்பாள்
பன்னருங் கவிதை பொழிந்திடச் செய்வாள்
விண்ணவரேத்தும் வித்தகம் தந்தே
மண்ணுளோர் மதிக்கும் மாண்பினைத் தருவாள்

2. வஞ்சகம் கோபம் மயக்கம் பொறாமை
அஞ்சும் பேராசை அனைத்தையும் போக்கிட
தஞ்சம் என்றேயுனைச் சரணடைந்தோம் தாயே
அஞ்சல் என்றேஎமை ஆதரித்தருள்வாய்

3. பாரினுள் அன்பும் அமைதியும் ஓங்கிட
பக்தியின் வெள்ளம் பரந்தெங்கும் பாய்ந்திட
காரிருள் நீங்கிட கருணையுள் மூழ்கிட
காத்தருள் தாயே போற்றுவோம் உமையே

- தமிழோசை 1991

விஜயதசமி வெண்பாக்கள்

தெளிந்தோரில் தோன்றும் செழுங்கல்வித் தேனே
நலிந்தோர் நலம்நாடும் நங்காய் - மொழிதேர்
வளங்கூர்ந்த வண்டமிழால் வாழ்த்தியுனைப் போற்ற
உளங்கூர்ந்த கல்விதா ஓர்ந்து.

- 1992

தெண்டனிட்டேன் நின்பாதத் தாமரைகள் தேவியே
மண்டியிட்டுப் போற்றுகின்றேன் மாமலரே - பண்டித
மொழிவல்ல நுண்மதியைத் தந்திடுவாய் தமியேன்
வழிவந்து யாத்திடுவேன் பார்.

- 1993

நூலொன்று யாத்துமே நும்முன்னே வைத்திடுவேன்
மாலொன்று மின்றி மலரவே - மேலொன்றும்
கேட்பேன் கலைமகளே கைகூப்பித் தாழ்சிரத்தால்
காட்டுன் அருளைக் கனிந்து

- 2001

கானக் குயிலே கரும்பின் சுவையமுதே
நான்மறை வேதத்தின் நல்லுருவே - தேனமுதக்
கல்வியின் தாயே கருதுமொரு நா நலனும்
நல்கதைகள் சொல்வரமும் தா.

- 2002

நாமகளே தாயே நலந்தருமெம் நாயகியே
பூ மகளே புத்தகத்துள் வாழ்பவளே! - கோமகளே
நின்னடிமை வள்ளிக்கு நீணிலத்துக் கல்வியாம்
இன்னமுதம் ஈந்திடுவாய் இன்று

- 2004

மாவை முருகன்

ஒருபொருள் முப்பா வெண்பா

தெவ்வரவர் போர்முடித்துத் தேவர் புகழேற்றுக்
கவ்வுமின் பத்தமிழ்க் கவிகேட்க - ஔவை
திருகும் களைபசிதீர் நாவற் கனிதந்தாய்
முருகா அருள்தருவாய் முன்

கல்லால் மரத்தின்கீழ் நல்ஞானம் கற்பித்த
வல்லாளன் நின்தந்தைக் காசிரிய - சொல்லாலே
நாவல் மரத்தடியில் நாற்கோடி பாட்டிதந்தாள்
சேவற் கொடியோனே ஈவாய்

நற்பதத்தை நாடியே நண்ணினர்க்கு ஈயுமச்
சிற்றூராம் மாவைவாழ் சேந்தனே!- சொற்கவிதை
நாற்கோடி ஔவைக்கு நாவற் கனியீந்தாய்
பாற்குடத் தேன்எனக்கும் பகிர்

உள்ளமே கோவில் ஒருவனே தேவன்

கனடா நாட்டின் கவின் பெறும் ஆலயம்
கனக்கவே உண்டு கவலையே இல்லை
சந்நிதி முருகன் மாவைக் கந்தன்
நல்லூர் முருகன் கனடாக் கந்தன்
றிச்மண்ட் முருகன் வல்மொறீன் வேலன்
ஊரின் பெயரால் ஓராயிரம் கோவில்
பாய்ந்து பாய்ந்து கும்பிட்டுக் கும்பிட்டு
மாய்ந்து மாய்ந்து ஒப்பிட்டுநோக்கி
"கடவுளும் ஜொலிக்கிறார் அருள்பொங்குது
பட்டுப் பீதாம்பரமும் பத்து விரல்மோதிரமும்
ஐயரும் ஜொலிக்கிறார் பரவசம் பரவசம்"

அலங்காரங்களை ரசித்துப் பார்க்கும்
அன்பர் ஓர்புறம்
"சாமியின் முகமின்று இருண்டு கிடக்குது
ஏதோ தீமை வரத்தான் போகுது"
அஞ்சியஞ்சிச் சாவார் என்பது
இது தானா பாரதி?
முருகன் ஒருவனே என்பதை மறந்து
கார் ஏறி றயிலேறி சுற்றுலாப் போறது
அவர்தம் விடுப்பூக்கமா? சொல்.

நம்மளவிலான நாற்புறத் துறையிலும்
நமக்கென வகுத்த பாதையில நின்று
வீறுநடை போட விழைந்தனம்.
அனைத்துத் தெய்வமும் ஒன்றே என்றும்
அன்பின் வழியது அஃதே என்றும்
அனைத்து மதமும் கூறும்
ஒளியே! ஞானஒளியே அவர்தம் சின்னம்!

உள்ளத்தின் உள்ளுறை செம்பொருள் கண்டோம்
உள்நிறுத்தும் சோதியை மௌனமாய்
கண்மூடி ஆனந்த பரவசம் அடைந்தோம்

☞

“கோவிலாவதேதடா” என்றான் ஒரு சித்தன்
தே.வி. பிள்ளை அவர்களோ
“ஈசனே ஒரு கணப் பொழுதாயினும்
உன்னருகில் இருக்க வரம் தா” வென்றான்
வானம்பாடி சரோஜினியோ
Lead kindly light, amid the
encircling gloom என்றாள். அவ்வண்ணம்
உள்ளமே கோவிலாக உருப்பட்டோம்
அவன்செயல்

ஜெய்சாய்ராம்

தஞ்சம் தாருமையா

பாதுகைகள் செல்லுமிடம் சாயிநாதனே - உந்தன்
பக்தர்குழாம் திரளுதையா சாயிநாதனே
மாரிபொழி மழையெனவே சாயிநாதனே - நின்றன்
மகிமைபொழியக் கண்டு நின்றோம் சாயிநாதனே

வாசமலர் ஏந்தி நின்றோம் சாயிராமா - அதைத்
தூவி வணங்கிடுவோம் சாயிராமா
பாதச் சுவடுகளை நெஞ்சில் பதித்தே - நாம்
பம்பரமாய் ஆடிடுவோம் சாயிராமா

பாதுகைகள் சுமந்ததலைப் பரதனானோமே - நாம்
பரவசமாய் பார்த்திருந்த இளவலானோமே
அருளாட்சி பெற்ற (அ) யோத்திக் குடிகளானோமே - நாம்
ஆன்ம ஈ டேற்றம் பெறக் கருணை காட்டுமே

சத்யம்தர்மம் சாந்திபிரேமை சாயிநாதனே - உந்தன்
பாதம்பணிந் தெழுந்துவிட்டால் பணிந்து வந்திடுமே
வாய்மைநிலை நாட்டவந்த அவதாரமே - நின்றன்
தாள்கள்தனைத் தொழுதுநின்றோம் தஞ்சம் தாருமையா

- 1998

AT THE LOTUS FEET

1. You are the magnet that draws us forth
   You never plan it Swamy
   You are the love form that our heart yearns
   You never call us Swamy

ch:

Its blissful to live, in this millanium
We are thankful Swamy
We surrender at thy, Lotus feet
With eternal glory Swamy.

2. You are the master that urge us to service
   You never demand it Swamy
   Your life is the message that teach us virtues
   You never force us Swamy

3. Thou art the god and the lord of the world
   Thou also worship parents
   Thus shows us Dharma to respect the elders
   Thou art a model Swamy.

- 2000

HIS MASTER'S VOICE

OH! Baba myLord and my God
I wish I were nearer to you abode
All the days all the months and all through the year
I wish I shall have a glimpse of thee, there

Blessed are those who live in there
The wonderful Putterparthy is your choice
no one knows of the village where
Till the world echoed His masters voice

With sparkling eyes a slim short figure
With orange attire trots purifying the air
With Hands raised in a blessing posture
There comes our Eternal Bliss, so dear

When I cried for thee thou stares at me
Through intensive look; the ignorant in me flee
whatever the purposeful look poured on me
Really I lost myself immercing in the love of thee

The world stopped in front of me I am dazed
Drinking the Nectar half closed I gazed and gazed
Heart elated, mouth dumbed mind prayed
Let my heart be filled with love and be portrayed

1999

எம்மைக் கவர்ந்த இரு விபுலானந்த அமிர்தம்

I

மீன்பாடும் தேனாட்டின் மேன்மைதனை விண்டுரைக்க
தானாக வந்துதித்த தங்கமகன் நீயையா
வானாக முட்டிநின்ற வகைபுகழ்கள் கேட்கமுன்னர்
நானாக வீழ்ந்துவிட்டேன் நற்கருத்து இரண்டெடுத்து

நுங்கும் நுரையுமாய் பொங்கும் கங்கையில்
மங்கல் மாலைப் பொழுதொன்றில் ஓலையிலே
தங்கக் கருத்தொன்றைத் தரணிக்குத் தந்தவனே
எங்கள் மயல்தீர்க்கும் மாமருந்துத் தத்துவமாய்

II

கங்கையின் அக்கரையில் காசிப்பூர் சுடுகாடு
நுங்குதல் வேண்டி ஊளையிடும் நரிக்கூட்டம்
அந்திமத்தை உணர்த்தி அயரவைக்கும் அப்பொழுதில்
சிந்தையில் விரிந்ததாம் சிறுகுச்சி படும்பாடு.

நீரலைகள் வந்து நிழலாடி எற்றிவிட
நீள் தரையில் கணப்பொழுது கிடந்த அச்சிறுகுச்சி
பேரலையில் அகப்பட்டு பேராறு புகுவதுவும்
எற்றுண்டு எற்றுண்டு மீள்தரையில் ஒதுங்குவதும்
ஆராவமுதமாய் ஆன்ம விசாரணைக்கோர்
அதிகார மையமாய் தத்துவமே விரியும்
பாராளப் பிறந்தாலும் பிறப்பும் இறப்பும்
மறுபிறவித் தொடராக இயன்று வரும் என்பதாம்

'கங்கைவிடுத்த ஓலை'க் கவியாலே
கருதிய பொருளை விளக்க நின்றார்
சங்கிலி போலத் தொடரும் பிறவியை
சருகாம் குச்சி அலைப்புண் டதனை
இங்கிதமாக மேற்கோள் காட்டி
இகபர தத்தவம் இயம்பி நின்றார்
துங்கம்சேர் வாழ்வு செயற்பட நாமும்
தூயவன் அடியிணை போற்றி நிற்போம்.

III

இன்னும்ஓர் செய்தி இயம்புவன் கேண்மின்.
பன்னரிய தத்துவங்கள் பகன்றவனின் அறிவுரை
பள்ளிப் பருவத்துப் பாலகியாய் பயில்கையிலே
உள்ளந் தெளிவில்லா இருமதக் கோட்பாட்டுள்
தள்ளல் அறியாது தயங்கித் திகைக்கையிலே,
தக்கதாம் கருத்தொன்றைத் தந்தாரே தெளிவாக
விள்ளற் கரிய பேருவகை கொண்டனன் யான்
கள்ளமில் உள்ளத்து யேசுவா சிவனாவென

வெள்ளை நிறப் பூவுமல்ல
வேறெந்தப் பொருளுமல்ல
உள்ளக் கமலம் தான்
உவந்தேற்பான் இறைவனாம்.
சொல்லித் தெரிய வைத்தான்
சுந்தர விபுலானந்தன்.
கள்ளங் கபடமற்ற
கறை படா நெஞ்சந்தான்
வள்ளல் இருப்பிடமாம்
வாருங்கடி கேட்டிடுவோம்.

இறைவன் ஒருவன் விரும்பும் மலரே
இதயத் தாமரை நெஞ்சம் என்றான்
மொட்டவிழ் புத்தம் புதுமலர் விரிய
சுகந்தம் வீசும் பசுந்தளிர் இதழ்கள்
நித்தமும் குளிர்மை அழகு மென்மை
கயவரின் கைபடாக் காரிகை அவளோ

கயத்தின் நடுவே தண்ணெனும் பின்னணி
அழகை மறைக்க செடி கொடி மரமிலை
நீட்டி நிமிர்ந்து பட்டொளி வீசித்
தருக்குடன் நிற்பாள் தாமரைச் செல்வி.

உள்ளமாம் தாமரை உயர்வாய் இதுபோல்
மாசு மறு அற புனிதமாய் இயங்கின்
காமம் குரோதம் லோபம் மதம் ☞

மோகம் மாற்சரியம் ஆதியாம் குற்றங்கள்
அணுகாது நிர்மலமாய் இதயம் துலங்குமேல
ஆதி பகவன் உவந்தேற் பாரே.

காமம் என்பது பேராசை
ஆசைகள் பெருகும் ஒன்றன் பின் ஒன்றாக
இருப்பதைக் கொண்டு திருப்தி யடையா
வறட்டுக் கௌரவ மனிதர் யாமே.
ஆலாய்ப் பறந்து அநீதிகள் செய்து
பொய்யும் புரட்டும் களவுங் கொலையுமாய்
பஞ்சமா பாதகமும் அஞ்சாமல் செயவைக்கும்
காமம். தொடர்வது சினமெனும் **கோபம்**
நேத்திரம் சிவக்க சுவாசம் ஒழுங்கற
காத்திரமான கனல் கக்கும் சொற்கள்
ஆத்திரமானது அறிவைக் கெடுத்து,
அதிரடிச் செயல்கள் செய்ய வைத்து,
அழியவைக்கும் கௌசிகன் தவமாய்.

கஞ்சப்பிரபு கெஞ்சியும் **ஈயாலோபம்**
வஞ்ச மனத்தோன் பயனிலாச் செல்வம்
கொஞ்சமும் தமர்பிறர் அனுபவிக்காது
நஞ்சடைப் பிணமாம் அருளே யில்லான்.

உள்ளப் புணர்ச்சியே உண்மைக் காதல்.
உடலின் வெறியே உரைக்கும் **மோகம்**
தனக்கே தனக்கெனும் உரிமை வெறியாம்.
அடைந்தே தீருவேன் அல்லது அழிவேன்
மோக வெறியின் மோட்டுத் தனமாம் .
இராவணேசன் இதற்கோர் சாட்சியே.

ஐந்தாய் வருவது **மதமெனும்** ஆணவம்
தன்னை விட்டொரு மன்னன் யாருளன்?
கல்வி செல்வம் அரைகுறை ஆயினும்
ஆணவச் செருக்கு மனிதரை மதிக்காது
நாடியுயர்த்தி தலையை நிமிர்த்தி
திமிர் நடை காட்டும் அழிவைத் தருமே.

அடுத்து வருவது அழுக்காறாம் **மாற்சரியம்**
பிறன் வாழ்வு கண்டு பொறாமை கொண்டு
அறத்தினீங்கி தீங்குவிளை விக்கும்.
திறமையை வளர்த்து சிந்தனை யெல்லாம்
வியூகம் வகுத்து விழுத்தும் செயலே.
அந்தஹோ அவனது செயலெலாம் அழிவே!

அறுவகைக் குற்றம் அற்றதோர் உள்ளம்
அரனார் விரும்பும் அதியுயர் மலராம்.
உயரெண்ணம் தோன்றி உள்ளத்தை நிறைத்தது
உள்ளக் கமலமடி உத்தமனார் வேண்டுவது.

விபுலானந்தர் வழிவழிநின்று
விரும்பும் உயர்வுகள் பலபலபெற்று
ஆன்மபலத்தை அருளுடன் இணைத்து
அறமது ஓங்கி வையகம் செழிக்க
அன்புடன் வாழ்வோம் சேவைகள் புரிவோம்.

2004

சமரசம் காண்போம்

தெய்வம் ஒன்றே பாதைகள் பலவே
பாதைகள் பலவாயினும்
மூலச் செயல் ஒன்றே. அச்செயல் எதுவோ
அதுவே அன்பு செய்தலாம்
அன்பின் வழியே உள்ளொளி துலங்கும்
சோதிதுலங்க ஞானம் பிறக்கும்
ஞானம் முதிரின் சத்யயுகம் வருமே.

சிவனார் சொன்னதும்,
கிருஷ்ணர் பகர்ந்ததும்
ஜீசஸ் மொழிந்ததும் அல்லா அறைந்ததும்
புத்தர் பகன்றதும்,
இதரமதங்கள் இயம்பி நின்றதும்
வள்ளலார் பயின்றதும்
இவ்வழி ஞானமே.
சமயம் எதனையும் சகிப்போம்
சண்டையில்லாது சமரசம் காப்போம்

தமிழும் தொன்மையும்

தமிழும் வாழ்வும்

தமிழெங்கள் தமிழெம் தாய்மொழியே கண்டீர்
மொழியொன்று நம்கருத்தைக் காவுமொரு சாதனமே
தாயோடு தந்தை சுற்றம் தயவான நண்பர் மூத்தோர்
வாயாரப் பேசி நம்உணர்வுகளைப் பரிமாற,
காவுமொரு தொடர்புச் சாதனமாய் வலம்வருமே.

நம்மொழிச் செம்மை, தொன்மை, வண்மை, பருமை
வேறு மொழி எதற்கும் இல்லை என்பதெம்பெருமை.
எத்தனையோ மொழிகள் இவ்வுலகில் உண்டெனினும்
அத்தனையும் கற்றுவந்த ஆளுண்டோ சொல்வீர்?
வளர்மொழிகள் பலஇன்று தமிழ்மொழிக்கு நிகராக
கிளர்ந்தெழும் வாய்ப்பு வளம் வந்து கொண்டிருக்கிறதே

நான்கு மொழி தெரிந்தவன் தமிழ்ப்பாடல் நயந்துவந்து
'தேன் வந்து பாயுது காதினிலே' எனச் சொல்லின்
அதில் அர்த்தம் உண்டு - அறிவோம் நாம்!
தனியொரு மொழியே தெரிந்த ஒருவன்
அதுவே திறமெனக் கதறின் பயனுடைத் தாமோ சொல்வீர்!

தத்தமக்குத் தத்தம் மொழி தரமிகுந்ததுதான்
பக்தி பாசம் பரிவுநேசம் அதன்மேல் எமக்குண்டு
உரிமைக்காக உருத்தெழுதலும் இயல்பே ஆனால்
முத்திப்போனால் வெறியா கும்மே. கவனம்!
பாசம் வெறி யாகு முன்பே பண்படுதல் நம்கடனே

வெறிஏறி விட்டால் நீதி நியாயம் பூச்சியமே
'தெறிகெட்டுச் செத்த வடமொழியின் சொற்களென
குறியேதுமின்றிக் கூறிட்டு நிராகரிப்பார்
அறிவறிந்து பயின்றுவந்த தத்தனையும் புறம்போ?
சொறியாது சேர்ப்போம் தூயதமிழும் ஆக்கிடுவோம்.

☞

தமிழினது தொன்மை அறியாத ஆய்வா ளரிவர்
புதைபொருளாராய்ச்சி புகுவதைக் கருத்தெடாது
நாளுங் கோளுங் கொண்டும்;
பயிலும் வார்த்தைகொண்டும்; கணித்தாராம் காலம்.
விஞ்ஞானச் சான்றுகள் எனக் கூறித் தொன்மையை
விட்டொழித்தார் அரைகுறை ஆய்வுகள் நடத்தியே.
களையெடுத்தல் புல்லையோ? கதிரெறியும் நெல்லையோ?

தமிழ் மொழிக்குப் பிறந்த பலமொழிகள் வாழுமின்று
சிங்களமும் பாண்டியத் தமிழ்கலந்த புதுமொழியே
கண்டங்கள் தோறும் பயில் மொழிக ளூடேயும்
ஆங்காங்கே தமிழ்சொற்கள் விரவிவரல் காண்பீர்
ஆயிரமாயிரம் ஆண்டுகள் முன்பே
அத்திவாரமாய் நின்றதோ கலந்ததோ
அறுதி யுறுதிகூறி அறிவோம்
இத்தனையும் மகாப் பெருமைதாம் எமக்கு

பற்று வெறியாயின் பகரவொணாத் துன்பம்
பண்புகெட்டு வெறுப்பு, மாறுமே வன்முறையாய்
தீங்குசெயமுனையும். வசைமாரி பொழியும்;
சாணி அடிக்கும். நெருப்பில் எரிக்கும்.
இடம்மாறிய அரசுக்கோபம் மொழித் துவேஷமாகும்
வேற்றுமொழியை அறிவுக்கேனும் படித்தலைத் தடுக்கும்
துவேசங்கள் தமிழின் செழுமையை மாய்க்கும்
மொழிகள் பலகற்போம் நம் தமிழ்மொழியும் வளம்பெறும்

தமிழ்எங்கள் உயிரெனில் உயிரும் ஒருநாள் பிரியும்
வாழ்ந்த வாழ்கின்ற வாழும் மொழி நம் மொழி
தமிழின் புகழ்பாடிப் புதுச்சொற்கள் படைத்திடுவோம்
உலகக் கிராமத்தில் தொன்மைத் தமிழ் பரவி
வாழ்க வாழ்கவென வாழ்த்திடுவோம் வாரீர்
வாழ்க நம்செந் தமிழ் வாழ்க நம் செம்மொழி
வாழ்க வளர்க என வாழ்த்துப் பாடிடுவோம்.

மலரும் தமிழ்

இராகம்: சிவரஞ்சனி தாளம்: ஆதி

என்றுமுள செந்தமிழின் இன்பநுகர் வண்டாக
அன்புடனே அர்ப்பணிப்பாய்க் கற்றதனால் - நன்றிசொல்
வண்ணமுனை வாழ்த்தி வணங்குகின்றேன் தாயே
கண்ணெனவே தந்திடுவாய் தமிழ்

பல்லவி

அகில உலகிலும் ஆதிமொழி நீ யெனவே
அறிஞர் பலர்சொன்னார் தாயே.

அனுபல்லவி

ஆய்வாளர் நிரூபிக்க அடியேன் மனமகிழ்ந்தேன்
சாகாவரம் பெற்ற தமிழ்மொழியே தாயே.

சரணம்

ஆரியமொழி ஒன்றே அதியுயர் மொழி என்றே
ஆரியர் எமக்கு ஓதிவைத்தனரே
சீரியமொழி தமிழ் சிங்காரி தானென
சிந்து நாகரீகமும் செப்புகின்ற தன்றோ.

சங்கம் இருந்த தமிழ் சான்றோர் வளர்த்ததமிழ் - முச்சங்கம்
பொங்கிப் பெருகியொரு கங்கைவரை பரந்த தமிழ்
காவியம் படைத்ததமிழ் ஐம்பெருங் காப்பியங் கண்டதமிழ்
அறம்பொருள் இன்பம் வீடாம் நான்கெனப் படைத்ததமிழ்

உலகில்வாழ் பலமொழியுள் ஊடுருவிநிற்கும்
அலகிலாத் தமிழ்சொற்கள் ஆன்றோர் காட்டுகின்றார்.
இலகுதமிழ் பயிலும் இன்முறைகள் கண்டுவந்தால்
மலரும் தமிழ்எங்கும் மாண்புறவே வாழும்.

ஔவைத் தமிழ் - பாலர் பாடல்

ஔவைப்பாட்டி நம் பாட்டி
அகிலமும் வாழ வாழ்பாட்டி
ஆத்திசூடி தந்தவராம்
அளவில் பாக்கள் யாத்தவராம்

நீதி நூல்கள் பற்பலவும்
நேரிய முறையில் தந்திட்டார்
வேத நெறியில் பாக்களையும்
வேண்டிய அளவில் தந்திட்டார்

அரசன் ஆண்டி முகம்பாரா(து)
அனைவரும் ஒன்றாய் தெரிவாராம்
மனித நேயம் மிகுந்தவராம்
மாண்புப் பாட்டி இவரல்லவா

புதுமைக் கவிஞன் பாரதியும்
புரட்சிக் கவிபல தந்திட்டான்
ஔவையைப் போற்றும் அவன்கூட
புதிய ஆத்தி சூடிவிட்டான்

கவிஞர் புலவர் வரிசையிலே
மக்கள் கவிஞரென விளங்கும்
ஔவையின் சிறப்பே பெரிதென்று
அறைந்து கூறினான் பாரதியும்

அன்னை தமிழே அடிபணிவோம்
ஔவை தமிழை நாம் பாடி
ஆணவக் கும்பலை அழித்தொதுக்கி
அன்பு வாழ்வை மேற்கொள்வோம்

1992

மேன்மை பெற்று வாழ்வதற்கே!!

இராகம்: சண்முகப்பிரியா தாளம்: ஆதி

பல்லவி

மலைமீது நீ பிறந்தாய் - பொதிகை
மலைமீது நீ வளர்ந்தாய் - மன்னர்
மடிமீது நீ தவழ்ந்தாய் - மக்கள்
மார்பினிலே நீ தவழ்ந்தாய் தமிழே

அனுபல்லவி

பாவாணர் நாவினிலே பரத மாடி - நீ
பூவாழும் மக்களுக்குத் தென்றலானாய் (மலை)

சரணம்

இமயமலையின் எல்லைவிட்டே - நீ
குவலயத்தின் வரைகள் தொட்டே
எட்டியடி வைத்தாயடி - தமிழே
பட்டம்விட்டுப் பாடுகிறாய் - தாயே (பட்டம்)

ஏழைத் தமிழன் கூலி யானான்
ஈழத் தமிழன் அகதி யானான்
பார்முழுதும் நீ பரவி வாழ்வதற்கோ - தமிழே
பயங்கரங்கள் எமக்குவைத்தாய் தாயே. (மலைமீது)

சோழ மன்னர் நாடுகாட்ட
கீழைத்தேய மாந்தரூடே
சலங்கைகட்டி ஆடிவந்தாய் - தாயே
இலங்கும் எழில் சேர்த்து வந்தாய் நீயே. (மலைமீது)

மேலைத் தேய மக்களாட்சி
மேவமாட்டார் நம் அரசவெறியர்
மேற்குநோக்கி ஓடவைத்தது - தமிழே நீ
மேன்மை பெற்று வாழ்வதற்கோ தாயே. (மலைமீது)

1992

பொங்கு தமிழ் ஏன்? - I

பொங்கு தமிழ் எழுச்சி காணப்
    பொலிந்து நின்றார் நம் தமிழர்
அங்கு நிற்கும் மற்றவர்கள்
    தமிழர் தொகை காண வந்தார்
தம்பி! வாடா, தகைசான்ற நல்
    தமிழர் வரிசை காண்பிப்பேன்
எம்பிநின்று பார், பார்த்தா!
    ஏகதேசம் தமிழர் தலையே

உலகளாவிய தமிழர் அனைவரும்
    உவந்தேத்தும் தலைவன் அவனென,
இளமை முறுக்கு, வீரம்உறுதி
    சிங்கே றனைய அமைப்பு, முறுவல்
தலைமைப் பண்பின் சிகரம், அறிவுச்
    சுடர்வீசும் கண்கள், பொருந்தத்
தளராக் கம்பீரத் தோற்றக் 'கட்அவுட்'
    நிமிர்ந்து நிற்கிறது தலைவாசலிலே

ஏனிந்தப் - பொங்குதமிழ் எம்நாட்டில் என்றேநீ
    கேட்கும் கேள்விக்கு விடைஎன்ன என்கிறாய்?
வான்கோழி ஆடாது கானமயில் ஆட்டம்.
    நாமதை நன்குணர்ந்தும் நாடுவிட்டுப் புலம்பெயர்ந்த
பான்மையினால் நம்முள்ளச் சலனத்தால், சபலத்தால்,
    பண்பாடு கலாச்சார மிழந்தோம்; மொழி மறந்தோம்;
நாம்தமிழர் அடையாளம் தொலைத்தோம். நம்புதல்வர்
    ஏதுமறியாது வளர்க்கப் படுகின்றார் இங்கே.

        தொன்மை பெறுமொழி நம்மொழி
        பன்மொழி பெற்றெடுத்த தாய்மொழி
        பன்னாட்டு மொழியூடு பரந்தமொழி
        காவியம் காப்பியங் கண்டமொழி
        முதன்மொழியாய் சாகா வரம்மொழி
        செந்தண்மை யோர்போற்றும் செம்மொழி.

கூலிமொழியல்ல நம்தாய்மொழி
பாமர மொழியல்ல நம் தமிழ்மொழி
கூலிக் காரரல்ல நம்ஈழ மக்கள்
குதிரைக் காரரல்ல நம் யாழ்மக்கள்
பாரம் பரியம் நீண்ட தமிழ் மக்கள்
ஆண்டாண்டாய் தமிழ்ஈழம் வாழ்மக்கள்

தாய்மொழிகற்றல் தவமல்லவா
தாய் நாடுபோற்றல் நம்உயிரல்லவா
தம்மொழி பேச வெட்கமென்ன?
தமிழ்மொழி கற்பதில் கஷ்டமென்ன ?
நுண்ணறிவு பெருகும் தன் தாய்மொழியாலே
நுண்ணுணர்வு பரக்கும் பன்மொழி கற்றலிலே

செம்மொழி யெங்கள் தமிழ்மொழி
செத்துப்போன மொழியலவே
உற்பத்தியான நாட்தொட்டு உயிருடன் உயிர்ப்புடன் உயர்ந்து
விளங்கும்
பாரெல்லாம் போற்றும் பண்பாடு கலாச்சாரம்
பௌத்திரமாகப் போற்றி வாழ்ந்தால்
சீரழிவு இல்லை சிறுப்பினை இல்லை திசைகெட்டுப்
போவதில்லை
உணர்த்துமே பொங்குதமிழ் புலம்பெயர் இளைஞர்கட்கு
தாய்மொழி தாய்நாட்டுப் பாந்தம் பெருகும்
பாசம்பெருகின் அங்கேஅவற்றின் அவலம் புரியும்
"வன்முறை எனும்போர் - வசையல்ல, நியாயமே.
பயங்கர வாதமோர் பழிச் சொல்லே", உணரும்;
விடுதலைப் போரில் வேட்கை பிறக்கும்.
எவ்வகை யிலேனும் பங்களிப்பு நிகழ்த்தும்;
வாழும் நாட்டில் அவமானம் போக்கும்;
வாழவந்த நாட்டுக்கு வாய்மையை விளக்கும்.

பொங்கு தமிழ் காட்சி II

கனடா வாழ் தமிழர் கண்டுவந்த பொங்கு தமிழ்
பொங்குதமிழ் காணப் போந்துநின்றார் மாணவர்
மாணவர் உணர்வலைகள் மற்றவரைக் கவர்ந்தீர்க்க,
கவர்ந்தீர்க்கும் சத்தியனாய் உத்தமனாய் தலைமைஏற்ற
சிங்கேறனைய தங்கத் தமிழன் பிரபாகரன் 'கட்அவுட்'
பொங்குமெம் நெஞ்சம் பெருமையால் விம்மலுற
ஓங்கிவளர்ந்து உயர்ந்து நிற்கிறது அங்கேபார்.

'சிறுபிள்ளை வேளாண்மையாம் சீரழியுது தமிழின'மென
இறுகிய நெஞ்சத்து ஏதிலர்போல் கறுகறுத்த
கற்றார் குழாமொன்று கையிற் கொடியோடு
"வேளாண்மை விளைந்து அருவிவெட்ட ஆயத்தமாம்
நம்பவே முடியலையே நாமவர்க்குக் கட்டாயம்
ஆதரவு தருவோமென" அதோ வந்து நிற்குது பார்

"தரமற்ற பிள்ளையல்ல தலைநிமிர்ந்த இளைஞரவர்
அடிமைப் புத்திக்கு அடிதந்து நிமிர்த்தியவர்
வாருங்கள் கைகோர்ப்போம் வைதது போதுமப்பா
தோள் கொடுப்போம் துணையிருப்போம்" எனக் கூறி
மேல் தட்டுக்கனவான்கள் தமிழரே நிற்கின்றார்
பார் ராசா, பார் கோட்டும் சூட்டுமாய் அங்கேபார்!

களையெடுப்பால் தாக்குண்டு காததூரம் போனவர்கள்
நிலைகண்டு சிலைநின்று "ஊரோடுது ஒத்தோடுவம்
எம்மொழி தமிழ்மொழி எம்தேசம் தமிழீழம்
இன்றெமக்கு விடிவாயின் கைகொடுப்போம் வாரீரெ"ன
வேற்றுமையில் ஒற்றுமைகாண் வீரரென விரைகின்றார்.

"தாங்கள் தாம் தொண்டர்களாம் நாமெல்லாம் சுயநலராம்
கூறிக்கூறியே எம் மானத்தை வாங்கினரே உளச்சுத்தம்
பாராது பட்டங் கட்டி ஒதுக்கினரே" எனக்கூறி மாய்ந்தவர்கள்
ஓடிவருகின்றார் பார், இளைஞருக்குத் தோள் கொடுக்க
பார் பார்த்தா, பார்! பரவசமாகு தன்றோ! ☞

உற்றாரை உறவினரைத் தம் உயிர்காக்கக் கைவிட்டு
வற்றாத கவலையுடன் மண்துறந்து வந்தவர்கள்
வக்கிரகங்களுடன் சேர்ந்து வசவுகள் பாடி,
வஞ்சங் கொண்ட நெஞ்சோடு நஞ்சினைக்கக்கிமேலும்
அவதூறு பரப்பி அவமதிக்க வென்றே
கங்கணங் கட்டிய கரவுநிறை மாந்தராய்
இன்றளவும் வாழ்ந்தோர் இளைஞர்உத் வேகங்கண்டு
பழசெல்லாம்தாம்மறந்து பயிலுகின்றார், பார் பார்த்தா!

அலையலையாய் பெருங்கூட்டம் முட்டிமோதி வருகுது பார்
ஆணென்ன பெண்ணென்ன பதின்வயதுப் பாலகரென
கடலலையாய் இரைந்து விரைந்தோடி வருகின்றார்
அதன்பின்னால் பார் பார்த்தா, சிவப்பு மஞ்சள்உடையணிந்து
அணிவகுத்து வருகிறது இளைஞர் யுவதிகள் படைஒன்று
தொடக்கம் தெரிகிறது முடிவு எங்கே? நீண்டு போகிறதே
உயர்த்திப் பிடித்த கரமொன்றில் ஒரு கடதாசிமட்டை
என்னவென்று பார் பார்த்தா ஓ! எங்கள் தலைவன் பிரபாவின்
ஆளுமை அர்ச்சிக்கும் - முறுவல்பூத்த நிழற்படமோ!
கனடாவாழ் தமிழ்காளையரும் கன்னியரும்
வீரமும் விவேகமும் முகத்தில் விளையாட
உறுதியும் உரமும் உடலில் நடமிட
ஒற்றைக் கைவீசி அணிநடையில், ஐயோ! ஆயிரம் கண்
வேண்டுமே!
வெவ்வேறு பலகலைக் கழக மாணவர்
விபரம் அறிந்து விரைந்துவந்து வியாபித்து உதவுகின்றார்

வேற்றுமை மறந்தோம் ஒற்றுமை காண்போம்
தமிழன் சக்தியை ஒன்றுதிரட்டித் திருவினை யாக்குவோம்;
தமிழ்ஈழம் பொதுச்சொத்து நாமதைக் காப்போம்;
எல்லோரும் ஒன்றானோம் சேர்ந்து நம் பலங் காப்போம்
என்றே பல்வகைப் பல்குணத் தமிழர் திரண்டு நின்றனர்.
நன்றே கண்டனம் இத்தனை தமிழர் இன்றைய நிலையில்
ஒன்றே தலைவன் ஒன்றே கொடியெனத் திரண்டனர் கூட்டம்
வென்றே எடுக்கும் தமிழீழத்தாயகம்
நன்றே சொன்னோம் நாமகளுறையும் நாவினாலன்றோ.

தமிழ் எந்தன் தந்தை என்பேன்

தமிழெங்கள் தாய்என்றார் உயிரென்றார்;
தவழும் இளங்கன்னி யென்றார்;
அமிழ்தினும் இனியதென்றார். இன்னும் எத்தனையோ
அனைத்தும் உண்மையோ அறியேன்.
தாயென்ன புதுமை செய்தாள்,? தாய்மார்கள்
தவறாது செய்ததையே அவளும் செய்தாள்
பெற்றாள் வளர்த்தாள் பேருமிட்டாள்
ஊறிய பாலை ஊட்டி விட்டாள்
வேறென்ன புதுமை செய்தாள்
"பெலத்துச் சிரிக்காதே அதிர நடக்காதே
உரத்துப் பேசாதே முன்னுக்கு ஓடாதே
வாசலில் நிற்காதே வாய்க்குவாய் காட்டாதே"
எதிர்மறை வினைகளால் வாட்டியெடுத்தாள்
காலத்துக்கு முன்னரேயே
குழந்தைமையை முதிரவைத்தாள்
இதிலென்ன புதுமைகண்டோம்
காலத்துக்கேற்ற புதுமை ஏதையா?

II

தமிழெங்கள் தந்தைக்கு நேரென்பேன்
சொன்னால் பிழையாமோ?
"தந்தை சொன்மிக்க மந்திரமில்லை"
சொன்னவள் ஔவை அவள் என்னவள்.
உணவூட்டினார் உரமூட்டினார் உப்புக்காவினார்
தோளிற் சுமந்தொரு கோயில் காட்டினார்
பள்ளிக் கனுப்பி வாழ்கல்வி தந்தார்
அன்பே உருவானார் அகிலத்தில் உயர்த்தி வைத்தார்
தாய் தடுத்தபோது மெமை உயர்கல்வி கற்க வைத்தார்
அகிலத்தில் பெயர்பெற்ற பெண்கள் கதைபடித்தார்
முந்தியிருக்க வைத்தார் முற்போக்காய் சிந்தித்தார்
புதுமைப் பெண்ணாக்கிப் புரட்சியை விதைத்து வைத்தார்
ஆஹா தந்தைபோல் யாருளர் இப்புவியில்

III

தந்தை தமிழோ,
புலவர் நாவெல்லாம் புரண்டுவந்தார்
புத்தம் புதுமொழியைப் பெற்றுப் பெரிதுவந்தார்
தந்தைத் தமிழே முன்தோன்றி மூத்த தமிழே
கன்னடத் தோடியைந்த
கவின்மொழி பலவும் பெற்றாய்
பன்னாடும் சென்று பெண்மார்பு தோய்ந்து வந்தாய்
தாயெனில் கற்புநிலை தவறாதவளாம்
தந்தையெனில் பலதாரம் வைக்கலாமாம்
பண்டைத்தமிழர் பண்பாட்டுக் கூறிதுவாம்
மன்னரோடனைய மக்களும் அவ்வாறே
பலதாரமணம் புரிந்தார்
பண்பாட்டுக்கேற்புடைத்தாய்.
"அறவிழுந்தது பண்டைய வழக்கம்"
என்றவன் பாரதி, அன்றில்லையே.

IV

தந்தைத் தமிழே, தமிழ்த் தந்தையே
நீயும் அவ்வாறே
எந்தை அயல்வீடு சென்றதில்லை
இது இருபதாம் நூற்றாண்டு - ஆனால்
அது பல இருபதின் வர்க்கங்களின் முன்னர்.
நாடு நாடாய்ச் சென்றாய் நற்பெண்களைச்
சேர்ந்துவாழ்ந்தாய் வாழ்ந்துன்
அடையாளம் விட்டுச் சென்றாய்
விதைகள் மரமாகி வெவ்வேறு
கோலங் காட்டினாலும் - நான்
கண்டம் விட்டுக் கண்டம்
செல்லும் போதெல்லாம்
நின் சாங்கம், நின் உறவு, நின் அன்புமுகம்
நீவிட்டுச் சென்ற சுவடுகளைக் காண்கின்றேன்
அகம் மகிழ முகம்மலர உனை நான் ஆராதிக்கிறேன்
தந்தையே உனக்காக என் தமிழால்
உலகை ஆள்வேன்
மகள் தந்தைக்காற்றும் செயலல்லவா இது.

2. நாடும் நடப்பும்

கனடாவுக்கு வணக்கம்

இராகம்: சங்கராபரணம் தாளம்: ஆதி

பல்லவி

கனடா நாடு நமதே
கனடா நாடு நமதே
காலமெலாம் அதைப் போற்றிடச் செய்வோம் (கனடா)

அனுபல்லவி

பல்லினமக்கள் வாழும் நாடு
பன்மொழி மாந்தர் பயிலும்நாடு
பன் மதம் செழிக்கும் பாங்குள நாடு
பலரும் போற்றும் கனடா நாடு (கனடா)

சரணம்

வாடி வந்தோரை வாழவும் வைத்தாய்
பாடி வந்தோரையும் அணைத்தாய் நீயே
நீதி கேட்டோம் எமக்குஆறுதல் தருவாய்
நின்குரல் எழுப்பி நியாயம் காப்பாய் (கனடா)

உண்மை உயர்வுடன் உழைப்போம்
உந்தன் சுதந்திரம் என்றுங் காப்போம்
ஒளிவளம் சுடரும் எங்கள் வீடே
ஒற்றுமையாக நாம் உமைக்காப்போம் (கனடா)

மக்கள் ஆட்சியில் மாண்புற நின்றாய்
மக்கள் இறைமை காத்து மகிழ்ந்தாய்
மக்கள் சுதந்திரம் பேணப்படவே
மற்றைய நாடுகள் மானமும் காப்பாய் (கனடா)

(தமிழை இரண்டாம் மொழியாகக் கற்கும் மாணவருக்கான வகுப்புக்கு எழுதப்பட்டது) 1993

பனி பெய்த ஓர் இரவில்......

பல்லவி

பால்போல் நிலவே வீசுகுதே - பனிப்
போர்வையில் பூமி தூங்குகுதே

அனுபல்லவி

கண்ணாடி யன்னல் களூடே - கன்னி
கண் கவர் காட்சியில் லயித்திருந்தாள்

சரணம்

காதல் கனியாக் காரிகை அவளும்
காட்சியின் மையலில் திளைத்தருந்தாள்

காலம் ஒருநாள் கனிய வைக் குமென்றே
காதலன் காத்திருந்தான்

தாரகை மாலை சந்திரப் பதக்கம்
வாடையின் குளிர்ச்சி ஜில் எனும் சிலிர்ப்பு
பௌர்ணமி மதியும் பூரணகும்பமாம்
மௌனத்தின் காட்சியில் மயங்குமே சிந்தை

இலையுதிர் மரங்களின் கிளைதொறும் பனித்துகள்
வெண்சற்றின் கவசத்தில் வெண்மணித்தரளங்கள்
அலங்கார வளைவுகள் யார்வரவைத் தேடி
அரச குமாரன் எவன் பவனி வரப்போறான்

இனிமையின் உச்சம் உள்ளமும் உடலும்
நெகிழ்ந்து வருத்த கொடி கொம்புக்கேங்க
இயற்கையை சுவைக்க இன்னோர் துணையா?
மையற் கண்களில் அவன் முகம் தெரிகிறது

☞

மெல்லத் தோளிற் சாய, மார்பில் கோலங்கீற
பின்னிப்பிணைந்துபடர, அங்கே அவன்முகம்
கருணை பொங்கும் விழிகள் ஒருகணம் கெஞ்சும் - பின்
அன்பு கனியக் கொஞ்சும் பரவசமாக்கும் பாதுகாக்கும்.

காதல்முகிழ்த்தது கனவுமலர்ந்து கனிந்தது
எப்போதவனைக் காண்பேனென ஏங்கும் அவள்நெஞ்சம்
காணாத நாணமும் கவிந்துகொள்ள
காதல்வசமானாள் அவள் காதல்வசமானாள்.

காதலின் நிபந்தனை (1)

அந்தப் பொருட்காட்சி மண்டபத்தில்
அடியேன் உலகத் தமிழரின் தொண்டராய்
விளக்கம் சொல்ல` சுற்றிச் சுற்றிவந்து
திருப்பித் திருப்பி சொல்ல வைத்தாய்
சினந்து ‘களிமண் மூளையே
கடந்து போ” என்றேனா, சிரித்தாய்
‘ஐ லவ் யூ’ சொன்னாய்
கண்கள் உண்மை பேசின.
“உலகத் தமிழரின் தொண்டனாய் சேர்
வேங்கைகள் தலைவனில் விசுவாசம்வை”
திருப்திகாணில், அன்றே
நானுமுன் காதலுக்கு அடிமை.

பாகு இறுகிப் பாறையாயிற்று

பகுதி I

வாடைக்காற்றே வாயுபிரானே
வடதுருவப் பனிக்கடல் முகந்து
சூல்கொண்டெழுந்து நீருண்டு கறுத்த
மேகந் தாங்கி மெல்லத் தவழ்ந்து
தென்கீழ் திசைக்கு ஏகுவீராயின்
இந்துசமுத்திர முத்தெனத் திகழும்
இலங்கைத்தீவின் வடபால் தமிழ்
ஈழமென்றோர் வேங்கை நாட்டின்
ஆங்கொரு பாங்கரில் அம்பட்டிய வத்தையில்
குடமூலைப் புளியின் படர்நிழற்கீழே

நீரின்றி வறண்ட கீறெனும் கண்கள்
உணவின்றி உலர்ந்த கன்னக் கதுப்புகள்
உறவுப் பிரிவினால் விறைத்த உடலினள்
குடங்கி முடங்கி குந்தியிருந்து
மோவாய்க்கட்டை முழந்தாள் பதித்து
பின்னிய கைகளுள் வதனம் புதைத்து
உயிர்த்து உயிர்த்து உலுப்பி வருந்தி
கணவனைக் காணக் காத்திருப்போள்

இவளோ,
விழுப்புண் பட்டதன் ஒரேதம்பி
தெவ்வர் சித்திரவதைக்கு அஞ்சி
நெஞ்சினில் மஞ்சங் கொண்ட
நஞ்சினைத் தஞ்சமடைந்து
துஞ்சினான் சின்னாள்முன்
சிந்தினான் இரத்தம் சொந்த மண்ணுக்கே

முதல்நாள் சூட்டில் தன்தந்தையை இழந்தனள்
மறுநாள் தாயும் தன் பதின்மத் தனையரும்

☞

பங்கருள் நொருங்கித் துண்டுகள் ஆயினர்
பாணுடன் வந்தவள் பதைத்து வீழ்ந்தனள்
நொருங்கிய வீடும் நோதல் தவிர்ந்த
நிணக் குவியலும் மூங்கையள் ஆக்கவும்
உயிர் தப்பியோர் ஊரை விட்டோடவும்
தட்டந்தனியளாய் -

கணவன் வருவான் காணாது அலைவான்
காத்திருப் பேனெனும் கற்பனையாலல்ல
மரத்துப்போன உணர்வுகள் செத்து
கையறுநிலையில் கதியும் இழந்து
மதியும் கலங்கி மனமும் அழிந்த
என்கண்மணியாளைக் கண்டுநீர் -

வந்தனன் நின்கணவன் வழியிற் கண்டனம்
என்றே மொழிமின் ஆறுதல் தருமின்
கூந்தல் கோதிக் குளிர்ச்சி ஊட்டுமின்
கவிழ்ந்த முகத்தை நிமிர்த்தித் தடவுமின்
உலகம் இதுவெனும் உணர்வை ஏற்றுமின்
சென்றே வருக சீரியல் வாடையே.

பகுதி II

அவனோ,

அக்கினி வளர்த்து அவியினைச் சொரிந்து
அம்மிமிதித்து அருந்ததி பார்த்து
அவையினர் தேவர் அனைவரும் சாட்சியாய்
மன்றல் புகுந்து மனையறங் காத்து
பிழைப்புத் தேடிப் பிறநாடு வந்தனன்.
சுற்றம் வாழச் சோர்விலாது அனுப்பினன்.
மனைவி தலையில் இருவழிப் பெற்றோர் அதனால்
இல்லற வாழ்வின் இன்பம் இழந்தனன்.

உரிமை குறைந்த அகதியான் இங்கே
கொடிய போரின் கோரங்கள் அங்கே
வீட்டுடனான தொடர்புகளற்றன
நாட்டின் செய்திகள் நடுங்க வைத்தன

பதின்ம வயதுப் பாலகர் இருவரும்
இதுமுது குரவரும் பொன்றினர் வீட்டொடு.
மதியும் கலங்கிய பத்தினித் தெய்வமும்
உயிரினம் ஏதும் அற்ற,எம் ஊரில்
பெயர மறுத்துப் பிச்சியாய் அலைவென
ஆற்றொணாத் துயர்தரும் அவலச்செய்தி.

"கண்ணே யுன்னைக் கைவிடேன் என்று
கடிமணம் புரிந்த மன்றல் வாக்கு
என்றோ பொய்த்ததே என் செய்வே"னென
நழுவிய நினைவில் மதிபிறழ் மனைவி.
இரங்கும் உள்ளம் பாகென உருகும்.

தவ்வல் இரண்டும் தூளியிற் தூங்க
தாலத்தருவில் படர்வெண் கொடியென
காதலி தழுவலில் நிலக்கீழ் அறையில்
பெருமூச் சொன்று நெடுமூச்சாகி
கன்ம வினையின் விதிவிளையாட்டென
இரட்டை வாழ்வின் அவலம் ஒழிந்த
நிம்மதி; மூடா இமைகள் சோர்ந்துமூட
பாகு இறுதிப் பாறையாயிற்று.

2000

விடுதலைக் காதல்

கருத்தொருமித்த காதல்
கணவன் மனைவி கூடல்
காலம் பலசென் றாலும்
மேலும் வளரும் காதல்

உடலோ டியைந்த காமம்
விடலைப் பருவ மோகம்
மோகம் கடந்த பின்னர்
மோதல் வந்தே தீரும்

அன்பைப் பெற்றால் அன்பைக்கொடுமே
அடியைப் பெற்றால் அடியைக் கொடுமே
அதற்கும் மசியா நிலையைக் காணின்
அடிமைத் தளையை அறுத்து எறிமே

தென் ஆசியப் பெண்கள் நிலையம - சஞ்சிகை 1992

முதுமையிற் காதல்

காதலின் புனிதம் கடைசிவரை நீடிக்கும்
காதல் அழிவதற்கு அதுஎன்ன பொருளியலா?
தேவையும் அளிப்பும் என்றே சொல்வதற்கு

காலத்தால் புடமிட்டுப் புடமிட்டு வளர்காதல்
உளங்கலந்து உடல்கலந்து உணர்வும்கலந்து
உயிரொன்றித் துய்க்கும் உண்மைநிலைக்காதல்

என்னாளும் வாழும் காதலின் பரிசாக
பின்னாளில் பிள்ளைகள் வீடு நிறைக்க
இல் வாழ்வில் இன்னல்கள் பொறுப்புக்கள் சுமைகள்
இன்பமும் துன்பமும், கடனும் கடமையும்
குடும்பசாகரத்துள் வேதனைகள் சோதனைகள்
இணைந்து அனுபவித்து இன்னலுறும் போதினிலே
காதல் நோக்கொன்று களைப்பைப் போக்கிவிடும்
புரிந்துணர்வு பொங்கிவர புத்துணர்வு தோன்றிவிடும்
ஒருவர்மீது ஒருவர் பரிந்து இரங்கிக் கதைபேசி
கரைந்து உருகவும் காதல் உச்சம் நிலை பெறுமே

கண்ணதாசன் வாழ்வு காலத்துக்கும் நீடித்தால்
காதல் வரும் அறுபதிலும் எழுபதிலும்
என்றிருப்பான்

உளங்கலந்த காதலுக்கு மூப்பேது வயதேது?
காதலே வாழ்வின் முழுவடிவம்
காதலே யாரையும் இயக்கும் தெய்வம்

என் முதிய நண்பர்களே ஏனிந்த வெட்கம்?
காதல் பற்றிப் பேசுதல் குற்றமா வெட்கமா?
இளசுகளின் இளிப்பு என்செய்யும் ஆதலால்
முதியோரே காதல் செய்வீர்
கவலை வேண்டாம்.

அழியாக் காதல்

காதலெனும் பூவின்று கண்ணீரில் கலக்கிறதாம்
கங்கைநதி திசைமாறி சாக்கடையில் கலக்கிறதாம்
சாதலெனும் சாசுவத நிலையெடுத்து சரிகின்றதாம்
சத்தியமாய் சொல்லப்பா காதல் ஒரு பூதானா?

வேதங்கள் சொல்லாத காதலா - தர்ம
நீதிகள் பகராத நேசமா - பிற
பேதங்கள் துளிர்விடலே மோசமாம் - வீண்
வாதங்கள் பேசாதீர் மூடர்காள்.

கருத்தொருமித்த காதலென்றென்றும்
கருகிச் சிதறுமா குண்டடிபட்டு
உடம்பொடு உயிரிடை காதல் எனவே
உரைத்தனன் வள்ளுவன் வார்த்தை ஒன்று
நட்பெனும் சொல்லையும் வழங்கினா னவனே
உயர்காதல் இலக்கணம் அதெனவே போற்றுவோம்.

காதல் என்பது காணேசன்பூ
காதல் என்பது வாடாமல்லிகை
ஒளிமழுங்கினும் நிறம்மங்கினும்
கடைசிவரை வாழும் வாடாமல்லிகை
மற்றதெல்லாம் காதலே இல்லைஇல்லைஇல்லை

காதல்என்பது திண்மையின் உண்மை
காதல்என்பது இனிமையின் இளமை
பூசனைக்குரிய புனித தாமரை
உள்ளப்புணர்ச்சி, உடலேயல்ல
வீரம் தியாகம் பசளையாக
அந்த காதல் நின்று நிலவும்

முழுமைபெற்ற காதலெல்லாம் முதுமைவரை ஓடிவரும்
முழுமையுடன் பண்பட்டால் பிறவிதோறும் தொடர்ந்துவரும்
முத்தான சொற்களிவை மொழிந்திட்டான் கண்ணதாஸன்
முழுமைக்காதலே வாழ்வின் ஜீவன் மெய்க்காதல் ஆகும்.

☞

காமப் போதையைக் காதல்எனில்
மோகமோ முப்பதும் அறுபதும்தான்
போதையடங்க அடங்கும் பொய்க்காதல்
வாதனை மிகுந்த வேதனை நிலைக்கும்

காதலாகுமோ கவர்ச்சிகள் எல்லாம்
காதலர்ப்பிரியாது கவுவக்கை நெகிழாதாம்
கண்ணகி கோவலன் காதல் இதுவாம்
விடுதல் அறியா விருப்பினன் கோவலன்
என்றான் இளங்கோ மாதவி காதலை
கவர்ச்சிகள் அனைத்தும் காதலாகா

பதின்மக் காதல் ‘பப்பி’க் காதலாம்
வெள்ளைச் சமூகம் துள்ளிச் சிரிக்கும். ஆயினும்
கவர்ச்சி தவிர்ந்த கருத்துணர் காதலும்
பதின்மப் பின்னரையில் தோற்றுவதுண்டு.
“நிற்பிரிவிலும் சுடுமோ அப்பெருங்காடு”
என்றனள் சீதை. அதுமெய்க் காதல்!
கண்டதும் காதல் கொண்டவள் சீதை
வயது பன்னிரண்டில் - அன்று
அகத்தின் அழகை முகத்தில் கண்டாள்
அதீத புத்திசால் அருமை ஜானகி
காதல் என்பது திண்மையின் உண்மை
சூழற் காரணி சோதனை கொடுக்கும்
மணம்குணம் நலம் ஒத்ததாயின்
வேறென்ன வேண்டும் மெய்க்காதலுக்கே
எதிர்ப்புகள் வரவே இதுதான் சாட்டென ஓடிடும் பொய்காதல்.
எதிர்ப்புகள் வரினும் எதிர்த்துப் போராடி வெல்லும் மெய்க்காதல்.

கைம்மையிற் காதற் காவியம்

அந்திமப் பொழுதில் ஒருநாள்
        அவள் திருமண நாளதுவாம்
செந்தளி வதனக் கணவன்
        சிறுமலர் மாலை சூடி
சுந்தர முறுவல் பயில
        சுவரிலே படத்தின் சிறையில்
சிந்தனை தொடரச் செம்மை
        சிதறியே படரும் அவள் முகம்

அப்போது வயது இருபத்திரண்டு

“பெண் எனில், பெரியவர் ஒழுங்கிலா விவாகம்?
பெண்ணவள் பெடியனைப் பார்த்தொப்ப வேண்டாவா?
கண்ணிறை கணவனா அருள்பொங்கும் கண்களா
கண்மூடிக் கையெழுத்தா? அவளென்ன பாமரளா?”
அண்ணனோ அருண்டுவிட்டான் என்செய? நண்பன்
அகமொன்றில் ஏற்பாடு. ஊர்வழக் இல்லையே.
தண்ணென் றகங்குளிர கனவானாய் கண்டு
கண்ணொன்ற அவ்விடமே காவியச் சீதையானாள்

வீட்டுக்கு வெளியே பார்த்து
விருப்பங்கள் தெரிந்த பின்னே
நாட்டும் ஒப்பந்தம் நடந்து - விவாக
நாளது முத்திங்கள் பின்னராம்
வீட்டார் அறியாது சனிவாரம் தோறும்
தோழியுடன் நகர்சென் றவருடன்
தோட்டம், உணவகம், நூலகமென
காதல் வளர்த்தனரே
கைகால்படாமலே

காதல்வளரக் கலியாணமும் முடிந்தது
தெவிட்டாத தேனிலவாய் வருடங்கள் பறந்தன
காதல் கனிந்துவரக் கைப்பிள்ளை களும்வந்தார்

☞

பாசமும் பரிவும் சேர்ந்தே வளர்ந்தன.
‘வல்லை வெளியில் கள்ளர் பயமாம்
கொள்ளிவால் பசாசாம் கொலைஞரும் திரிவராம்
நேரமோ இரண்டுமணி, தேவையா கூத்துப்பார்த்தல்’
மெல்லப்பயம் படர மேனிசிலிர்க்கும் அவட்கு

“கள்ளருக்கோ பேய்களுக்கோ கலங்காத கண்மணியே
உள்ளத்தில் ஏதோ எண்ணிவிட்டீர், நானும்தான்.
நட்டநடு நிசியில் யாருமிலாப் போதினிலே
தண்ணிலவு அரசோச்ச தாரகைகள் கண்சிமிட்ட
அருந்ததியும் வசிட்டரும் ‘ஆ’ வென்று பார்த்திருக்க
ஏன் சிலிர்க்கின்றீர்? காரோட்ட வேண்டாமா?
வாருமிங்கே என்று வருடும் அவள் மென் தோள்கள்
நேசத்தில் நிறைந்து நெக்குருகும் அவள்நெஞ்சம்

அப்போது வயது முப்பத்திரண்டு

“பட்டப்பகலில் பார்வை சரியில்லை
பாலர் பயில்கின்றார்
கட்டோடு இருங்கள் காலையரும்பி,
மாலையல்லவா மலரும் இந்நோயெனில்
கட்டிப்பிடித்து கன்னங்கள் சேர்த்து
குறும்புத் தனமாய் குறுகுறுக்கும் விழியோடு
“மக்களே வாருங்கள் ஆளுக்கொருமுத்தம்”
மக்களுக்கும் வைக்குமே ஒவ்வொன்று கன்னத்தில்
மன்னவனே! இன்னும் மனதில் உணர்ந்து
கன்னம் சிவந்து களிக்கிறதே அவளுள்ளம்

வயது நாற்பத்திரண்டில்

“வண்ணக் கொழுந்தே வடிவான பெட்டகமே
தங்கை கலியாணம் கலகலப்பாய் நடத்திநின்றீர்
ஆறுமோ ஆவல் அலுவலகத்தில் அக்காட்சி
மீண்டும் என்சிந்தை குளிரவே நின்றதடா
என்னோடு சிறுநேரம் பேசவே முடியாதோ
எழுப்பமோ விடுகிறீர்” என்றே பிதற்றவும்-

"குமரப் பருவத்துக் குழந்தைகளின் முன்னே
குசுகுசுத்துச் சிணுங்கி நின்றால் அவருள்ளம்
கற்பனைக்கு விருந்தாமே
மனக்கிளர்ச்சி யாகாதோ மணவாளரை எதிர்பார்த்து.
என்னப்பா நீரும் மணக்காலத் துடிப்புடனே"

"என்னம்மா இங்கேவா வளர்ந்துவிட்ட பிள்ளைகளே
எல்லாம் அறிந்துவிட்டார் ஏதும் சொல்லமாட்டார்
தாம்பத்யம் என்னவெனத் தாமே தெரிந்து கொண்டார்
வீம்பு பிடியாதீர் வினைகெட வைக்காதீர்
அம்மாவை அப்பா வளைக்கின்றார் என்றே
அவர் புரிந்து கொள்வார் சும்மா இரும்"
இளமை பொங்கும் அவர்முகம் நினைவில் வர
கன்னச் சுருக்கம் நீவிக் களிக்கின்றாள் அவளும்.

அப்போது வயது ஐம்பத்திரண்டு

இலண்டனி லிருந்து இனியமகள் வருகின்றாள்
மகளுக்கு ராசவள்ளி மருகருக்குத் தோசை
பேரனுக்குக் கேசரி பேர்த்திக்கோ தாலாட்டு
வேண்டிய பொருளெல்லாம் விதவிதமாய் சேகரிப்பு
என்செய் வாள் உடல் சோர உயரழுத்தம்
உள்ளமும் பரபரப்பு

அவள் தோளில் கரம் ஒன்று கடுகடுப்பாய் திரும்பி
"குழந்தையில்லா வீட்டில் துள்ளி விளையாட்டு"
கையிலே பொல்லு, கட்டில் கேட்கிறதோ?
என்னப்பா உமக்கு ஏதேனும் அறிவுண்டோ?
முதுகு வலிக்கிறது மூச்சு திணறுகுது
வேலைப்பளுவால் பேசவே நேரமிலை.
பேரன் வரப்போறான் பேசாமல் அவன்மீது
பேரன்பு வைப்பீர் பெருமிதமே கொள்வீர்."

☞

“அன்புக் கடலே அருகேவா ஒருகணமே
அனைத்துச் சோர்வும் போக்கிவைப்பேன், நொடியில்
புத்துணர்வும் சாந்தமும் புதுப்பொலிவாய் ஓடிவரும்.
சித்தம் அதுவானால் சீரளமை திரும்பிவிடும்.
காதலுக்கும் காலமுண்டோ நேரமுண்டோ சொல்லம்மா”
கணநேரம் முகம் நோக்க கண்ணில் விஷமமும்
கனிவாய் சிரிப்பும் காந்தமாய் இழுக்கும்.

அப்போது வயது அறுபத்தியிரண்டு

காதலுக்கும் காலமுண்டோ காதுகளில் சிந்துபாடும்
ஆம்! புன்சிரிப்புப் பொங்க நரைத்த தலை ஆட
பொன்னான கணங்களை நினைத்து மனம் மகிழும்
காதலுணர் வுக்கடவுளுக்குக்கோர் காத்தல்செய
ஆழமுள அத்திவாரக் கோபுரமே தேவையன்றோ
கோபுரமே சாய்ந்தாலும் கூர்ப்பான அத்திவாரம்
காதற் சிலைகாத்து, கல்லறை போகுமட்டும்
நினைவுகளில் நீள்நின்று வாழ்ந்துவரும் தன்மையினால்
காதலுக்கும் காலமுண்டோ சொல்வீர் ஜெகத்தீரே.

நினைவு அலைகள்

மூடிக்கொண்டே மழை 'சோ' வெனக்கொட்டும்
முற்றத்து வெள்ளம் படிதட்டிப் பாயும்
வாடைக் காற்றெழுந்து மதர்த்துப் புயலாகும்
காற்றடிக்கக் காவோலை கங்குமட்டை வீழும்

தாயார் அடுப்போடு கண்புகைந்து கடுகடுக்க
பையனும் பார்த்திருக்க முடியாது பரிதவிக்க
சூழலோ அவனை 'வாவா' என்றேயழைக்க
சிறுபொழுதும் வீட்டிலே தரித்திடாப் பரபரப்பு

ஓயும் ஒரு நேரம் மெதுவாய் படியிறங்கி
பாயும் வெள்ளத்துள் பட்டறிவு புதுமையடா
விறகு சுமந்து அற நனைந்து
வெற்றி வீரனாய் வீட்டுள் நுழைய
முதுகைப் போர்க்களம் ஆக்கிறாள் அன்னை

வளைந்து குனிந்து அழுகை அமுக்கி
குமுறிக் கேவி உதறல் எடுக்கவும்
அணைத்து ஈரம் துவட்டிக் கண்ணீர் சிந்தி
'குஞ்சு ராசா வருத்தம் வருமே'
அரற்றும், ஏங்கும், தடவும்
தட்டித் தட்டி விம்மல் போக்கும்

பத்தாம் மாடியில் பல்லாயிரம் மைலில்
பனிமழை பொழியும் ஒரு நாட் போதில்
வெப்ப மூட்டிய குஷனுள் புதைந்து
உள்ளம் அந்த வெள்ளத்துக் கேங்கும்
உடலோ அணைப்பின் இதத்தை நாடும்

அங்கோ,
பங்கருள் வெள்ளம் புகுந்து நிறைந்தது
பறக்கும் முதலைகள் முட்டைகள் இடுவன
படியில் இருந்து வானத்தைப் பார்க்கும்
அன்னை அவளோ ☞

வீடு நிறைந்த அகதிகள் உறவினர்
பொங்கிப் போட பணத்தை வீசும்
மைந்தன் எங்கோ வாழ்கிறான் - ஆனால்
பழைய நினைவில் உருகி
'முதுகு வலித்ததோ மகனே' என்னும்
பச்சாத் தாபக் கண்ணீர் வடிக்கும்.

- தமிழருவி -1990

நேரமும் - நினைப்பும்

அந்தத் தனிவீட்டில்
மனிதக் குரல் கேட்க
ஆவலுடன் காத்திருக்கும்
எந்தன் ஆச்சி
பஞ்சடைந்த உன்கண்ணால்
தொலைபேசியில் கருத்தூன்றி
பார்த்திருத்தல் ஏனோசொல்,
கிச்னர் கிப்ளிங் கீல் என
ஏங்கி நெடுமூச்சு ஏனோ?
நிமிடம் ஒவ்வொன்றாய்
டிக்டிக் என்றே பறக்க
மணி இரவு பதினொன்று
எழுவாய் படுத்துத் தூங்குவாய்
உன்பிள்ளைகள் இப்போது
அரைச் சாமம் கண்டிருப்பர்.

விருந்தோம்பல்
நையாண்டிக் கவிதை

விருந்தென்றாலே விளங்காத வள்ளுவன்
'மருந்தென் றாலும் பகிர்ந்துண்' என்றனன்
வள்ளுவன் பழசாம் அவனோ டொத்த
ஔவையும் பழசு நீதிநூல் பகர்ந்த
அத்தனை முனிவர் அறிஞர் மூதாளர்
பழசு பழசு
நல்வழி சொல்லும் நால்வகை நூலையும்
அல்வழி என்றே ஆற்றில் எறியடா

இஞ்ஞான்று கலியுகம் கடைக்கூறு நமக்கு
விஞ்ஞானம் வழிகாட்டும் லோகக் கிராமத்தில்
மெஞ்ஞானம் மெய்மெய்யாய் சோம்பலை வளர்க்கும்
இஞ்ஞாலம் ஏழைகள் பராரிகள் ஏவருளர்?
தமிழனாம் பண்பா டாம்விருந் தயர்தல்
தனிப் பெருங் குணமாம் மற்றவர்க் கிலையோ?

கலக்கல் கலப்படம் அதற்கோர் அறிவுரை
காலம் அறியாத தமிழர் செப்புவர்
இத்தாலி நாட்டான் சட்டப்படி இன்றும்
இத்தாலி ரத்தம் ஓடா தானுக்கு
கொடானாம் பெரும்பதவி அத்தனை மகத்துவம்
நாமென்ன விடுதலை வீரர்களா, புவியில்
சுத்தரத்தம் பேண? அடிமைகள்! கொத்தடிமை'
கால்வரு டிக்கை வருடி நள்ளிர வில்குடை
பிடித்து எட்டுநூற் றாண்டாய் எஜமான
விசுவா சம்ஙெங் ஙனம் போகுமையா?

லோக இனம் ஒன்றேயெனும் பூங்குன் றனைவிஞ்சும்
கல, கலக்கு மிளகுடன் பப்பா சிவிதை கலக்கு
அரிசிக்குள் கல் கலக்கு ஆ நெய்யுள் எது கலக்கு?
கறுத்தக் கொழும் பா னுள்புளி மாஒட்டு
குளோனிங் கால்புதியவுடல் உண்டாக்கு
கலக்கல் நன்றா நன்றென வைப்போம்
அப்படியாயின், ☞

ஓம்பும் விருந்துக் கோர்வரை விலக்கணம்
வீம்புக் குரைக்கின் விருந்தும் கலக்கலே!
லஞ்சம், கையூட்டு, பணத்திமிர், என்னப்பாவேறை
விஞ்சும் செல்வாக்கு, காக்காய் பிடித்தல்
ஏதோ ஒன்று நீரே சொல்லிவிடும்
வேலை எடுப்பின் கையூட்டு
ஊரில் கூட வீட்டுமொழி ஆங்கிலமாம்
கனடாவில் ஒரேவழி தமிழ் கற்பித்தல்
வகைவகையாய் கேக்குகள் தவணைதோறும்
விருந்தோம்பல் மேற்பார்வை யாளருக்கே
இடியப்பமும் இறைச்சிக் கறியும்
இனம் நம்மவ ராயின்
“பணை மறம் லங்காவில் இறுக்கிறது” சொல்லி,
“கிழியின் சொண்டு நிரம் சிகப்பு” சொல்லித்
தமிழும் வளர்த்தார் தம்வயிறும் வளர்த்தார்
இதெல்லாம் தொண்ணூறுகளில்
பெற்றா ருளம் வெந்துவெம்பி புண்ணாயினர் - பல
பேருக்கு குறைசொல்லி மாய்ந்து போயினர்

செல்வாக்கு மிகுந்தோரைக் கைக்குள்ளே போடவொன்று
சங்கங்கள் கூட்டங்கள் அமைப்புகளில் விழுந்தடித்து
அங்கம் வகிப் போருக்கு விருந்தயர்தல் இன்னொன்று
பதமான இளைஞருக்குப் பண்பான விருந்தோம்பல்
பரிவட்டம் போடவும் நாயக விசு வாசம் பயிற்றவும் வேறொன்று
சமூகத்தின் கணிப்பிற்காய் இனமதபேதமின்றி
உயர்பதவி வகிப்போரைக் குருவி நுழைந்து
கட்டித் தழுவி மாலையிட்டு பரிசும் அளித்து
கமறர்முன் முப்பத்தியிரண்டையும் காட்டும், மற்றொன்று
இன்னும் எழுதுகின் பின்னும் விரியும்
செல்விருந்தில் மகிழ்ந்து சிந்தனையில் அடுத்த
நல்விருந்தைத் தேடும் லௌகீக நன்மைக்காய்,
எனவே வள்ளுவனுக் கென்தெரியும்
தென்புலத்தாராம் எங்கேயுளர் அவர்? காட்டுங்கள்!
தெய்வமாம்! கல்லுக்குப் பால்வார்த்து அநியாயம்
வருவிருந்தாம் பஞ்சைப் பனாதை களுக்கா?
பளிங்கு வீட்டில் கந்தல் கால் வைக்கவா? ☞

யாருள் ஏழைகள்?
காழ்ப்பைக்காட்டும் உறவுக்கும் விருந்தாமா?
என்ன இவர் சொல்கிறார்
கூழுக்குப் பாடிய ஔவை 'விருந்தோடுண்' எனில்
அது கேடுஇல் நியாயம்
நடந்தலுத்த யாத்திரீகர் களைபோக்கும் உபசாரமே?
நல்லூர்க் கந்தனுக்கு நடந்தா போகிறோம்
மெல்ல விமானத்தில் மெதுவாய் பறந்திடலாம்
காருங் கடுகதியும் பூலோகக் கிராமமாம்
பாரினில் 'வள்ளுவன் விருந்'தொன்று தேவையா?
விருந்தோம்பல் என்பதற்கோர் வரைவொன்று தந்திடவே
விரைந்தோடி வருவீரே வெளிநாட்டுறை
வீரத் தமிழினமே.

போம்காணும் வள்ளுவரே!

நையாண்டிக் கவிதை

'உண்ணற்க கள்ளை! உணில் உண்க' என்றீர்
கண்ணனைய வள்ளுவன் கருத்தோடு
சிந்தையில் இருத்திச் சிறகடித்தேன் மகிழ்வுடனே
விந்தையல்லடா காலத்தோடான அனுசரிப்புத் தானே
மறுத்தாலும் முன்பு, தந்தானே சம்மதம்.

ஆவல் மீதூர அடித்துவிட்டேன் அரைப்போத்தல்
நாவல் மரத்துக் குரங்கின் ஈரல் உண்ட
கிளர்ச்சி மயக்கம் மௌனம் தயக்கம்
கிறுக்கத் தோடெழுந்து வானத்தில் பாய்ந்தேன்

வண்ணங்கள் தெறிக்கும் வானவில் வழிசமைக்க
வானிலவு கையேந்தி வா வா வென்றே யழைக்க
வெள்ளிகளா லான விண்ணூஞ்சல் தானமர்ந்து
தெய்வக் கன்னியர் சாமரம் இரட்டவும்

ஊர்வசி அருகிருந்து அமிர்தத்தை ஊட்டவும்
மேனி சிலிர்க்கும் சொர்க்கத்தைக் கண்டேனே.
அடிதடி பானையுடைப்பு அத்தனையு மில்லாத
சொர்க்கமடா சொர்க்கம்.

வள்ளுவனே! என்ன சொன்னாய்? சான்றோரால்
எண்ணப்படாதவன் என்றா?
நாகரீகம் தெரியாத ஆதிவாசி நீர்ஐயா
சான்றோ ரேயில்லாத நவயுகம் இதுஐயா
சான்றாண்மை தொலைத்துவிட்ட தனித்தேசம் நாமையா
பொய்யும் புரட்டும் மலிந்துவிட்ட பூமி ஐயா
போர்த்து மூடிவைக்க மேலும் பலர் காத்திருக்கார்
மதுவருந்திச் சொர்க்கத்தில் மயங்கி நிற்போம் நாமே.

கனடா மாணவர் எழுச்சிப் பேரணி

மாணவர் எழுந்தனர் பேரணி முழங்குது
தானவர் அஞ்சிடும் போரணி இதுவே
வானவர் பனிமழை பொழிந்து வரவேற்க
தானலை அலையாய் திரண்டனர் கண்டீர்

உயர்கல்விப் பீடம் உணர்ந்ததைக் கண்டோம்
உரமுடன் சுதந்திரத் தாகம் கொண்டனர்
கற்றோர் குழாத்தின் கவனத்தை ஈர்த்தால்
மற்றையோர் பொய்யும் புரட்டும் மறையுமே

எங்கள் சுமைகளை உங்களில் இறக்கினோம்
தங்கத் தனயரே தலைநிமிர்ந்து வாரீர்
சங்கங் கள்அமைப்பீர் நம்இறைமை காப்பீர்
பங்கம் வாராது வழித்துணை நிற்போம்

எங்கும் எழுச்சிப் பேரணி என்பதே
தங்கும் பேச்சும் மூச்சுமாம் இங்கே
பொங்கும் வீச்சுடன் பொய்யுரை களைந்து
இங்கெலாம் விளம்புமின் விடுதலைப் போரென

ஆக்கினைகள் செய்கிறாள் அரசபயங் கரவாதி
போக்கத்து வெளிநாட்டில் பொய்ப்பிர சாரங்கள்
தாக்கத்தால் தமிழர் தலைகுனிந்து நிற்கின்றார்
மீக்கூர்ந்து புறப்படடா மெய்யுணர வையுங்கடா

புறப்படுங்கள் மக்காள்! பொய்யுரை ஊடகங்கள்
அறத்தொடு நிற்கவே ஐயங்கள் தீர்த்திடுங்கள்
இறைமையைக்காக்க எழுந்த மறவீரராய்
சிறுமை கொண்டவர் செய்த சிறுப்பினைகள்,
அடக்கி ஒடுக்கி அப்பாவி மக்களை
அடித்துச் சுட்டும் குண்டுகள் போட்டும்
வதிவிடமுடைத்தும் வன்செயல்மூலம்

☞

கொன்றொழித்த கொடுமை யெல்லாம்
விண்டுரைத்து, வெள்ளைகள் தப்பெண்ணம்
வேரற வொழிக்க விளக்கி வாருங்கள்.
அச்சம் வேண்டாம் இந்நாட்டுக் குடியுரிமை
மெச்சவே பெற்ற மக்கள் யாமே!

பனி பெய்யும் அழகு

பஞ்சுப் பொதியை நுள்ளி நுள்ளி
பறக்க விட்டதுபோல
பனித்துகள்கள் துள்ளித் துள்ளிப்
பறப் பதைப்பார்
காற்றில் அசைந்து மேலுங்கீழும்
அங்கும் இங்கும் அலைந்தும் உலைந்தும்
தூங்கி விழுவதைப் பார்
மல்லிகைப் பூவாய் மாற்றம் பெற்று
வானம் மகிழ்ந்து சொரிவதைப் பார்
முல்லைமலரோ அல்லிப் பூவோ
மெல்லக் காற்றில், இறங்கும் அழகு
உள்ளம் கொள்ளையடிக்க
வெள்ளைப் பளிங்காய் சோலையெங்கும்
வெள்ளிக் கம்பளம் விரிக்கும் பனியே
உன்னழகைக் காண
என்ன தவம் செய்தோம் சொல்வாய்

போரும் களமும்

வாழ்த்து - பொன்விழா

குறள் வெண்பா

1. பிரபா கரன்வாழ்ந்து பேரியக்கம் வெல்லும்
வரம்தருவாய்தாயே மகிழ்ந்து

சிந்தியல் வெண்பா

2. கொன்றை மரத்தடிக் கோவே, குருநாதா
நன்றேநம் மைந்தனை நானிலம் போற்றுமீழம்
வென்றெடுத்து வாழவழியைச் செய்.

நேரிசை வெண்பா

3. தலைவனுள் மாமனித நேயன் உறைவதால்
மலைபோல் வருதுன்பம் மாய்த்தும் - விலைபோகா
வித்தகனாய் வீரம் விளைத்தும், ஈழம்காண்
அத்தனாம் என்றென்றும் வாழ்க!

4. காதல் மனைமக்கள் கற்புடைத்தங் கத்தமிழர்
போராளித் தங்கைமார் தம்பிமார் - வானின்று
பூச்சொரியும் மாவீரர் புத்தம் புதுவினைஞர்
மூச்சொன்றி வாழ்த்துகின்றார் மொய்த்து

பஃறொடை வெண்பா

5. காலங் கனிந்துவரும், கைகூடும் கற்பனைகள்
ஞாலம் வியக்கும் வகையியிலீ ழம்பிறக்கும்
அஞ்சாதே! எம்பிரபா ஆடுவோம் போர்க்களம்
துஞ்சோம்! தமிழ்ஈழம் தோன்றும் விரைவாக
வெஞ்சமர் விளையும், விறல்வெற்றி வாகையே
சூட்டுவோம் அன்புப் பரிசாக! சோர்வின்றிக்
காட்டுவோம் நம்வீரம் காண்

ஈழமுரசு

50வது பிறந்தநாள் வாழ்த்து

பொன்னகவை காணுமெம் புண்ணியனே!

மகாகவி பாரதி சொன்னான் ஆண்டைம் பதில்தான்
மனிதன் வாலிபன் ஆகின்றானாம்
உள்ளத்தில் கள்ளமில் லாதவன் உள்ளுவ தெல்லாம்
உயர்வாய் உரிமை பூண்டதனால் என்றுமவன்
வயது பதினாறாய் ஏற்றங் காணும் வரோதயன்
வாலிபமுறுக்கு ஏறுமே வஞ்சிப்பாவாய்
சஞ்சலம் சபலம் சலனத்தின் உறைவிடங் காண்
நரை திரைமூப்பு எட்டிப் பார்க்கும்
ஒப்பற்ற தோன்றல் எம்இனிய குஞ்சுக்கு
நரை திரை தோன்றாது முதுமைஓடி ஒளிக்கும்.
மேதகு தலைவ ரேறே! விறல் வேந்தனே!
வீரம் பொருந்த வாழி! நின்மனைவி மக்கள்
சார்ள்ஸ் அன்ரனி, துவாரகா, பாலாவுடனே
அனைவரும் மகிழ என்றென்றும் வாழ்க!
குடும்பத்தின் தலைவனே! ஈழத்தமிழ் குழுமத்தின் தெய்வமே!
அனைத்துத் தமிழரும் பூசிக்கும் தலைவனே
பல்லினச் சான்றோர் வியக்கும் இதயவாசியே
என்றென்றும் வெற்றியே என்றென்றும் தலைவன் நீயே
வாழ்க! வாழ்க! வாழ்கநம் தமிழ் ஈழம்
வாழ்க வாழ்கவே

செங்காந்தள் மலர்

கார்த்திகைப் பூவே கார்த்திகைப் பூவே
கார்த்திகைத் திங்களில் கருக்கொள் பூவே
தமிழீழம் செய்தவச் செல்வன் தேசீயத்
தலைவனவன் தமிழர் தேசீய மலரென
விளம்பிய மலரே
முச்சங்கம் வளர்த்த தொல்புகழ் தமிழின்
உச்சங்காட்டும் இலக்கியம் விரித்த
செங்காந்தள மலரே!

செம்மஞ்சள் விரவிச் செக்கச்சிவந்து
விளிம்பெலாம் நெளிந்து மெலிந்து நீண்டு
தையலர் கைவிரல் குவியும் பாங்கில்
ஐந்து இதழ் கொண்ட அருமைப் பூவே
மாவீரர் தினத்தில் மலரணை ஏறினாய்!

எழில் கொஞ்சும் நின்னழகு எம்வீரர் உடலழகா!
விளிம்பின் நெளிவு வேவுப்புலிகளின்
நெளிவு சுழிவறியும் தீரச் செயலா!
செம்மை அவர்சிந்தும் இரத்தத் தியாகமா!
செம்மஞ்சளோ, மாசு மறுவற்ற ஒளிவீசும்
அவர் உள்ளத்தழகா!
விரல்களின் குவிந்த தோற்றம்
துவக்கை ஏந்தித் துடித்த கரங்களா!
ஏதிலார் உன்கிழங்கை ஏப்பம்விட்டு
தொலைந்து போவராம்
பகைவர்கை தம்மேற் படவிடாக் கற்பால்
நஞ்சுண்டு தம்மண்ணின் விதை ஆவார் புலிகள்

உன்னழகை உலகுக்குக்காட்டி கருஞ்சிவப்பாய்
வாடிவிழுந்து மண்ணொடு மண்ணாவது போல்
அரியணை ஏறிய அருமைப்பூவே உன்புகழும்
தெய்வங்களாய் மாறிய மாவீரர் புகழாகும்.

ஈராக் போர்

ஓ! ஈராக் மக்களே! என்னருமைத் தோழர்களே!
உங்களுக்காகக் கண்ணீர் வடிக்க
என்னிடம் ஏது? துளிகூட இல்லையே
ஆத்திரம் எனது நேத்திரம் மறைக்க
ஆவியாகிறது அங்கே கண்ணீர்
சொல்லியடிக்கிறான் அமெரிக்கன்
சொல்லாமலே அடிக்கிறான் சிங்களவன்
சீஎன்என் காட்டும் பொம்பரின் சத்தம்
புதிதல்லவே ஈழத்தவருக்குக் கண்டீர்
நினைவு எங்கெங்கோ புரள்கிறது

வீட்டோடு உடைமைகளைப் பின்விடுத்தோடுகிறோம்
பறந்துவரும் ஷெல்லின் ஒளி பாதைகளைக் காட்டிநிற்க
கண்மண் தெரியாது கலக்கத்துடன் ஓடுகிறோம்
கையொன்று காப்போடு காலில் தடக்குகிறது
யாருடையகை?
சிந்திக்க நேரமில்லை ஓடுகிறோம் ஓடுகிறோம்
தலையற்ற முண்டமொன்று காற்சட்டை 'சேட்' டுடன்
விழுந்த மறவனின் குருதியில் சறுக்கி
வழுக்கி விழுந்து காயம் பட்டோர் ....
சொல்லப் போமோ சொல்லித்தான் மாளுமோ
　　　　பொருளாதாரம் சீர்குலைஞ்சு போச்சுதாம்
　　　　போருக்குச் செலவு போதாதாம் அங்கே.
　　　　உலகத்தின் சமாதானம் தங்கியிருப்பது
　　　　தங்கள் துருப்புகளில் தானாம்
　　　　என்கிறான் அமெரிக்கன் இங்கே.
மூச்சோடு நோர்வேக்கு முழுமனதுப் போர்வையில்
பேச்சு வார்த்தைக்குப் பெரும் ஆதரவாம். ஆனால்
போர்ப் பயிற்சி கொடுக்கிறான் இலங்கைக்கு இலவசமாய்
போர்க் கப்பலுமாம் பதினைந்து கோடியாம்
பிள்ளையையும் கிள்ளித் தொட்டிலையும் ஆட்டுவனாம்

☞

அவனுக்கென்ன பாரம்பரியமா சொந்தநாடா
வந்தேறு குடிகள் அறிவாரா மண்பெருமை

கடவுள் என்னடா கடவுள், கண்
காணாத கடவுளை ஏன் அழைக்கின்றாய்
தத்துவம் பேசும் காலமல்ல இது
நரம்பு துடிக்கிறது பல் நெருமுகிறது
கண்கள் கனல் கக்குகின்றன.
காதோரம் புடைத்து விம்முகிறது
வாய் வறழ்கிறது இரத்தம் கொதிக்கிறது
அராஜகம் எங்கும் அராஜகம்
அழித்து ஒழிக்க ஆட்களே இல்லையா
கொண்டு வாருங்கள் சக்தி வாய்ந்த
குண்டுப் பொதிகளை
வானிற் பறப்போம்
ஆயுத உற்பத்திச் சாலைகள் நோக்கி
அடுக்கிவைத்த அகன்ற குதங்களை
சுட்டுப்பொசுக்கி செத்து மடிவோம்
மனிதம் வாழவும் மானிடம் தழைக்கவும்
இன்னுயிர் போக்கி இனிமை சேர்ப்போம்.

ஓ ஈராக்கியனே,
தோல்வி நிச்சயமாடா உனக்கு
பின் ஏன் தயங்கி நிற்கிறாய்
அடியடா திருப்பி, தீவிரமாக
அவனை அழித்து நீயும் அழியடா
வந்தால் வா போனால் போவென
அடியடா திருப்பி அடியடா அடியடா.

இரத்த தாகம்

ஏரோது மன்னா! ஹம்சக்கோமகனே!!
நீரோ அந்நாளில் விரும்பியது பிஞ்சுரத்தம்
பாராள விழைந்த எம் பத்தினித் தங்கமோ
நாவாலே சொட்ட நாடுகிறார் கிடாய்ரத்தம்
பதமான கிடாய் - விடலைக்கிடாய்
பார்த்துப் பார்த்து வளர்த்த கிடாய்
கிழண்டமுன் உறுஞ்சினால்
மார்க்கண்டபதவியாம்.
படித்து வந்த இளைஞர் கூட்டம்
பதறக்கதற புலிப்போர்வையிட்டு
புனர்வாழ் வெனும் மாய்மாலங்காட்டி
பட்டியடைத்துப் பதம் பார்த்திருந்தார்
தங்கள் தாகம் மேலெழுந்து ஓங்க
தரங்கள் சரிந்தன குருதி நிரம்பியது
மடமடவென மாந்து தாயே
ஓடும் இளமை மீண்டும் வருமே.

(மலையகத்தில் புனர்வாழ்வுச் சிறையில் புழுப்போல் துடிக்க நடந்த கொலைகளின்போது வயிறெரிந்து பாடியது)

கொடுத்து வைத்தவள் நீ
நையாண்டிக் கவிதை

அம்மையே! உன்னைப்போல் நல்லவர்கள் யாருளர்
விந்தையான செயல் ஒன்றுமேயில்லையம்மா
வளர்ச்சியும் விருத்தியும் நாட்டுக்கு மாத்திரமல்ல
போருக்கும்தான்
போருக்கு ஓர் வளர்ச்சியும் விருத்தியும்
விதைவிதைத்தவன் உன் அப்பன்
சிங்களத்தை நாட்டிலே ஊன்றி வைத்தான்

சிங்கள சிறீயை தெருவிலே உலாவவிட்டவன்
தமிழரின் தார்மீகக் கோபத்தைத் தூண்டியவன்
வழிவழிவந்தவர் போரை வளர்த்தனர்
எதிர்கொண்டோர் யாரும் சளைத்தவரல்லர்
ஆயுதம் செய்வோம் நல்ல காகிதம் செய்வோம்
என்றவர் பாரதி
ஆயுதவிற்பனைக்கு களம் அமைத்துக் கொடுத்தாய்
உலக நாடுகளுக்கு
அண்டமெல்லாம் தண்டல், நீயும்தான் நாளும் தான்
போரின் உச்சத்தை நீளட்டிவிட்டாய்

தோல்வியின் நிலை உன்னைத் தாக்கவில்லை.
சிலுப்பி எழவைக்கின்றது
சமாதான காலத்தில் மதிக்காத ஒப்பம்
உள்ளரங்கப் பூசலை உலுப்பிவிட்டு
வெண்புறா போர்வையில் வியூகங்கள் அமைக்கும்
ஆழிப்பேரலை அதிட்டம்தந்தது

கடனா களவா பிச்சையா எதுவா
எதற்கும் அஞ்சாத உனக்கு
கொண்டு வந்து கொட்டுகிறர் கேளாமலே
போரைவளர்க்கவும் விருத்தி செய்யவும்.
கொடுத்து வைத்தவள் நீ யம்மா
ஓ யுத்தத்தின் தெய்வமாம் மாகாளி கொற்றவை!
தோற்றாள் போ! கடன்வாங்கத் தெரியாமல்.

துயிலும் - துயரும்

(சமாதான காலத்தில் வடமாகாணஞ் சென்று துயிலுமிடம் பார்த்தனர் சிங்களப் பாராளுமன்றப் பிரதிநிதிகள்)

1. மாவீரர் துயிலுமிடம் பார்த்தாராம் மதிவாணர்
மாயக் கண்ணீர் உகுத்தாராம், எதற்காக?
ஐயகோ! நம்மவர்க்கு அரசுஒன்றும் செய்யலையே
கவன்றாராம் எம்பிக்கள் நல்லகதை, கேளுங்கள்

2. இருந்தால் காசு, நின்றால்காசு
உணவுக்குக் காசு, உடைக்குக் காசு
துணிக்குக் காசு, தும்மலுக்குக்காசு
போக்குவரத்துக்குக் காசு, போருக்கும்காசு
வடக்கு கிழக்கு போனால் சிறப்புக்காசு,
படுக்கைக்குக் காசு, வசிக்கும் இடத்துக்குக்காசு,
மாதக்காசு, மரித்தாலும்காசு.
இனியென்ன நினைவுச்சின்னம்?

3. கிடைத்ததைப் பங்கிட் டுண்டு
படுத்துறங்கியோ விழித்திருந்தோ
வேவு பார்த்து வெடிகள் செய்து
காயக்காரரைக் காவிச் சுமந்து
ஆதரவற்றவர்க்கு ஆனவரை உதவி

4. மரத்தின்கீழோ பங்கருள்ளோ
மழையில் நனைந்தும் வெயிலில் காய்ந்தும்
கிணறு வெட்டி பங்கர்சமைத்து
காடெல்லாம் நடந்து தண்ணீருக்கலைந்து
ஐயகோ எங்கள் பிள்ளைகள்
கூலிக்கா செய்தார்கள் குடும்பிகளே!
தன்னலங் கருதாச் சேவை செய்தார்
சந்ததிவாழத் தம்மையே தானம் செய்தவர் யார்?
எம்புலிக் குட்டிகள்

☞

5. வெட்கமாயில்லை? கல்லறை பார்த்தழ?
எழுதிவையுங்கள் உங்கள் கல்லறையில்
கிரிசாந்திக்குக் கிரீடம் வைத்தோர் இவர்களே!
கோணேஸ்வரிக்கு அல்குல் அளந்தோர் இவர்களே
கிழட்டுப் பெண்களைக் குமரியாய்
நடத்தியோன் இவன்களே
ஓடஓட போராளிப் பெண்களை
திரும்பித் திரும்பிப் பார்த்துப் பார்த்து
கும்பிட்டு கும்பிட்டு
சுடாதே சுடாதே
என்றலறியோடினோர் இவரே இவரே
இன்னும் எத்தனை வகை!

மாவீரர் துயிலுமிடம் பார்த்து
பொறாமையில் எரிகிறாய் நீ
நாமோ கண்ணீர் வடித்தாலும்
பெருமையில் வணங்குகிறோம்.

கோட்டைப் போரும் சமாதானமும்

வெட்கங் கெட்ட இலங்கை இராணுவம்
மீண்டும் கோட்டைப்பக்கமா?
கோட்டையிலிருந்து ஓட்டிக் கலைத்த
அவமானத்தை மறந்தா விட்டார்?

ஒட்டியுலா்ந்து ஓடி ஒளித்து
திட்டமிட்டு விட்டுக்கொடுத்த வழியூடாக
முதுகுவளைந்து கூனிக்குறுகி ஓடித்தப்பியோர்
நெஞ்சை நிமிர்த்தி வருவாரா இனியும்?
கட்கத்துள் வெட்கத்தைப் புதைத்து வைத்தாரா?
கடைகள் புதியசந்தை புலவர் சிலைகள்
மகளிர் பள்ளி அத்தனையும் ஷெல்லடித்
தழித்ததை மறந்தாரா சங்கை கெட்டு?
ஒட்பம்தேர் போராளி கேட்பான் 'கிளிக்'
ஒலிபெருக்கி அறிவிப்பு உடனே தொடரும்
பொருள்கொள்வோர் யாவருமே பதுங்கிக்கொள்ள
குண்டொன்று தாக்கும் உயிர்ச்சேதமின்றி

வேறு

புறப்பட்டார் புலிவீரர் கரந்தொளிவார் மேலே
பொருநன் கே.கே.எஸ் பெற்றெடுத்த வீரன்
போர்ப்பயிற்சி யாளனொடு வீராங்கனைகளும்
உயிரிழந்தும் போர்த்துக்கேயக், கோட்டை
தகர்த்தார்

விறல்வெற்றி ஈட்டிய நம்மாவீரர் போற்றி
வீணர்களை ஓட்டிவிட்ட வீரரையும் மறவோம்
வினயமுடன் ஒரு நன்றி எதிரிக்கும் சொல்வோம்
விடலைப்பெண் மாணவர்க்கு போருணர்வை
ஊட்டினனே

☞

திறல் தந்த கோட்டைப் போர் மறக்கப்போமா
தீண்டரிய சமாதானம் எனும்பெய ரால்நம்
சிறகுகளைக் கட்டிவைத்து, விரித்தார் தமதை
பேடிகளா! கோழைகளா! கேட்பாரிலையா?

தெறநிற்போர் ஆதிக்கம் ஆக்கிரமிப்பு உத்திவேறாய்
இயற்றவே நிற்கின்றார்- வேண்டுமா தொல்லை?
பிறழாத பிரபாநம் தனித்தலைவன், வீரம்
விவேகம் உயர் யுக்தி கொண் டவன் காப்பான்

நிலையான மனத்தோடு நீணிலத்தை வெல்வோம்
நிச்சயமாய் தமிழ்மானம் காத்துமே நிற்போம்
விலைபோக நாமின்னும் முட்டாள்கள் அல்ல
விடுதலையே உணர்வாக திரும்பநாம் விரட்டுவோம்

நுண்மதியிழந்த நூலக எரிப்பு

“அறிவுப் பசியோ கல்வித் தாகமோ
எங்கே உணவு எங்கே தண்ணீர்
வீணாதாரி சரஸ்வதி தேவி
விழுந்தேன் அவள்மடி - அம்மா
செய்தித் தாள்களும் சஞ்சிகைகளும்
யானைப் பசிக்குச் சோளப் பொரியா
அம்மாதாயே வழிகாட்டு பசிபோக்கு”

கலைமகள் வந்தென் கனவினுள் நுழைந்து
‘என்காவலில் ஓர் வாசிகசாலை
அங்கே வருக முன்றலில் இருப்பேன்’
என்றாள், சென்றேன், கண்டேன்
கரும்புச் சோலையே காத்திருந்ததுவே
தாமரைமலரில் தேன் வண்டாய்
மொய்த்துநின்றேன்
உறுஞ்சி மகிழ்ந்தேன்

சொற்பொழிவா சொற்சோராப்
பட்டிமன்றமா பல்துறை ஆய்வா
மாநாட்டுப் பேருரையா கற்பிக்கும்
பாடத்தின் மேலதிகப் பதிவுகளா
அத்தனைக்கும் நான் அங்கே
அரியநூல் இருப்பெல்லாம் அத்துபடி.

ஓய்வுநாளா உணவுப்பொதியுடன்
தாய்மைக் கடமையைச் சேரஆற்ற
பிள்ளைகள் மூவரும்
சிறுவர் பகுதியில் நூலகர் பொறுப்பில்
ஏற்ற நூல்களை வழங்கி - உள்ளகவிளையாட்டு
ஓவியப் பயிற்சி இத்தியாதி செய்வர் அங்கே.

☞

மாடியறையில் நூலுள் நுழைந்தால்
மறப்பேன் உலகை
படபடவெனப் பக்கங்கள் புரளும்
கிடுகிடெனக் குறிப்புகள் நிறையும்
மடமடவென மாந்தி மயங்குவன்.
விருப்பமின்றி இழுபட்ட மக்கள்
விசுவாசம் மிக்க வாசகராகி
உற்சாகம் தரும் உயர்கல்வி - காலத்தில்
உச்சத்தை எட்டிப்பிடித்தனர் - அம்மா.
தாயே உன்தயவில்
கல்வித்துறையில் ஆழ்ந்த அறிவு,
'கொளுத்தக் கொண்டு கொண்டது விடாமல்
கருமம் ஆற்றியும் கல்வி புகட்டியும்
குவலயத் துள்ளுறை பிறதுறைகளிலும்
நுனிப்புல் மேய்ந்தேனும் சிற்றறிவு பெற்றும்
பயிலுநர் பலருக்கும் பயன்பட வாழ்ந்தோம்.

II

ஊரடங்காம் அவசர காலத்தோடு பிரகடனம்
உள்வீடுவிட்டு ஒருவரும் வாரார்
உதிரும் இராப் பொழு தொன்றில்
வேருடன் அறிவை அழிப்பதாய் நினைத்து
வெடிவைத்தார் நம்தாய்க்கு - வெந்தழல்கண்டு
வெடித்துச் சிரித்தார் குடித்து மகிழ்ந்தார்
சோர்வோடு குமைந்து புழுங்கிக் குடங்கிய
துட்டகமுனுவாய் துட்டன் காமினி
சொக்கப்பானையில் சொக்கி நின்றான்
யாருடன் சொல்லியழ அவர்தம் மடமை
நூலினை எரித்தால் தமிழர்தம்
நுண்மதியும் எரிந்துவிடுமோ சொல்தாயே

கேட்டசெய்தி இடிபோல்தாக்க
டேவிட் ஐயாவின் 'ஹாட் அற்றாக்'
வாட்டி வதைக்க வடியும் கண்ணீர்
வரிசையாய் நூல்கள் கருகும் காட்சி ☞

தேட்டமெலாம் சிதைந்து எரிந்த மணமோ
நாசியில் நுழைவதான வுணர்வு.
காட்டிய வஞ்சம் தமிழன் உறுதியைக்
கலைத்த தாடா? சொல்லடா சிங்களா!

அடுக்கடுக்காய் அத்தனை துறையிலும்
அரும்பெரும் நூல்கள் அடக்கி வைத்து
மிடுக்கொடு சூல்கொண்ட கர்ப்பணிபோல
மீதூர் பௌர்ணமி நிலாவென ஒளிர்ந்தாய்.
தருக்கொடு நிமிர்ந்து நின்றாயே அம்மா
தாங்கொணாத் துன்பம் வந்ததோ அம்மா?
ஒடுக்கப்பட்ட தமிழரின் சொத்தென
உன்மத்தம் பிடித்து உதைத்தாரா உம்மை?.

III

பதினைந்தாம் நூற்றாண்டு தமிழ் மன்னன்
பார்புகழும் செகராஜசேகரன்
பல்கலை விநோதன்
மதிநிறைந்த புலமையும் அறிவும்
மருத்துவம் சோதிடம் வல்லாளன்
பல்நூல் யாத்தான்
பதியெங்கும் தேடிப்பாந்தமாம் நூல்கள்
பக்குவமாய் தமிழில் பெயர்த்தும்
படிகள்பல எடுத்தும்
புதியநூல் ஆக்குவித்தும் பொலியும்நல்
பூம்பொழில் போலொரு சுவடிச்சாலை
போற்றிசெய் தமைத்து உவந்தான்

காலன்போல வந்ததனைக் கருக்கினாரே
காலச் சரித்திரத்தை அழித்தாரே நம்பகைவர்
ஓலைச் சுவடிகளோ தீப்பற்றி எரிந்தன
ஒட்டாதார் உள்ளத்து பொறாமையால் தானே.
சாலைகள் எரிக்கும் பரம்பரை அலகு
இரத்தத்தில் ஓடியதோ? இவர்தம் மேனியா (பித்து)
சூலங் கொண்டிவர் சோரம் போக்கிட
துணிந்தனர் நம்இளைஞர் தாமே. ☞

கட்டியெழுப்புவோம் பாரடா மூடனே
 வெட்டிப்பேச்சல்ல வெளியுலகம் பார்த்தோம்
நுட்பங்கள்தேரும் நூலகம்பல கண்டோம்
 நொட்டை சொல்கிறாய் பார்ப்போமே
கெட்டித்தன மிருந்தால் வந்து எரியூட்டு
 கிட்டத்தானே பூலோகக் கிராமம்
வட்டி குட்டியோடு வாங்குவாய் வா
 வெளவும் குணத்தை வாட்டி யழிப்போம்

காதலின் நிபந்தனை (2)

அன்பரே! உங்கள் காதல்
அமரத்துவ மானது
காதலுக்காக உயிரையும்
பணயம் வைப்பேன் என்றீர்கள்
“வெளியே வா வேங்கையே”
என்றழைத்தீர்கள்
வேங்கைக்கு நிகர்ஒரு வேங்கையே நண்பா!
உள்ளே வாருங்கள்
நஞ்சுமாலை கழுத்தேற - என்
காதல் மாலையும் சேர்ந்தேறும்

மேடையும் கவியும்

ஊருக்கு நான் போவேனோ!

கறையான் அரித்ததுவோ - நம்
காங்கேய வள நகரை
நிறைவாக வாழ்ந்த வலி வடக்கில்
யானை புகுந்ததுவோ துவம்சம் செய்ததுவோ
சிறை கொண்ட அகதிநிலை சிறுப்பினைகள் செய்து நிற்க
சீரான நம் இல்லத்(துத்) தன்னிறைவு யோசனையே!
உறையும் ரத்தவெறிக் குரங்கு குடி கொண்டனவே
உரைத்திடுவீர் ஜெகத்தீரே ஊருக்குநாம் போவோமோ

நாமெல்லாம் திட்டமிட்டுக்
கட்டிவைத்த நம் வீடு
அருளகம் அன்பகம் அறிவகம் உணவகம்
பாகசாலை யெனப் பற்பல அறைகளுக்கும்
நாமமிட்ட வீட்டின் நற்பெயரோ 'திருப்தி'
நாற்புறமும் மா, பலா, தென்னை மரம் தேசியென
ஆண்டு பூராக் காய்க்கும் முருங்கை அதிசயமே
பூநகரி நெல்லும் பொலிந்திலங்கும் பத்தாயம்
ஆமை புகுந்ததுவோ அங்குகுடி கொண்டதுவோ

வீரம் விளைந்த இல்லம்;
வீரமகள் வளர்ந்த இல்லம்;
பார் போற்றும் படிப்பாளர்
பயின்று புகழ் சேர்த்த இல்லம்.
ஓராயிரம் கணைகள். ஓடினோம் ஒரு பொழுதில்
ஏறாளர் புகுந்தார் அனுபவிப்பார் அசையாராம்
போரொன்று நிகழ்த்தாமல்
ஊருக்கு நாம் போவோமோ

சித்தப்பா வீடோ சிதறிய தேங்காயாம்
மாமரமும் பூமரமும் மற்றுமுள செடிகொடியும்
புத்தம் புதிய வகைப் பொன்மீன் தொட்டிகளும்
புதிதாக வகுத்த பூஞ்சோலை யாமனைத்தும்

☞

செத்துப் பற்றைக் காடாகி சீரழிந்து நிற்பனவே.
எண்சார் வீடான என்னப்பன் வீடோ
வத்தாசியோடு வளவுநிறை தென்னைகளும்
பரந்து நிழல் தந்த பாரிய வேம்புகளும்
மெத்தருசிப் பலாக்களும் அத்தனையும் சாய்த்து
கற்குவியல் மேட்டை அலங்கரித்து நிற்க
சித்தங் கலங்கும் அகண்டப்பெருவெளியாம்
இக் காட்சி காணப் போவேனோ ஊருக்குநான்

உற்றார் உறவினர் ஒன்றும்மனத் தூரவர்
குடிசையில்லாக் குடியிருப்பு நம் மூராம்
கட்டியெழுப்பிய கல்வீடு அத்தனையும்
குட்டிச் சுவராச்சே குடிமுழுகிப் போயிற்றே
ஓட்டைக் கழற்றி ஓட்டோடு சேர்ந்தவொரு
கோப்பிசமும் தீராந்தி கதவுயன்னல் நிலைகளையும்
வீட்டை இடித்தெடுத்து ஏற்றினார் கப்பலிலே
விருப்போடு போவதற்கு யார் வீடும் இல்லையே.

பொங்குமாம் கடல்

தமிழ் ஈழத் தகையோரே,
எங்கள் பிள்ளைகள் உங்களுக்காக அங்கே,
நீங்களோ அவர் நலன் நாடி இங்கே
ஆயினும் எம் நண்பரே,
ஒரு சிலர் மேதாவிகளாக நடிக்கும் பவிசு
அவருள்ளமோ சின்னத்தனத்திலும் சிறிசு
உண்டு கொழுத்துக் கொழுப்புக் கரைய
உரத்து ஓலமிடும் முயற்சி

'சுதந்திரம் வேண்டும் நமக்கு நம் மண் வேண்டும்
வேறொருகருத்துக்கு அங்கே இடமில்லை' என்பர்
ஆனால்,
"உண்ண உணவுண்டு உடுக்க உடையுண்டு
படுக்க பாயுண்டு பல்நலமும் பொலிந்திருக்கு
சுரண்டாமல் விட்டால் உனக்கென்னகேடு"
எனக் கேட்கும் மந்திக் கூட்டமும் இங்குண்டு
சுரண்டினால் ஆழக்குழி தோண்ட வேண்டுமோ?

மாக்ஸீசம் சொல்லாத மாக்ஸீயத் தத்துவங்கள்
உள்ளமும் உடலும் சிவக்கு முன்னரே
சிவப்பு அரிதாரம்! அதற்கொரு மேடை!
செங்கொடிச் சடடைக்குள் தகுதிபெறப் பரிதவிப்பு
உண்மை யொளி ஏது அங்கே?

கருத்துச் சிவப்பினைக் காதலிக்காது
(அ)நியாயங்கள் பேசும் கிணற்றுத் தவளைகள்
இவர்தம் நொட்டைப் புலம்பலில்
முற்றிய மனநோய் 'ப்ளிச்' எனத் துலங்கும்

இயலாமை, ஏக்கம், அவமானம், ஆதங்கம்
புளித்த கள்ளாய் நொதித்துத் தள்ளும்
நொதிப்பில் எழுந்த தாழ்வுச் சிக்கல் (Complex)
பொன் மொழிகளை உதிர்த்துத் தள்ளும்

☞

ஆம் தோழரே
மண்ணைக் காக்கும் எம்மிளம் புலிகளை
மண்ணின் மைந்தரை நுண்மதிப் புதல்வரை
தன்னலம் அறுத்த தியாக சீலரை
உணர்ச்சிப் பருவமாம் - பிணைத்த
மூளைச் சலவையாம் - விளக்கின்
வீட்டில் பூச்சிகளாம் - வலையில்
சிக்குண்ட சிறுவர்களாம்
மனிதப் பிஞ்சுகளுக்குத் தோள் கொடுப்பதாய்
முதலைக்குப் பாடம் கற்பிக்கும் மூடர்கள்

அட மூடங்களா!
ஐந்துக்கும் ஆறுக்கும் மானங்காக்க
அரக்கருடன் மல்யுத்தம் அங்கே
அந்தத் துவக்குகளை அழிக்கும் வகையறியீர்
குஞ்சுகள் சுமப்பதாய் துவக்குகளைச் சாடுகிறீர்
நீரும் அவ்வகையீரோ?
துவக்கென்ன ஒரு இராணுவனின் எடையா?
காம வெறிக் கழிசடையின் தினவுதீர் படையா?
கொத்திக் குதறுமா? கசக்கிக் கடிக்குமா?
அவன் திண்டு போறதை
மண் திண்டு போகட்டுமே (டா)

தீர்வுப் பொதியைக் காணு முன்னரே
தூற்றல் வியூகம் அமைத்த மூடரே
கோமாளிக் கூத்திட்டு ஏமாளியாகும்
கோழைகள் நீங்கள்

வெட்கத்தால் வேதனையால் விஷமத்தால்
வேடிக்கைக் கதை பண்ணுகிறீர்
வெறுப்பு விரக்தி ஏமாற்றம் வக்கிரம்
அத்துடன் சேர்ந்த சுத்தச் சுயநலம்
அதற்கொரு இலக்கியப் பூச்சு
ஒரு நேர உணவுக்கும் போதாத டொலருக்காய்
'பணம் பறிக்கிறார்' என வொரு பிதற்றல்

☞

வேங்கையின் வீரம், மதியூகம், வெற்றி, கண்டு
வினைஞ்செழும் மனச்சாட்சி பொறாமையாய் விரிகிறதோ

வேங்கைகள் இன்றேல் வெளியுலகம் பார்ப்பீரோ?
மூங்கையரே! உள்வளைந்த முதுகெலும்பை நிமிரவைப்பீர்
தாய்க்கரிசி கொடுக்கவே தயங்கி நிற்கும் வீரர் நீர்
வாய்க்கரிசி போடவோ வரிசையில் முன்நிற்கின்றீர்
கரையக் கரையக் கத்துங்கள் மண்டூகங்களே!
கத்தாத செயல்வீரம் அராஜகத்தின் பிடியில்
கத்துகிற நீங்களோ வறட்டுப் பொன் கூண்டுகளில்
கூடிக் குடித்திருந்து கும்மாளம் போடுகிறீர்
காற்றும் வீசாத கடுஞ் சிறையின் அடிமைகளே!

வேட்டை நாய்களாய் நாக்கைத் தொங்கவிட்டு
வீணீர் வடித்துத் தருணம் பார்த்திருப்பீர்
கறையான் புற்றெடுக்கிறது! நச்சுப் பாம்புகளே!
குடியிருந்து ஆட்சி செய ஓடிநீர் போவீரே
இனி
கால்வருடி, கைவருடி
தாளம் போட்டுத் தலையாட்டி
தூக்கி யெறியும் எலும்புத் துண்டை
பாய்ந்து கௌவத் தயாராவீர்
அன்றே கடல் பொங்கட்டும்
லங்கா புரியை இரை கொள்ளட்டும்.

1996

நனவாகிய கனவுகள்

'தாயகம் தவிர்ந்த தொரு காவியம் நான்பாட
தீயாய் எரிந்து திடசித்தம் கொண்டு விட்டேன்
சொற்களிலே வீறும் உணர்ச்சிக் குவிப்பும்ட
இன்றியோர் கவிதை இயம்பும் முயற்சியில்
இறங்கியுள்ளேன் இயலுமாவெனப் பார்ப்போம்

கனவுகள் நனவாக, நினைவுகள் கனவாக
விதியினால் கோடிட்டு வெல்லவும் முடியுமோ
கனவுகளும் கற்பனைகளும் நிறைவேறல் அதிசயமே
இளமைப் பருவத்தில் கருத்தாழம் மிக்க
வளமார் அறிஞரின் வியத்தகு நூல்கள்
உள்ளத்தை கொள்ளை அடித்தாலும் ஒரு நேரம்
ஓய்வாய் இருக்க லேசான வாசிப்பு
உல்லாசந் தரும் ஆங்கில நாவல்கள்
சிற்றின்பச் சிறகடிக்கச் சிறுபொழுது வாசிப்பு
பாபறா காட்லன்ட் றூபி எம்அயர்ஸ், டெனிஸ் றொபின்ஸ்
இத்தியாதி புத்தகங்கள் புது உலகை காட்டி நிற்க
பிக்காடிலி அரங்கம் பிக்பென் பிரஞ்ச் சவுக்கம்
உணவு விடுதிகள் ஊமை நடனங்கள் கண்கவர் காட்சிகள்
பனி மழையை ஊடறுத்து கோட்டுக்குள்ளே புதைத்தபடி
நாயக நாயகியுடன் நாமும் கற்பனையில்;
அல்லது ஆபிரிக்கக் காடுகளில் அலைந்து திரிந்தும்
அதிசயங்கள் பார்த்தும் ஒட்டகத்தில் சவாரி செய்தும்
நூல்களில் மாத்திரமல்ல ஆங்கிலப் படங்களிலும்
அதனையே சந்தித்து கற்பனையில் வாழ்ந்தோமே
தினந்தோறும் வருமானம் தேவைக்கும் போதாதே
நினைத்தே பார்க்காத வெளிநாட்டுப் பயணங்கள்
ஆயினும்
நன்மைக்கோ தீமைக்கோ அனுபவத்தில்
நடக்கமுடியாதன என்பனகூட
நடக்க முடியுமாய் காலம் மாறியது
கனவெல்லாம் நனவாக நூல்களில் கண்டவற்றை
ஐரோப்பா அமெரிக்கா கண்டங்களில் பார்க்க
காலம் ஒன்று கனிந்தது
இளமையின் கனவுகள் முதுமையில் நனவாகின

ஊடகவியலாளர் படுகொலை

அன்புள்ள நடேசா
அண்டம் நடுங்கிட அறிந்தோம் செய்தி
அஞ்சினர்க்கு சதமரணம் அஞ்சாத நெஞ்சத்து
ஆடவருக் கொருமரணம் சொன்னானே சேக்ஸ்பியர்
துஞ்சினாய் அன்பனே துவளுதே எம் நெஞ்சம்
பசளை பலவிதைத்துப் பதப்பட்டது உன் அறிவே
பாழாகிப் போனதடா பட்ட ஒரு சூட்டிலே
ஊடக அறிவென்பது தேடியபல் துறைக்கல்வி
ஊடுருவி நுழைந்து உட்பொருள் கவர்ந்து
ஏடுகளில் வரைந்து ஏற்றம் தந்தவனே

முகிழ்த்தெழும் நுண்மதிக் குவியலில் அவர்தம்
குயுத்தி வஞ்சம் சதிகள் புடைத்தெழும்
சுட்டனை தீந்தமிழ் சொல்லால் அவைகளை
விட்டனை வானொலி அதிர்வலை நமக்கு
புன்மதி படைத்தவர் புழுங்கினர் வெந்தனர்
துன்மதி செயற்பட துவக்கினைத் தூக்கினர்
என்மதி இவர்க்கு? இழுத்தனர் விசையை
கொன்மதி என்பது கூடவே பிறந்ததோ?

சூரிய ஒளியைச் சுளகால் மூடும்
காரியம்; விழல்களே! கை கூடி வருமாடா
ஏவற்பேய்களே! ஏவிய கோழைப்
பாவிப் பதர்களே! பஞ்சைப் பனாதைகளே!
பாழ்ங் கிணற்றில் வீழ்ந்து பாழ்பட்டுப் போவீரே
பாதகங்கள் விளைத்துப் பரிசழிந்து போவீரே
பசியால் உடல் வருந்தி வற்றி வற்றிப் போவீரே
யாரைத்தான் நம்புவது நடேசா உன்
குரல் கேட்டுச் சிறுபொழுதில் குளிர்ந்து போனாயா?

உன்நிலை கண்ட ஊடகவியலாளர்
உருத்து எழுந்தனர் உறுபயம் கண்டிலர்
உறுதி பூண்டனர் தொடர்வோம் நின்வழி
என்றார்ப் பரித்துக் கடமையில் இறங்குவர்

☞

அந்தோ பாவம்! அடக்க நினைத்தோர்
அருண்டு பதுங்கினர்
வெட்ட வெட்டத் தளைக்கும் நிலை
வேதனையோடு ஏமாற்றம் அவர்க்கு.

தமிழ் ஈழத்துக்காய் கடமைகள் செய்தாய்
"புலம்பெயர் தமிழ் மாந்தர்
புத்தியை விளக்க வல்ல
புலனாய்வுச் செய்திகளனைத்தும்
சுடச்சுடவே கொடுத்தாய்" என்றே
காலம் உன் பெயரைப்
பொன்னெழுத்துக்களால்
பொறித்து வைக்கும்

களம் பாடிய மாவீரனே

சித்திரா மணாளனே சித்தம் உவந்தோ
நித்ராதேவியின் தஞ்சம் பெற்றீர்
நிரந்தர சுகம்பெறும் வழியைத் தேடி
நித்யானந்த நீள்துயில் கொண்டீர்
நின் புரட்சிச் சிந்தையுள் போர்க்களம் விரிந்து
புதியதோர் கீதை விளக்கம் தந்தது

குருசேத்திரக்கீதைக்கு ஒப்பீடு தமிழர்
பெருமைக்காய் போராடும் போராளிக் கூட்டம்
போதகர் ஞானமும் போர்க்கள அறிவும்
போட்டியில் வளர்ந்து சிந்தையில் துளிர்த்த
தத்துவக் கருத்துக்கள் ஞானிகள் சான்றுடன்
மெத்தென விரிந்து மேன்மையாய் நிற்கும்

வரம்பெற்றார் போர்வீரர் ஆன்மீகப் பாதையில்
பரம்பொருளே கையேற்றார் மாவீரர் உயிர்தனையே
கரங் குவித்துப் போற்றம் கருத்துப்பல தந்தீர்
மரம் போன்ற நெஞ்சங்கள் மரத்து விட்ட போதும்
உரங்கொண்ட உன் சொற்கள் உன் வேள்வித்தீயில்
அரங்கொண்டு அறுக்குமடா ஆகுதியாய் ஆக்குமடா

"கீதையல்லக் குறளே தற்காலத் தேவை" யெனும்
பேதையர்; இரண்டுமே அறியார் எனக் கவன்றீர்
மேய்ந்தார் நுனிப்புல்லை மேவார்தாம் நாணி
வாய்பொத்தி நிற்க, வரைந்து விடு தாயே!
நோய் அகலட்டும் என்றீரா," சோம்பல் தான்
ஆய்வு செயும் ஆர்வம் நின்மறைவில் தோன்றியதே

புத்தக வெளியீடு பிரசவ வேதனையாம்
நித்திரையின்றித் தலைவன் புகழ் பாடி
வித்தகர் மத்தியில் விருது பெற்(று)ஓய்வதன்முன்
மார்போடும் நெஞ்சோடும் போர்க்கள மாடிய
மாவீரனே போய் வா! கண்ணீரால் விடை தந்தோம்
போய் வா மகனே! எழுத்தாற்றல் ஓய்ந்ததோ

திலீபன் - ஈழத்தமிழ் தியாகி

தியாக ஒளியாக இதயத்தில்வாழும் - திலீபனே
புலராத பொழுதுக்குத் தீ மூட்டினாயா
இல்லவே இல்லை
உதிக்காத சூரியனுக்கோர் ஓலை விடுத்தாய்
மதிக்காத அயலானுக் கோர்மதி புகட்டிவிட்டாய்
தீக்சிற் என்ன, நம்பியார் என்ன, இந்தியப்
படையே திரண்டு வந்தாலும் அஞ்சாத நெஞ்சத்தை
தீரமிகு தமிழனின் வீரமிகு நெஞ்சத்தை
நேர்மையுடன் செயற்பட நேர்வழியை வகுத்தாய்
அகிம்சையின் அர்த்தம் புரியா நம் அரசென
அருவருத்து விட்டாரெம் தமிழரசுத் தலைவர்கள்
இந்தியச் சிறுக்கர் மசிவார் எனநம்பி
கைவிட்ட அகிம்சையைக் கைக்கொண்டாய் நீ
உயிரைக் கவர்ந்தவன் கோட்சே யாயினும்
மகாத்மாகாந்தியின்
உயரிய கொள்கையைப் புதைத்தவர் யார்?
பாரத நாட்டு அரசுக் கொள்கை
காந்தியைக் கொன்று சாந்தியைக் குலைத்தது
அறியாயோ திலீபா?.

II

பேடைக் குஞ்சுகளின் கூட்டைத்திறந்துவிட்ட
பார்த்தா
மேடையில் சாய்ந்து சிரிக்கவும் இயக்கமின்றி
நீ கிடந்தாய்
கோடுகளாய் நீண்ட வரிசைகளில்
கூடுயர்ந்த நத்தைகளாய் ஊருகின்றோம்
வாடிய முகத்தோடு தலைசாய்த்து
வணக்கம் செய, அறிமுகத் தலையசைப்பு
வெளிறிய கண்கள் சிலவினாடித் தரிப்பு
ஏதோ ஒரு எதிர்பார்ப்பு. கற்பனையோ
அறிவேனடா உன் ஆதங்கம். ஆனால்

☞

தாடை எலும்புகள் இறுகியொரு தவிப்பெனக்கு
தளம்பித் தேம்பி கேவல் தலைகாட்ட
ஓடிய கண்ணீர் உள்ளடக்கி விழுங்கி
'கோழைகள் நாமல்லர்' என்றே தெளிந்தனம்

உன்னுடனான ஒரு சம்பவம் சொல்வேன்
அன்றொருநாள்,
மாரிகாலம் மாலைநேரம்
வகுப்பறை ஒன்றில்
சமூகநலன் நோக்கில் சுதந்திரப் பறவைகள்
பாசறைப் பயிற்சிகள் தொடங்காத காலம்
கம்பக்கடல் பார்வையாளனாய் காலடி வைக்கிறான்
அச்சந்தொடக்கம் பச்சைப்பிழையாய்
இச்சைபட விளக்கும் வெட்டிப்பேச்சான்
பெண்களின் நாற்குணக் காவல னவனெனும்
வெறுப்புப் பார்வைகள்.
அமைதியாக்கும்நின்சிரிப்பு.

முதலுதவி, கிராமச்சுத்தம், அரசியற்பணி,
போலிக்கௌரவம் அற்ற சேவைகள்;
பயிற்சிகள் முடித்து மாலைநேரம்
விரிவுரையோடு கலந்துரையாட வந்தனர் மங்கையர்
வீரப் பெண்களின் தீரச்செயலும் அஞ்சாநெஞ்சமும்
விண்டுரைக்கப் படுதல் உண்டு.

இந்தியா சீனா ரஷ்யா துருக்கி
பந்தபாச மறுத்து விடுதலைப் போர்புரி
வித்தகப் பெண்கள் விளைத்த வீரம்
வன்னிநாச்சி, ஜான்ஸிராணி
அம்மை சியூசீன், அமேசன் றோஜா
தூதுகள் சென்ற ஔவைப்பாட்டி
ஆதியாரோடு அன்னிபெசன்ற் கியூறியம்மை
ஹெலன் கெல்லர் ஆதியாம்
செம்மை மகளிர் எழுச்சிக்கதைகள்
உணர்வு மிகுதியோடு உரைக்கப்படவே

☞

மௌனக் கிரகிப்பு முகத்தில் வியப்பு;
மனித நேயமும் சுதந்திர வேட்கையும்
மாற்றம் நிகழ்த்தும் முகமாதல் கண்டோம்
திண்மை பெறுமே பெண்மையின் மென்மை.

விரும்பி வந்தவர் விழைந்தார் உரையாட
அனுமதி கொடுத்தாய் நீ திலீபா!
வெறுப்பு இவர்க்கு.
நிமிடப்பொழுதில் நம்பிக்கை சாய்க்கும்
நேர்த்தித் தகவல்
பெண் விடுதலை பேசும் பெண்களின்
அவலவாழ்வாம். தனித்தனி பெயரிட்டு
"இவர்தம் மூச்சால் கணவனை இழந்தார்
பதியைப் பிரிந்தார், நோயாளி யாக்கினர்
மீனாட்சி ஆட்சி புரிகிறதா உமக்கு"
குடுமியைப் பிடித்து உலுக்க வேண்டுமெனும்
குமுறல் எமக்கு.
சிந்தித்தே பாராத இன்னொரு கோணம் ....
உளவியல்தாக்கம் வருமோ?

தொடர்கின்றார் "தங்கைமாரே!
ஈழம்பெறவே பயன்படுத்தப் படுகின்றீர்
ஈழம் கை வந்ததும் கோழைகளாக்கி
'பெண்ணறங் காப்பீர்' என்றே
மூலையில் முடக்குவர் அப்போ
தென்செய்வீர்?"
மங்கையர் கண்கள் கனல் கக்கின
கரங்கள் உயர்ந்தன
அடக்கி வைத்த ஆத்திர மெல்லாம்
திரண்டெழ முறைத்து, ஆர்த்தி எழுந்தாள்.

அண்ணன் வளர்த்த இலட்சியவீரரை
வீர மறவரை என் சொல்லிச் சென்றீர்
என்றென்றும் மாறார் எம்வீரர்.
நிலையொன்று வருமேல்

☞

"வளர்த்த கடா மார்பில் பாயுதெ"னத்
தெறிகெட்டோடுவர் கதிகலங்கித் தாண்டுவர்"
நிமிர்த்திய மார்பும் வெஞ்சின மொழியும்
திலீபா! நீவெடித்துச் சிரித்தாய்
அசடுவழியும் அவரோ,
"உங்கள் உள்ளத்துறுதியைச் சோதிக்க
சொன்னேன்" என்றே மழுப்பிச் சென்றார்
திலீபா! உன்கனவு நனவாகி,
களங் கண்ட காரிகைகள்
சிங்கள இராணுவத் துக்கோர்
சிம்ம சொப்பனமாக
வீரருக்குச் சமமான வீராங்கனைகளாய்
வலம்வரும் காட்சியைப் பார் திலீபா!
அன்று நீ வெடித்துச் சிரித்த சிரிப்பு
அகலாது நெஞ்சில் ஆணியடித்தடா.
நின் ஓர்மத் தியாகம் நம் சோகப் பிரலாபம்
மீறிய காட்சியாய்
உள்ளம் பூரித்த அந்த அட்டகாசச்சிரிப்பு
உயர்வாய் உள்ளத்தில் பதிந்து
பரவசமாக்குதடா.

பெண்கள் உலகின் கண்களாம்

பெண்களே உலகின் கண்களா மென்றே
பேரெழிற் கவிதைகள் கேட்டனம் நன்றே
பெண்களே பெண்களைப் போற்றினர் என்றால்
பெண்ணின் பெருமையைச் சொல்லவும் போமோ
பெண்களின் மகத்துவம் பேசிய ஆண்கள்
பிதற்றலை நன்றே உரைத்தனர் கண்டீர் - ஆனால்

சொன்னதைச் செய்து உழைக்கவும் தேயவும்
ஒருநாள் பொழுதும் காணாதே என்செய்வோம்
பூமாதேவியே மெல்லச் சுற்றுவாய்!
ஓய்வின்றிச் செய்யினும் ஒருநாள் பொழுதுக்கு
முப்பத்தாறு மணி தேவையன்றோ
அப்பொழுதும் திருப்திப் படுவாரோ என்னவோ

அச்சம் மடம் பயிர்ப்பு நாணாம்
        அழுத்தம் கொடுத்தார்; தத்தம்பண்பை
துச்சமின்றி அறிவரோ ஆண்கள்
        அறிவு, நிறை, ஓர்ப்பு, கடைப்பிடி நான்காம்.
மெச்சும் குணங்கள், மேவினராயின்
        மெல்லியர்தாமும் வல்லியர் ஆக
நிச்சயம் கணவன் பிள்ளைக ளோடு
        இல்லறங்காக்கும் இனியவர் ஆவார்

வாழ்க்கையில் ஒப்பந்தங்கள்

ஒப்பந்தங்கள் யாவுமே ஒற்றுமைக் காகவே
ஒன்றுசேர் வாழ்வோடு உரிமைகள் கோருமே
தனித்துவம் வாய்ந்த மனிதரோ நாடோ
ஒன்றையொன்று விழுங்கமுயன்று
வலியார் மெலியாரை வாட்டி வதைக்க
சமவலு துறைவலு பெற்றுயர் மெலியார்
நிலைகண்டு, முறுகிக் குமைந்து முட்டிமுட்டி
முரண்டு பிடித்து முடியைப் பிய்த்து
திரண்டு எதிர்த்தும் வெற்றி தராமையின்
உருண்டு எழுவது ஒப்பந்த வரைபு
இரண்டும் அதனை மதித்து நடந்தால்
துரும்பு துவாரம் தேடி அலையார்
கரும்பாய் அமைதி வாழ்வு கிட்டுமே
ஏட்டில் எழுதியது நாட்டில் செயலற்றால்
மாட்டிக் கொண்டு விழிக்க நேருமே
ஒப்பந் தத்தில் ஓட்டை விழுந்தால்
தப்பாமல் உரிமைகள் தட்டிப் போகும்
ஆணவம் அதிகாரம் மையம் கொள்ளும்
பெரியமீன் சிறியதை முக்குளிக்க வைக்கும்
சிறிய மீன் விழித்துக் கொண்டால் எதிர்க்கும்
எதிர்க்காவிட்டால் அடிமையாகும்
கப்பும் வளையும் பொறுத்துக் கொண்டால்
ஒப்பந்தம் உடைந்து குப்பையில் போகும்

II

முதலாம் உலக மகா யுத்தம் வந்தது
உலகை ஆட்டிப் படைத்து ஓய்ந்தது
எழுந்தது ஒப்பந்தம் 'சர்வதேசசங்கம்'
இழப்பும் வலியும் ஆறமுன் வெடித்தது
இரண்டாம் யுத்தமும் ஆயுத வளர்ச்சியும்
அணுக்குண்டைத் தொடர்ந்தது ஜலவாயுக் குண்டு
நிகழ்காலம் மட்டுமல்ல எதிர்காலமும் அழிவே
'ஐக்கிய நாடுகள் சபையே' ஒப்பந்தம் ☞

வலலரசு வேட்கையில் நாட்டுக்கு நாடு
கொல்லும்பகையும் கொடுங்கோ லாட்சியும்
பல்கிப் பெருகின பயத்தை விளைத்தன
இஃதிவ் வாறே இலங்கை ஒப்பந்தம்
கோட்டையை விட்டுத் துரத்தப் பட்டவர்
ஆட்டுமந்தையாய் வெட்கம் மானம்
ரோசங் கெட்டுடன் படிக்கை காட்டி
தேசங்களறியத் தீர்வைத் தீட்டி
கோட்டைப் பகுதியில் குடிவந் தனரே
மாட்டுப்பட்ட மாவீரர் தியாகம்?.

III

இதுவரை புறப்பொருள் இலக்கணம் கண்டோம்
இனியொரு அகப்பொருள் விளக்கம் காண்போம்
ஒப்பந்தம் என்பது மணவிழா ஆகலாம்
ஒப்பந்தம் என்பது மணப்பதி வாகலாம்
காதலர், நண்பர், உடனுறை தம்பதி
பெற்றார் உற்றார் எவர்க் கிடையாகலாம்
நன்றே செயற்படின் நன்மையே யாகும்
உள்ளம் ஒன்றாத ஒப்பந்தம் எதுவும்
நிர்ப்பந்த வாழ்வுக்கே இட்டுச் செல்லும்

இல்லறவாழ்வின் இனிமைசேர்க்க
காதலோ ஒழுங்கோ கல்யாணம் என்பது
வாழ்வின் இனிய பங்காள ராக்கும்;
மகவுற் பத்திச் சாதனம் சரிவர
உடற் பொருத்தமும் உள்ளப் புணர்ப்பும்
இணைய வருவது போற்றும் புத்திரர்;
ஒருவரை ஒருவர் மதித்துப் புரிந்து
அன்பை வளர்க்கின் மன்பதை வணங்கும்.

மன்றல் புகுமுன் பெண்ணின் உளத்தில்
ஆண் என்பவன்
வேண்டிய இடங்கள் அழைத்துச் செல்பவன்

☞

விரும்பிய பொருள்களை வாங்கித் தருபவன்
அழகில் மயங்கி அடிமையாய் இருப்பவன்;

ஆணின் நிலையில், பெண் என்பவள்
இச்சைகள் தீர்க்கும் இனியபெட்டகம்
அழைத்த குரலுக்கு ஆஜராபவள்
அறுசுவை யுண்டி, எடுபிடி, வசதி
அனைத்தும் செய்து தெய்வமாய் போற்றுவள்;

அத்தகு இல்லற வாழ்வில் அன்பா?
ஆணவம் ஆதிக்கம் தலைவிரித் தாடும்
போட்டி, பொறாமை, பரம்பரை இழுபடும்
தனிமனித சுதந்திரம் தறிகெட் டோடும்
அனுசரிப்பற்ற அவலவாழ்வு
எங்கே நிம்மதி என்றே பறக்கும்
கொஞ்சிய குழந்தைகள் கூடி வெறுக்கும்.
அஞ்சியவ் வாழ்வு எப்படியோ? ஏங்கும்
உப்புச்சப்பற்ற பேச்சு வார்த்தைகள்
அப்புஆச்சி அறிவுரை அனைத்தும்
சப்பெனப் போய்விட செருக்கு முன்வரும்;
நான் நீ போட்டி நரகமாக்கும்
உயிர்ப்பயங் கூட உணரத் தலைப்படும்
தற்கொலை, கொலைகள் தீர்வுகள் ஆகா
மானிட ராதல் அரிதா கையினால்,
மன்னுயிர் போற்றுதல் மாட்சிமை அன்றோ

IV

கிட்டாதாயின் வெட்டென மற
வெட்டிப் பிரிதலே தக்கதாமென
முட்டி முட்டிச் சொல்வோம் கேளும்
நாடா மனிதரா அமைப்பா எதுவோ
வெட்டிப் பிரிதலே வேதனை தீர்க்கும்
காலஞ் சென்று அருமை உணர்ந்தால்
மீண்டும் சேர்தல் மிகுபலன் அளிக்கும்
பிரிவின் துயரில் அருமை புரியும்

நெல்லினுமி சிறிது நீங்கிப்பின்னர்
புல்லினும் முளையாது என்றாள் ஔவை
சுட்டமண் ஒட்டாது என்றாலும் உள்ளம்
மண்ணுமல்ல கண் ணாடியுமல்ல
நொருங்கிப் போக. மீண்டும் தளிர்க்கும்
வன்பு மறைந்த அன்பு.
வாழ்க்கைத் துணை யெனும் மதிப்பு
இருவரும் சேர்ந்த தன்னல மறுப்பு
இவையே வாழ்வின் இன்ப ஊற்று.

இதுவே எமது நாட்டுக்கும் பொருந்தும்
தாளில் பதிந்தது மனத்தாளில் ஏற்காது
அடக்கி ஆளவும் சுயநலம் பார்க்கவும்
எத்தி இணாப்பி கதைபல பேசியும்
திரைமுக முறுவலை உலகுக்குக் காட்டியும்
எத்தனை நாட்கள் ஏமாற்றுவார் இவர்,
எத்தனை விஞ்சிய வித்தகன் வருவான்
எங்கும் தர்மம் நிலைக்க உழைப்பான்.

வரும் ஓர் நாள்

தேசங்கள் மாறலாம் இப்புவியில்
நேரங்கள் மாறலாம் நீள்கோட்டில்
பம்பாயே மாறலாம் மும்பாயாய்
மணலாறும் மாறலாம் வெலி ஓயா
லங்காவும் சிலோனாகி ஸ்ரீலங்காவாம்
இதுவெல்லாம் என்னவிந்தை இக்காலம்?
கடல்கோளால் புதையுண்ட லெமோரியா
எச்சத்தின் பிம்பமே தான் இலங்கையதாம்
சங்கங்கள் வகுத்த தமிழ்க்கண்டத்தின்
பாகமொன்று மேல்நின்றால் பராரியாமோ
ஆரியரோ திராவிடரோ அனைத்தும்பொய்
ஆதியிலே தமிழ் நிலைத்த நாடிதுவே
வரலாற்றுக் கெட்டியநற் சான்றுகளால்
கரையோர நிலங்களெல்லாம் கனதியாக
நம்மவரே குடியிருந்தார் நாமறிவோம்
தமிழ் நாட்டுக் குடியேற்றம் ஆயினுமென்
தமிழணங்கு சீர் மணிமே கலையாளின்
முன் பிருந்தே தமிழனிங்கே முனைந்திருந்தான்
வங்கத்தின் சிங்கங்கள் எழுநூறும்
வந்தேறிப் புதுஉலகம் வார்த்தெடுத்தார்
அந்தோநம் கதியன்றோ சீரழிவாம்
ஆதிக்க வெறியாலே வெந்து விட்டோம்
பாசங்கள் ஊழியிலே தொடர்ந்ததாலே
யாசித்தோ அடிபட்டோ யோசித்தோ
தமிழீழம் மட்டுமல்ல ஈழத்தின்
மொழியோடு கலாச்சாரம் மாற்றிடுவோம்
கடல்கோளின் முன்பிருந்த நிலையெடுப்போம்
கலங்காதீர் தமிழர்காள் வருமோர்நாள்

பாசமும் நேசமும்

பாசங்கள் பாரமென்று இதயங்கள் அழுததில்லை
பா வொன்று படையென்று பாவேந்தன் சொன்னானே
பாவியறியானோ பாசங்கள் பாரமென
நாசங்கள் இவற்றாலென யாருக்கும் புரிவதில்லை.

அன்னையா மனைவியா அண்ணனா தம்பியா
சின்னத் தனமாகத் தடுமாறித் தவிதவிக்கும்
உதவும் கரங்களிடம் உசத்திக்கு ஓடிவிட
இதயம் அழுமே அவர் சபலம் எண்ணியெண்ணி

வேட்புக் குரியவர் மெய்மையின் உருவமாம்
போட்டியர் அனைவரும் பொய்யர் கள்ளர்
கவிஞர் ஒருவர் கருத்துக் கினியரா
புவியில் மற்றவர் கவிஞரே யல்லர்

குருட்டுப் பாசத்தால் கொஞ்சமா துன்பம்
வெருட்டும் தெருட்டும் சகிக்காத சீதையார்
'சொல்லினால் சுடுவேன்' என்றாளே தவிர
வில்லின் நசையினால் துயரங்கள் பட்டாளே.

கும்பகர்ணப் பாசமோ அவன் வீரத்தை வீழ்த்தும்
நங்கை நளாயினியும் கொழுநனைச் சுமந்த
கேவலமாம் கோலத்தைக் காட்டாதே பூமிக்கென
ஆதவனைக் கட்டளை இட்டாளே பாசத்தால்

நீதி நியாயம் நேர்மை அனைத்தும்
பேதி மாத்திரையாய் பாசம் கெடுக்கும்
பாசம் வளர ஆசா பாசங்கள் கூடும்
நீசத் தனங்களும் நிறையவே சேரும்

பாசக்கயிறு வரும்போது பாசம் முரண்டு பிடிக்கும்
ஊசலாடும் உயிரும் உருகி உருகித் தவிக்கும்
நேசித்தோர் நெஞ்சங்கள் நெகிழ்ந்து நோய் கொள்ளும்
வீசம் என் விலையென்னும்? ஆன்மா ஈடேற்றமே.

ஜுனியர் ஜீ.ஜீ.

உலகப் பந்தின் மூலை முடுக்கெலாம்
ஓங்கி ஒலித்த
நீதியின் குரலொலி
அநீதி காட்டி நியாயம் பொழிந்து
ஆதுரம் மேவிய அதிகாரக்குரல்
"எதுவரின் என்ன, என் மனச்சாட்சி
ஏதும் ஒழிப்பிலை" எனவெழும் சத்தம்
இழிவான் தமிழன், தனக்கொரு இறைமை
ஈங்கிலை யெனின்,
வாழ்ந்தென் பயன்?என
உரத்த குரலில் செவிப்பறை கிழிய
ஊரெல்லாம் கலக்கிய சிங்கக் கர்ச்சனை
ஒரு தனி மனிதனாய்
எதிரியின் கோட்டையில்
ஓசை எழுப்பிய வீரமறவனின்
ஐயமின்றி மொழிந்த பேருரைகள்
எவரையும் எழுப்பும் பிளிறல் நாதமாம்
இழிந்தகுணத்துக் கோழைகள் போலிகள்
ஔவியம் விளைத்த அவ்ஈனச்சாதியால்
அமல்குமார் எனும்எம் ஜுனியர் ஜீ.ஜீயின்
உச்சக்குரலும் ஒடுங்கி ஓய்ந்ததோ.

வீரமிகு மவன்செயற்பாடுகள்
மாமனிதன் விருதுக்கும்
மேம்பட்டு நிற்பதன்றோ

நம்நாடு

கடைசிக் கையசைப்பு

கையசைப்பு வகைகள் எத்தனை எத்தனையோ
அத்தனையும் கண்ணீரை வரவழைக்கும் கையசைப்பு
பள்ளிப் பருவத்தில் பக்குவமாய் கற்பித்த
பாலகிருஷ்ணமெனன் பிரியாவிடைபெற்றுக்
கேரளத்து மட்டஞ்சேரி மகிழ்வாய் சென்றிடவே
வகுப்பேழாம் வழியனுப்ப வந்தனர் மாணவர்
கடைசிக் கையசைப்பால் கண்ணீர் வழிந்தது
இக்காலம் போலல்ல அக்காலம்
தூரம், பணம், நேரம், அந்நியம்
யாவும் இனியொரு சந்திப்பு இல்லையென
அஞ்சியஞ்சி வெடித்துப் பிஞ்சுமனம் வெம்பியது

காலம் முதிர்ந்து இவையெல்லாம் நியதியென
போர்க்கால நிகழ்வுகள் - பொறுப்பைக் கூட்டின
ஹெலியொன்று சுற்றிவந்து
அடிக்காத நன்னாளில்
தைப்பூசத் திருநாளாம் வெள்ளிக்கிழமை
முதல்நாள் பாரதத்தால் வந்தவெம் திருமகன்
தந்தையுடன் கோவிலுக்குச் செல்லுமோர் நேரத்தில்
கல்லூரிக் கடமைக்கு காதகி நான் பாய்கையிலே
கையசைக்க வந்துநின்றாள் செல்வமகள் றோசாவாம்
வழியெல்லாம் திரும்பிப் பார்த்தாலும் நிற்கின்றாள்
மூலையிலே திரும்பையில் பார்த்தேன் பார்க்கின்றாள்
கையசைத்தபின்னர் உள்ளே போகின்றாள்
ஏனிந்தச் சோர்வு ஏனிந்த சோகம்?
ஏனிந்த ஏக்கம் ஏனிந்தத் தயக்கம்?
அண்ணன் வந்ததால் வேலைப் பளுவா?
அதுதானே வாணி வருகின்றாள் விடுப்பில்
உறுதியின் உறைவிடமாச்சே இவள் குணம்
ஏதோ சுகவீனம். உணவும் குறைந்து
உற்சாகமுமில்லை
காட்டவேண்டும் டாக்டரிடம் எண்ணினேன் ஒரு கணம்
பரபரப்பு அவசரம் மனச்சுமை சிந்தனை

☞

வகுப்புப் பாடங்கள் ஒழுங்கமைக்க
தாய்மை ஆசிரியத்துள் தாவியது
நாட்கடமை முடிந்து நகரத்தில் பொருள் வாங்கி
நல்லுணவு செய்து நாம் மகிழ்வோம் என்றே
'கேக்'கொடு நூடில்ஸ் அணியங்கள் வாங்கி
பஸ்ஸை விட்டிறங்கி மகிழ்ச்சியுடன் ஓடிவந்தேன்
பாதி வழி வந்து பார்ஸல் வாங்குவளே
அண்ணன் கதை ருசியில் ஆழ்ந்துவிட்டாள்போலும்
மௌனத்தில் ஆழ்ந்திருந்த வீடெனக்கு
சொல்லாமல் சொல்லியது ஏதோ அவலமென்று

கண்டதும் குரலெடுத்துக் கதறினார் அவள் அப்பா
கை நழுவி எல்லாம் முற்றத்திலே வீழ
காதில் விழுந்தது சரிதானா? தங்கையைப் பார்த்தேன்
"இனி என் மகள் எனக்கில்லை" என்றே அடிசாய்ந்தேன்
அந்தக் கையசைப்பே கடைசிக் கையசைப்பாய்
சொல்லாதன வெல்லாம் சொல்லிவிளக்கியது
அந்தக் கையசைப்பே கடைசிக் கையசைப்பாய்
இன்றும் பச்சையாய் என்முன்னே
அதே உணர்வு, அதே கண்ணீர் அதே துயரம்
தீரமகள் தியாகம் பெருமையைத் தந்தாலும்
வீரத்தாய் பட்டம் விரும்பி ஏற்றதல்ல.

துயரத்தின் எல்லையில்

நீ செய்த தியாகம் மகத்தான தென்று
நிலத்தோர்கள் சொல்லார்கள் - மகளே
நினைச் சேர்ந்தோரும் சொல்லார்கள் - மகளே
வீடொன்று வாட நாடொன்று காக்க
நீ செல்லலாமா மகளே - எமை
யாரின்று காப்பார் - மகளே

ஒளியான எதிர்காலம் உம்முன்னே தோன்ற
ஒளித்தோடி ஏன் சென்றாய் - மகளே
எமை வெறுத்தோடிச் சென்றாயோ - மகளே

துடியாய் துடித்த உயிர்க் கூடு ஒன்று இன்று
துடிக்க மறக்குதடா மகளே
இடையில் வலித்துச் சோருதடா மகளே

தமிழ்ஈழம் காக்கத் தனையரைப் பெறுதல்
தலையாய கடனன்றோ மகளே - அதை
நினைக்காது ஏன் சென்றாய் மகளே

1990

(மகள் நாடுகாக்கப் புறப்பட்ட 10 நாட்களின் பின் கனடா தூதரகத்துக்கு அவசரமாகப் போகவேண்டியபோது தொடருந்துவில் இருந்து கையறு நிலையில் பாடியது)

தலையாய கடன் எது அம்மா?

தேற்றலின் பின், மகள் பதில் சொல்வதான கற்பனை

1. கண்ணின் இமையெனக் காத்தாயே அம்மா
   கருத்தினில் என்னுள்ளம் கண்டாயோ தாயே
   பெண்ணின் பெருமையைப் பீற்றித் திரிந் தாயே
   பெண்ணியல் பென்பதும் இதுதானே அம்மா

2. பேரோடும் புகழோடும் வாழ விரும்புதல்
   ஓரோரு தியாகத்தின் அர்த்தமா அம்மா?
   பயனே கருதாத செயலொன்றே தக்கது
   பாரினில் வேறொன்றும் வேண்டேனே அம்மா

3. உரிமையை அழித்து உயிர்தனைக் காத்தால்
   அருமைச் சுதந்திர தாகம் தணியுமா?
   நிலையான தமிழீழ நிலை பேற்றிற்காக
   நினைவிட்டு வந்தேனே தாயே

4. தியாகங்கள் செய்வது தெம்மாங்குபாடவோ?
   தீமையகற்றவோ? செவ்வொளி காணவோ?
   நிலைமையை உணர்ந்தும் பெட்டைப் புலம்பலில்
   நீயொரு தசரதன் ஆகாதே அம்மா

5. விமான ஓட்டியாய் வரவேண்டும் பெண்கள்
   விவாகம் ஒன்றல்ல முடிந்தமுடி பென்றாய்
   தன்பிள்ளை என்றதும் தனையரைப் பெறுதல்,
   தலையாய கடனென்று ஏன்சொன்னாய் அம்மா.

1990

பெரியமடுப்போர் நினைவு

கண்மணிகளே!

நாட்டுக்காய் மண்மீட்கப் போனீர் பின்னர்
நாட்டினர் மாவீரர் நடுகல் ஆங்கே
தியாகத்தின் சின்னமாய் புனிதர் ஆனீர்
தயாவான தத்துவமே தேவர் கணங்கள்.
நினைத்தவுடன் உருவெடுக்கும் சக்தி உமக்கு
புனைந்ததொரு புரிந்துணர்வுப் பொதி தன்னால்
கூடி வரும் சமாதானம் நிலைக்க வேண்டி
நாடின்று காவலின்றித் தவிக்கின்றதே.

யாழ்நகர் வெளிப்பணத்தில் புரளும் - வெளி
ஊரார் உள்ளே பல நோக்கில் வருவர்
உணவுவிலை ஓங்கும்; வசதிவாய்ப்பு பெருகும்;
அறவாழ்வு ஆடம்பரமாகும்; புனிதவாழ்வு கெடும்

ஓடிவந்து அமைதிப் புறாவாய் நாடு காப்பீர்
ஓயாது அவர்காதில் மனிதம் சொல்வீர்
வழிபாட்டுக்குரியோரே!
கல்லறையை விட்டோடி வாருங்களே - வீர
மல்லரையும் சேர்த்தோடி வருவீர்களே - நாடு
செல்லரித்துத் துண்டாடிப் போகு முன்னே
சொல்லெடுத்துத் தமிழ் ஈழ மண்ணைக் காப்பீர்
நல்லோர்கள் நாடுகின்ற காவற் தெய்வங்களே
மெல்ல மெல்லக் காதோரம் வந்து, சுதந்திர
மேன்மைகளைச் சொல்லிடுவீர்!
நும் கடன் அதுவேயாம்

(உலகத்தமிழர் 2002)

இயற்பகை முடிப்போம்

மன்னவர் தவறி னாலும்
　　மதித்திடாப் பயிர்ப்பு கொண்ட
　　　　மங்கையர் வாழும் ஈழம்
　　　　　　மறப்பரோ மாற்றார் தாமும்
தென்னவர் அறிதல் வேண்டும்
　　தெருட்டினால் பணிய மாட்டோம்
　　　　தெவ்வரின் உயிரை யுண்ண
　　　　　　தெவிட்டுமோ தமிழர்க் கம்மா
சின்னவ ரென்று எண்ணல்
　　சிறுமதி உடையோர் புத்தி
　　　　சின்னதாம் கடுகின் காரம்
　　　　　　சிறியவர் அறிவரோ சொல்?
இன்னுயிர் அழிக்க எண்ணும்
　　இறுமாப்பு அழியும் வண்ணம்
　　　　இறுகிய பூட்டை உடைத்து
　　　　　　இயற்பகை முடிப்போம் வாரீர்.

(உலகத்தமிழர் 2004)

வெஞ்சினம்

சோகம்

வீர றோஜா வேங்கை யானாள்
பேரும் துளசிகா எனப் பெற்றாள்
தீரச் செயல்களில் மேஜர் துளசியாம்
போரில் மாண்டாள் மாவீரர் ஆனாள்

கழிந்ததற் கேங்கும் கடைகெட்ட ஜன்மம்நாம்
அழிந்ததை நினைந்துருகும் அவலப் பிறப்புகளாம்
இழிந்ததை உயர்வெனப் போற்றிடும் இதயங்கள்
பிழிந்துபிழிந்தழும் பேடிகளாம் கண்கள்
பெண்ணெனக் கொண்டால் பெரும் பேர்உவகை
அன்னையென நினைக்கின் ஆற்றொணாத்துயரம்
என்னென்று நினைப்போம் என்னரிய றோசாவே
மண்ணை நீர்மீட்பதற்கு மாவீரர் ஆனீரே

தாகம்

இழப்பின் துயரமும் இலட்சிய வேட்கையும்
வழவழப் பேச்சுடை ஒன்னார் வாய்ச்சொல்
விழலாய் பட்டெமக்கு வீரம் விளைக்கும்
தழலின் எரியில் தாங்காது ரௌத்திரம்.
சபலசித்தம், சந்தர்ப்பவாதம்
சலனக் கொள்கை, புரளும் நாக்கு,
சங்கடமில்லா உருட்டும் பிரட்டும்
சஞ்சலம் தரவே புரட்சிக் குமுறல் - அங்கேபோய்
கொத்தடிமையானாலும் கோடிபணம் சேர்க்கவென
வர்த்தகர்கள் வானொலிகள் தொலைக்காட்சி தொழிற்சாலை
அத்தனையும் ஆயத்தராம் புலிக்கட்டுப் பாடெண்ணி
பித்தராய் கலங்குகிறார்
பேதை மனம் எரியுதடி

ஈகம்

கன்னியர் எண்பத் தைவரைக்
        காவு கொடுத்த நாளிது
இன்றைய நன்னாளில்
        எடுப்போம் சபதமொன்று
நன்றே யெம் நற்தலைவன்
        நல்வழியில் நாம்நின்று
வென்றெடுப்போம் தமிழீழம்
        தோல்வியெனில் ஓயமாட்டோம்
மன்னராம் மாவீரர், கள
        மாடிய செந்நீர் மண்ணில்
தன்னலத்தின் சொரூபங்கள்
        ரகசியங் காவிகள் காலடி,
சின்னஞ்சிறு இடத்திலேனும்
        பதியாமல் காத்திடுவோம்

(உலகத்தமிழர் 2003)

எழுந்திரம்மா.

அழகுநிலா எழுந்தது - என்
அருமை மகளே எழுந்திரு!
வானத்து விண்மீன்கள்
வாழ்த்த வென வருகின்றன
'சில்' லென்ற தென்றலும்
சிலிர்த்துணர வீசுவதே
இன்னும் துயிலுதியே - தமிழ்
ஈழம் மலர்கின்றதே.

துயிலும் இடம்விட்டு
தூமணியே எழுந்துவிடு.
குறிக்கோள் குதிர்ந்திடவே
கூவினவே கோழிகள்.
தோழரோடு தோழியரும்
அணிவகுத்து நிற்கின்றார்.
மாவீரரோடு நீரும்
மதிமயங்கி நிற்காதீர்.

பாய்ந்து சென்றிடுவீர்;
காற்றாகப் பறந்திடுவீர்;
காவற்தெய்வங்களாய்
காத்து நின்றிடுவீர்;
அரக்கர் வஞ்சகமும்
அழுக்காறின் தீப்பொறியும்
ஆகாயவிமானமுமாய்
குண்டுமழை பொழியவரும்.

ஆவிகளுக்குண்டாம்
அசுரபலம் என்பார்கள்
பாவிகளின் விமானங்களைப்
பற்றித் திருகீரோ
பாக்கி (இ)ஸ்ரேல் திசை நோக்கி
பந்தாடி விடுவீரோ?
உடலோடுகளமாடும்
உத்தமரைக் காப்பீரே

☞

நிலவின் ஒளி பிடித்து
நீள் பந்தல் போட்டிட்டோம்
பனியின் துகள் எடுத்துப்
பாவாடை விரித்திட்டோம்
பைன் மரத்துக்கிளை வெட்டிப்
பாங்காக அடைத்திட்டோம்
வழியெல்லாம் மலர்தூவி
வாசனைகள் ஊட்டிவிட்டோம்

நிறம்மாறும் மேப்பிள் இலைத்
தோரணங்கள் கட்டிடுவோம்
சி.என்.ரவர் இருந்தே
எக்காளம் ஊதுகின்றோம்
காத்திருப்போம் சுதந்திரக்
காற்றங்கு வீசும்வரை
நம்கொடியும் துருவக்
காற்றினிலே பறந்திடும் பார்

வேறு

ஆவியோடு யாக்கைபொருளும் அழிந்ததோ தியாகம் தன்னால்
மேவிய பெரியோர் வார்த்தை உயிரின் மேன்மை கூறும்
சாவினில் அகாலமாயின் பசாசுமாய் பேயாய் அலையும்
சீவியம் தியாகமாயின் சொர்க்கமே திண்ணம் என்றார்

(உலகத்தமிழர் 2000)

பேயாகவாயினும் வருவேன்

முல்லைநகர் தேடி முள்ளியவளை நாடி
மொழியோடு மண்காத்தோர் உறையுமிடம் நாடி
மல்லிகை முகத்தாளை மாவீர சிகாமணியை
மாதாவாய் அணைத்திட்ட மண்மகளைக் காண்போமோ
வல்லிக்கொடி சுற்றும் வன்னி வனம் கடந்து
வரம்பேறி நடந்து வயல்வெளியைத் தான்கடந்து
அல்லிக் குளம் தாண்டி ஆவரசம் நிலந் தாண்டி
வந்துன்னைக் காண வாய்ப்பேதும் இல்லையடா

தாயான நானும் ஈமக்கடன் செய்யலையே
தனியனாய் தவிக்கவிட்டு பரதேசம் போனேனே
வாயாரப் புலம்பலையே வாய்க்கரிசி போடலையே
உச்சி முகரலையே உன்நாமம் செப்பலையே
நாயாக உன் பின்னே நான் தொடர்ந்து வரயிலையே
நசிந்தொடுங்கும் நேரத்திலை நல்வார்த்தை சொல்லலையே
பேயாக ஆயினும்பின் பெயர்ந்தோடி வாரேனோ
ஈழத்தைச் சுற்றிவரும் உன்ஆவியை நான் காண்பேனோ

1998

கண்ணே

விளை நிலத்தை வளம் பெருக்க நினைந்து
வேரூன்றித் தழைக்க மனம் மறுத்து
விளைந்த கருவறை தவிக்கத் துறந்து
விண்ணோக்கிப் போக வுளமாச்சோ
கண்ணே உன்கதி நியாயப்படுமோ?

1999

வீராங்கனைகள்

1. அண்டம் இடிபடப் பிண்டங் கலங்கிட
எழுந்தது ஈழப்போ ராட்டம்
கண்டம் நடுங்கிட விண்ணும் அதிர்ந்திட
விரைந்தது ஈழப் போராட்டம்
தண்டச் சோறுகள் தவித்துச் சோர்ந்திட
திரண்டனர் ஈழப் போர்வீரர்
குண்டு பொழிந்திட அஞ்சுவது ஒழிந்திட
எதிர்ந்தனர் ஈழப் போர்வீரர்

2. மென்னடை யழகி மென்சொற் பாவை
மெல்லிதழ் றோசா அவள்தானும்
நின்று நிமிர்ந்தனள் 'துளசி'யாகி
உயர் தொழில்நுட்ப நுண்மதியாகினள்
சண்டைகள் வலுத்தன களம் எதிர்கொண்டது
ரிவிசர-2 முதற்களம் ஆனது
முனைகளைத் தொடுத்து மூளையின் பலத்தால்
முன்னெழும் கட்டளை பாயுமே விரைந்து

3. பலரும் மெச்சிய வெற்றிகள் குவிந்தன
முல்லை பரந்தன் தாண்டிக் குளமும்
மலர்ந்தன; மீளத் தமிழ் மண்ணாயின.
பெரிய மடுவின் தேவை ஆயுதவேட்டை
தலைவியாய் கட்டளை தொடுத்தும் பல்முனை
நிலைகளை ஊர்ஜிதம் செய்தும் தன்குழு
தலையுடைக்கப் பணித்ததும், பாய்ந்தன
வேங்கைப் பெண்படை வீறுகொண் டோடின

4. ஓடுது விழுகுது பகைவர் கூட்டம்
உறுமும் புலியென வறுகிப் பாய்ந்து
துரத்துது துரத்துது பெண்கள் படையணி
ஆற்றாராகிப் புறமுதுகிட்டு ☞

ஷெல்லடி தொடுத்தனர் சிறுமதிப் பேடிகள்
திரும்பும் வழக்கம் இவர்க்கிலை யாதலின்
சில்லுகள் தெறித்து செவ்வுடல் சாய்த்து மண்
சிவக்க வைத்தனர் எண்பத்தைவர்

தேற்றம்

நாடிய சுதந்திரம் நமைநாடி வருகவே
மூடிய தியாகம் திண்மமாய் பொலியவே
கோடி யுயிர் கொடுத்த கோமான்கள் புகழும்
நீடு நிலைபெற்று வாழ்க வாழ்கவே.

மாவீரர்

கல்லறை கண்ணீர் வடிக்குமாம்
எவன் சொன்னான்
கல்லறை எங்கும் வீரம் பொங்கும்
என்னாளும் எந்நேரமும் எப்போதும்
சொல்லரும் விடுதலை சூழ நேர்ந்தால்
பல்லியம் பாடித்
துள்ளி யெழுந்து தொந்தோம் போடும்
மெள்ளப் பிரபா வாழ்த்துப் பாடும்.

திடமாய் போரிடு

கண்ணே றோசா! களத்தில் உன்றன்
கருமம் நீக்கி ஆண்டுகள் நான்கு
மண்ணை மீட்க இன்னுயிர் நீத்த
மன்புகழ் பெருகும் எம் முகம் வாடும்.

“விண்ணே தரினும் வேண்டேன்” என்றீர்
விழலுக்கிறைத்த ரத்தமே ஆகுமோ?
திண்ணம் எம் ஏக்கம் தீர்க்கும் நும் தியாகம்
தின வெடு தோள்கள் திடமாய்ப் போரிடும்

வேறு

மூன்றிலொரு நிலத்தில் முன்னங் காலெழுப்பி
முப்படையின் காவலிலே முதுகுயர்த்திச் சவாரி
சாம்ராட் சந்திரிகா சக்கரவர்த்தினி பராக்! பராக்!
என்கிறார் மாமா அவர் கவலை இதுதான்
“அசோகனுக்கோர் புத்தபிக்கு கலிங்கத்தின் களத்தில்
உனக்கார் ஆத்தை? சநதிரிக்கா! உனக்கு ஆர்?
உருக்குமனதை இளக்குவதற்கு உனக்காராத்தை?
பயப்படாமல் இரு! பார்த்துக் கொள்வேன்தானே”

கோடி கொடுத்தாலும் வாராதோ விடுதலை?
தேடித் தாராதோ தியாகத்தின் உயிர்விலைகள்,
நாடிப் புலம்பெயர்ந்தோர் நல்லிதய வேண்டுதல்கள்
பாடிப் பரவசமாம் பக்தர்குழாம் பரவுதல்கள்
வாடிப் புலம்பும் நோயுற்றோர் அரற்றல்கள்
கூடிச் செயற்பட்டாலும் குதிருமோ சுதந்திரம்?
தேடித்தராது காண் இவையெல்லாம் நம்மவர்க்கு
சூடி விடமாட்டாய் சும்மா இருந்தாயே

விடுதலை என்ன? திண்மமா யாரும் தர
திரவமா பருகிவிட? காற்றா சுவாசிக்க?
வீறுகொண்டெழுவோம் வெற்றி காண்போம்!

☞

பெற்றாலும் வெற்றி! வீழ்ந்தாலும் வெற்றி!
புறப்படு தோழா புறப்படு
உருட்டிப் புரட்டி மிரட்டி உதைத்து
உடைத்து இடித்து அடித்து நொருக்கி
தேடு விடுதலை தேடு தோழா!

(உலகத்தமிழர் 2001)

மாலை சூடும் நாள்

மாலை சூட்டி மாதழகு பார்க்கவென
ஏன் விளைந்தார் நின்அண்ணன் அக்காமார்?
வாலைப் பருவத்தில் நம் பெற்றோர் பெண்ஜவர்
வயதுக்கு வந்ததும் தம்பட்டம் அடிக்காது
மேலைக் கல்விக் கரைகாணும் வண்ணம்
விரும்பியே கல்லூரிக் கனுப்பினர் மனமுவந்து
சாலச் சிறந்த சடங்குகள் செய்யாமலே
தரணியில் உயர்ந்தோம் பேய்பிசாசு பிடிக்காமல்

நாகரிகமா? பட்டிக்காட் டுத்தனமெனக் கூறி
நாமும் அதனைக் கைவிட்டோம் ஆனால்
போக மூன்று தசாப்தம் மீண்டும் பெருமையோடு
புகுந்தது தழைத்தது தலைக்குத் தண்ணீர்
வேகப்பரவல்; விபரம் அறியா வயதில்
ஆளாகி விட்டனர் முதலிரு புதல்விகள்
தாகம் சடங்கில் அற்றனர், தந்தை
தாய்வழி உறவும் சுற்றமும் தானே

ஆடிக்கலவரம் ஆனசின்னாளில்
ஆளாகி விடடாள் ஆண்டு பதி னான்கில்
சூடிமகிழும் ஆவல் குடும்பமன்றத் தீர்வு.
மருத்துவ-கணக்காள மாணவியரோடு
பாடுகிறான் பல்கலைப் புகுமுக மாணவன்
'பள்ளித் தோழரின் தங்கைகள் சடங்கில்
வீடுகள் சோடனை உண்டு களித்து
ஆடிப்பாடிய கடமைகள்' உண்டாம்

பெற்றோர் திகைத்தனர் பிள்ளைவிருப்பறிவார்.
பேதுறல் இன்றி நாணிக் கோணி
"மற்றோர் ஜனாவும், கஜா, வசு, மீரா,
மாலா, கிளியொடு அல்பம் காட்டினர்"

☞

உற்றவள் விருப்போ போட்டியோ அறியோம்
ஒரேமுடிவு ஆடம்பரம் அற்றதாய்
சுற்றஞ்சூழப் 'பந்தல், மைக்' இன்றி
மங்கள ஆராத்தி எடுக்கப்
படம்பிடித்தார்

மாலையும் கழுத்துமாய் நீ நின்றபோது
மகிழ்ந்தோமா நாம் கடைக்குட்டிக் குழந்தை
வாலைக்குமரி ஆகிவிட்டாள் ஏங்குகிறோம்.
வாராது இனியோர் சந்தர்ப்பம்என்றா
சேலை உடுத்தொரு சீரழகு பார்த்தீர்
சிவந்த முகத்துக்கு சீரானபொட்டுவைத்தீர்
வேலெழுதி வில்வளைத்து இதழ்கள் நிறமூட்டினீர்
வித்தார மான சிறுசிரிப்பை வரைவீரோ?

மண்ணுக்குத் தாரை வார்த்த நன்னாளிலும்
மாலையிட வாய்ப்பில்லை சோகம் மீதுர
புண்ணான உன்னுடலைப் போர்த்த வொருமாலை
போடவுமோ எமக்குப் புகலுமொரு கதியுமிலை
கண்ணீரைச் சொரிந்து கல்லறையைக் குளிப்பாட்டி
காணேசன் மாலைகட்டி சூட்டவுமோ விதியுமிலை
திண்ணமுடன் எங்குடும்பப் பெருமைதனைச் சாற்றி
தேம்புமெமக்கு மாலையிட்ட பெருமாட்டி நீயல்லவா

- நம்நாடு

கவியும் காலமும்

முதற்பனி

வெண்பனியே வெண்பனியே
வேகின்றளம் தேசத்தில்
கண்காட்டிக் களிப்பூட்ட
கடுகிநீ போகாயோ
படங்களில் பார்த்து அயர்ந்து
பஞ்சுப் பொதியில் பட்டாடையுடன்
படுத்துருண்டு புரண்டு விளையாட,
பூமழையில் புகுந்து ஓடித்திரிய
நெஞ்சம் அவாவி நின்றேன்.
தஞ்சம் தருகின்றேன் பின்
மஞ்சத்தில் படுத்துறங்கு
என்றிட்டாய் எண்ணம்போல்
கனடாவந்தேன் கண்டேன் களித்தேன்
மல்லிகை முல்லையாய்
சொரியும் பூக்களின்
உள்நுழைந்து அனுபவிக்க
உந்துமோர் ஆவல்.
பாய்ந்தோடி வெளிவந்தேன்
ஆசை அறுபதுநாளா
ஆறுவினாடிதான் - அலகு விறைத்தது
தந்தியடிக்குது விரல்கள்
கிட்டியடிக்குது பல்லு
தத்தின்தின்னா தகதின்தின்னா
தாளம்போடுது கால்கள்,
வானில் பறப்பது போலே
விறைத்துப் போன காலோடு
வீட்டுள் நுழைகிறேன் 'என்னை விடு என்று'
"ஐயோ நீ ஊரே போகாதே
சிங்கள ஆட்சியில் நீவிர் படும்பாடு" என்றிட்டாய்
"போதுமடி போதும்;
அதோ கீறிக் கிழிக்கவும்
வாரிப் புதைக்கவும்
வந்து நிற்கின்றன வாகனங்கள்
சந்திரிகா ராணுவ லாரிகள்போல"

வன்னியில் வெள்ளம்

கருமேகமே, கறுப்பு வணக்கம்!

கன்னங் கரேலெனக் கறுத்த முகில்களே!
கள்ளப் பிள்ளையைப் பெற்றுப் போடவோ
கண்டவன் நின்றவன் உழக்கி மிதித்து
கருக்கித் துவைத்தவெம் தாயகம் தானா
கனிந்த இதயத் தமிழீழத் தவரெனும்
மனிதச் சுமைதாங் கிகளெனக் கண்டோ
பொழியோ பொழியென முக்கிமுனகி
பெற்றுத்தள்ளி
ஒழித்தோடிச் சென்றிட்டாய்

யார் பெற்ற பிள்ளைகளோ அவர்கள்
ராப் பகலாய் கூலியின்றி காவுகிறார்
தந்தையிடம் உன்பிள்ளையை வழிகாட்ட
என்னவிதி அவர்களுக்கு
உன் சுமையைச் சுமப்பதற்கு?
அவர் பெற்றோர் வயிறெரிய
நீசெய்த வேலை யென்ன?
துட்டுக் கொடுத்தாயா தூக்கிவளர்த்தாயா
எட்டுணை உணவாலும் தீத்தி விட்டாயா
கட்டுடல் போர்க்க கம்பளிதான் கொடுத்தாயா
கொட்டோ கொட்டென்று கொட்டிவிட்டுப்
போய்விட்டாய்

வம்பிலே பிறந்ததை வரிசையிலே வைப்போமா
கம்பெடுத்துக் கலைத்து கடலுக்கே அனுப்பவோ,
சங்கைகெட்ட சத்துருக்கள் தம்முயிர்க்கு ஏதும்
பங்கம் வராமல் அரண் அமைத்து உந்தன்
கள்ளக் காதலனைக் காக்கின்றார் கோழைகள்
கொள்ளை யடிக்கிறார் நீபெற்ற புத்திரர்கள்
அளவோடு நீவந்தால் ஆதரவு நாம்கொடுப்போம்
அட்டகாச மாய்வந்து அழித்திடவா பார்க்கின்றாய்

☞

அடிமேலடி வாங்கி நெஞ்சுரத்தை வளர்த்திட்டோம்
பிடியடா பிடியெனத் திருப்பிப் பெறவைத்தோம்
கடன்பட்டார் நெஞ்சம்போல கலங்கினாலும் திருப்பி
கடன் தீர்க்கும் காலத்தில் கைவரிசை காட்டுகிறாய்
உரம்பெற்ற நெஞ்சங்கள் உறுதியாய் நின்றிடவே
புலம்பெயர்ந்த நம்மவர்கள் புத்தியொடு செயற்பட்டார்
உறவுகளின் கதிகண்டு உயிர்துடிக்க கலங்கிநின்றார்
உளம்கனிந்து மனம்பரந்து உண்மையுடன் தருகின்றார்

மனம் வெளுத்த மக்களவர் மானம் காக்கின்றார்
தினமொரு காசோலை திவ்வியமாய் அனுப்புகிறார்
வெள்ளம் மட்டுமா பள்ளத்தில் பாயும்
உள்ளங் பரந்ததால் செல்வமும் பாயும்
அளவோடு நீ வந்தால் ஆதரவு நாம் தருவோம்
அட்டகாசமாய் வந்தால் அதனையும் பார்த்திடுவோம்

மறந்த கனவுகள்

நான் கண்ட கனவொன்று தாவென்று கேட்டீர்
நானென்ன கவிஞனா கலைஞனா கதைஞனா
ஒன்றுமட்டும் தெரிந்தேன் கனவுகண்ட கவிஞரை

ஷெல்லியோ கிற்ஸ்சோ மில்ரனோ மறந்துவிட்டேன்
கவிஞன் ஒருவன் தன்கனவி னூடே
பவித்திரமானதோர் பரவசம் கண்டான்
'இந்திய அரசபரம்பரை அரண்மனை
விழித்தெழுந்தவுடன் பசுமையான நினைவில்
கதையும் காட்சியும் சுழன்றடித்தன
மகா காவியம் புனையவோர் சித்திரம்
பேனா எழுந்தது தாளிற் பதிந்தது
"குப்ளகான" எனும் தலைப்பை இட்டான்
தங்கு தடையின்றி கவிதை ஓடியது
மொழியும் அணியும் சேவகஞ் செய்தன
பொருளும் செறிவும் உயிரோவியமும்
பொங்கி வழியத் தன்னிலை மறந்தான்
அறிஞரும் போற்றுமோர் அதிசயக் கவிதை
உருண்டு திரண்டு புரண்டு நெளிந்து
காட்டாற்று வெள்ளமாய் கரைபுரண் டோடியது
முன்னூற்றறுபது வரிகள் எழுந்தன
முற்றத்தில் யாரோ அவசர அழைப்பு
சென்றார் பேசினார் வந்தார் தொடர்ந்தார்
அந்தோ!
அத்தனை காட்சியும் கனவும் மறைந்தன
சிந்தனை சிதைந்தது மொழியும் நடையும்
காணாமற் போயின
ஏதேதோ தொடர்ந்து பாழாக்கிவிடாமல்
அற்புதக் கவிதை குறையிலே நின்றது
நமக்கும் அது பாடநூல் ஆயிற்று

☞

அதுட்டுமா!

கனவு காணும் கலைஞரே கேளும்
கவிஞன் பாரதியும் கண்டான் கனவு
மாங்குயில் கூவும் மைம்மல் பொழுதில்
குயிலொன்று கூவியது குயிற்பாட்டு எழுந்தது
கூவியது காதல், காதலின்றேல்
கூக்குரல் இட்டது சாதல் என்றே
காதலினால் மானிடர்க்கு கலவியுண்டாம்
கலவியிலே மானிடர்க்குக் கவலை தீரும்
மென்குரலில் பாடியது கூடவே வேதாந்தப்
பொருளையும்தந்து கனவுகலைந்தது

நானென்ன பெருங் கவியோ இல்லையே
கண்டவுடன் கண்விழிக்க
கனவு மறைந்து போகிறது
நல்லநல்ல கனவென்ற உணர்வொன்றே தவிர
கண்விழித்த போதினிலே கரைந்து மறக்கிறதே
பாவம் என்ன செய்தோம் பரந்தாமா என்று
பரிதவிப்பதல்லாது வேறொன்று மில்லையே

ஐந்து பரிமாணங்களில் பார்த்த நிலவுகள்

1

நிலாவைக் காட்டி சோறூட்டிய காலம்என்
        நினைவில் இல்லை, ஆனால்
நீண்டமுற்றம் அதிலோர் மல்லிகைப் பந்தர்
        மான் தோலில் பாட்டனார், அவர் மடியில் அடியேன்
மழலையை இரசிக்கும் உறவுகள்,
        ஓலையைக்கிழிக்கும்வேலை சட்டங்களாக்கி
சின்னஞ்சிறிதாய் கிழித்து மாட்டுக்குத்தீனி தயாராக,
        “நிலா நிலா வாவா பாடு” என்றார்.

மாட்டேன் மல்லிகைப் பூ வேணும், அடம்பிடிப்பு
        மலர்கையில் வந்ததும்
தன்னை மறந்து, சூழலை மறந்து நிலவைப்பார்த்து
        அபிநயப் பாட்டு அலைஅலையாய் சிரிப்பு
ஆயினும் நிலவோடு ஒன்றிய நினைவும்
        பிறந்த வீட்டின் பசுமை நினைவாய்
இன்றும் நினைவில் வந்து இனிமைகூட்டும்.

2

நாற்சார் வீட்டின் நடுமுற்றம் ஊடாக
        நிலவைப் பொழியும் தண்மதி
நாதஸ்வர இசை காற்றோடு கலந்து
        காதில் இனிக்கிறது மோனநிலை
தூணொன்றில் சாய்ந்து தூநிலாப்பருகி
        துணையொன்றை நாடும் ஏக்கம்
ஏகாந்தமாய் வானில் ஊருகிறது இதயம்
        எப்போ வருவாரோ யார் யார்தான் அவரோ?

எங்கே இருக்கிறாரோ விடை காணா எண்ணச் சிலிர்ப்புகள்
அறிவுத் தேடல்களுடே கிடைத்த சிறுபொழுதில்
நிலா மயக்கத்தில் பருவமங்கைத் தாபங்கள்

☞

3

காத்திருக்க வைக்காமல் கைப்பிடித்தான்
        காதலுளமுடன் ஓர் கண்ணாளன்
பூரணநிலவுக்கும் கடல் வற்றுப் பெருக்குக்கும்
        தொடர்பென்ன சொல்வீர்
நிலாவுக்கும் காதலுக்கும் என்ன சம்பந்தம்?
ஆற்றுப்படுக்கையில் மலை முகட்டில்
கடற்கரையில் மொட்டை மாடியில்
தென்னஞ் சோலையில் வயற்காட்டில்
எங்கெல்லாம்
தென்றல் காற்றும் நிலவும்சேர
தீந்தமிழ் இன்பம், கண்டு நுகர்ந்து
காலங்கழித்த தம்பதிகள் அனைவருக்கும்
களிப்பூட்டும் நிலாப்பார்த்த காலமிவை நினைவில்.

4

பஞ்சுப் பொதிபோல் பிஞ்சுக் குழந்தைகளை
நெஞ்சோடணைத்து தோள்மீது சார்த்தி
நிலாவைக்காட்டி நிலாப்பாட்டுப்பாடி
ஒருபிடிசோறு ஊட்ட முயன்று
தூங்கவைக்க முடிந்ததேதவிர
நிலவுக்கும் மசியாத மழலைச் சிறிசுகள்
“பாட்டில் லயித்து ஊட்டமறந்தீர்”
குற்றச் சாட்டின் உண்மை புத்தியிலுறைக்க
வெண்மதி முகம்நோக்கி நகை எழும்பும்.

5

கட்டிலில் படுத்து நித்திரை யின்றி
யன்னலூடாக வெளியுலக தரிசனம்
பௌர்ணமி மதியும் பவனிவருகின்றாள்
ஔவையும் அங்கே காட்சி தருகிறாள்
பட்டமரக் கிளைகளில் முத்துவலைச் சரங்கள்
விளையாட்டரங்கம் பளிங்கு வெண்கம்பளமாம்

நிலாப்பாய்ச்சும் ஒளிக்கற்றை பிரதிபலித்து
இரட்டிப்பாய் ஒளிகாலும்
இயற்கை மதிமயக்க இதுதான் சொர்க்கமோ
எத்தனை கோடி இன்பம் இப் பூவுலகில்
வைத்தாயோ இறைவா
இயற்கையழகை இறைவனில் ஏற்றி
இன்பங்காணும் இலையுதிர் காலம்
இதுஅல்லவா

ஞான விழிப்பு

கனடா தேசத்தின் சந்தடி நிறைந்த
 தெருக்கள் கூட அமைதியைக் காக்கும்,
 அற்புத நேரம்,
கோடை காலத்துத் தெளிந்த வானம்.
 மூன்றாம் ஜாமம், மாடம் ஒன்றில்
 தட்டந்தனியளாய்,
மோனப் பெருவெளியாம் வான வீதியில்,
 காலத்தையும் தூரத்தையும் கடந்து,
 கண்குத்தி நின்றேன்.

தொடுவானில் வரிசை வரிசையாய் ஈழப்
 போராட்ட வீரரின் அணிநடை
விடுத்து வந்த என் செல்வத்தைத் தேடி
 கண்கள் அலைகின்றன.

ஓ, என் மகள் - என் றோசா மலர்
இருபத்தெட் டகவை அழகு நங்கை
எட்டுவருடச் சேவையி னிறுதியில்
பொட்டிட்ட சன்னத்தின் இரத்தச் சுமங்கலி
கட்டுடலைச் சாய்த்தாள் தான் காதலித்த மண்மீது
மேஜர் துளசி, மாதங்கள் ஆறு.

கவலை துயரம் கற்பனைச் சிதறலில்
முக்குளிக்கும் மூச்சு, கண்ணீர்ப் பெருக்கு
கருப்பை பிசைகிறது நாளும்.
கலசக் காம்பில் "சுள்" ளெனும் வலிப்பு.
அதீத உணர்ச்சி, ஆபத்தாகிறதோ?

 அடிவானத்தில் "துருவதாரகை"!
 அனுதாபம் சொட்டும் ஆழ்ந்த பார்வை

"அன்னையே!
 எல்லோரும் மண்ணின் மைந்தர்களே
 மண்ணின் மைந்தர்கள் எவருமுன் மக்களே, ☞

அவள் ஒருத்தியல்ல,
பிரித்துப் பாராதே."
காதில் விழுகிறது கேவல் அடங்கவும்
கங்கை அமைதி கொள்கிறது.

துருவா! நீ சாசுவதமானவன் உன்னைப்
புனிதன் ஆக்கியது சித்தியின் கொடுமையே!
புனிதராக நாமும் ஆவோமா?
கணப்பொழுதில் சிந்தனை துருவனிடம்.
மனம் ஒரு குரங்கோ?

ஆயிரம் பதினாயிரம் ஏன், கல்பகோடி ஆண்டுகள்
ஓங்கார நாதத்துப் பிரபஞ்ச சுழற்சியில்
நிலைத்து நீ நிற்கின்றாய்,
நின்று எம் நிலமகளைக் காக்கின்றாய்,
என்ன நீ நினைக்கின்றாய், என்ன நீ கண்டிருந்தாய்

மனித பரிணாமமாம் கூர்ப்புக் கொள்கையை?
டார்வின் பொய்யாயின்,
மனித இனத்தின் படைப்புக் கொள்கையை?
இல்லை, அதன் படிமுறை வளர்ச்சியை?
எவற்றைக் கண்டிருந்தாய்?
அவ்வக்காலத்தின் முக்கிய பொருள்களை?

கற்காலத்தின் கூரியகற்கள் அடுத்த தலைமுறையில்
கரந்தன பார்த்தியா! மாற்றுப் பொருள்கள் வந்தன கண்டியா?
இரும்பு முதல் பிளாஸ்டிக் வரை

வாழ்க்கைச் சக்கரம் சுழல்கிறது! உன்னைப் போலவே என்னுள்ளும்
காலகட்டங்களின் மீளாய்வு
குழந்தைப் பருவம்,
குலத்துக்கும் பணத்துக்கும் செல்லப்பிள்ளை
கூடிவிளையாட அனுமதியில்லை
ஏக்கத்தை விழிகளில் தேக்கி அயலவர்
ஆட்டத்தைப் பார்த்து ஆழந்திருப்பேன்.

☞

வீட்டுள்ளேயிருந்து பூனையைத் துரத்தும்
நாய்க்குட்டிப் பொம்மை
வீட்டைச் சுற்றிச் சுற்றி ஓடும்.
சீனக்கப்பல் காரனின் அன்பளிபு,
எத்தனை பத்திரம்! எததனை நேசிப்பு!
என்பொழுது எப்போதும் அத்தோடுதான்

ஒருநாள்,
முரட்டுப் பையன் முறுக்கிய முறுக்கில்
சுருள் உடைந்தது, உலகம் இருண்டது
நாயும் பூனையும் செயலற்றன,
நானும்தான்.
அகத்தில் சிலநாள் அரவமற்ற நிலையில்
முகத்தைக் கையில் தாங்கி,
மௌனக் கண்ணீர் வடிப்பு,
பட்டவேதனையைப் பாட்டி சொன்னார்.
எங்கேயும் கிடைக்காத என் பொம்மைக்கு
எங்கும் அலைந்தார் என்தந்தை

வருடம் ஒன்றில் மீண்டும் வந்தது கப்பல்
வட்டப் பாதையில் ஓடும் ரயில்வண்டி.
ஆயினும் அதுதான் என்முதல் இழப்போ.
இன்றும் அந்தவட்ட மேசையில்
சுழன்றோடும் வீட்டுப் பொம்மையின் காட்சி
இழப்பின் உணர்வில் ஒரு கணம்!
மாய்ந்து போனேனா? வாழ்கின்றேன்.

பிள்ளைப் பருவம், முன்னிளமை, பின்னிளமை
மங்கைப் பருவங்கள்
அறுபதுகளில் நின்று திரும்பிப் பார்க்கும்
அதிசய அனுபவங்கள்
தாரகையே இதற்கு நீ வழிசமைத்தாயே!

ஒவ்வொரு படியிலும் முத்துமுத்தான அனுபவங்கள்
காதல், கல்யாணம், பிள்ளைகள், பிரிவு, இழப்பு - அவ்வப்போ
இனியும் உயிர்வாழ முடியாதெனும் துன்பம்
☞

இதயம் கசங்கி நொருங்கி,
கண்ணீர் வற்றாத நிலாவரை யாகி,
கவலைகள், உயிர்வதை, எதிர் பார்ப்புகள்.

என்னைப் பிடித்துக் கட்டி வைத்த
அன்பு, நட்பு, பாசம், கனவுகள். அவை
பறிபட்டு விடுமோ எனும் பயங்கள்,
அவற்றின் இழப்புகள்
மௌன அனுபவிப்பில் இரத்த அழுத்தம், இதயவலிப்பு,
நெஞ்சுத் துடிப்பு
எத்தனை! எத்தனை!! அத்தனையும் எங்கே?
என்னைத் தம்வசமாக்கி உருக்குலைத்த அவை எங்கே
கனவாய் பழங்கதையாய் இன்றும் வாழ்கின்றேன்
என் உதிரத்து உதிரம் என் கன்மவினை கழிக்க வந்ததோ
இன்றைய தவிப்புகளும் உயிர் உலைப்புகளும்
மாய்ந்து போகுமோ? எனை மாய்த்து விடுமோ?
தாரகையே!

ஆம் அன்னையே!
இன்றைய பிரச்சினைகள், வேதனைகள்.
இவையும் போய் ஒழியும் ஒருநாள்.
நான் சொல்கிறேன்,
இவையும் போய் ஒழியும்.
வாழப் போகும் காலங்களைச் சாகடிக்காதே
கொல்லும் பாசம் வெறியாகு முன்னரே,
குதறி உயிரைக் குடிக்கு முன்னரே,
நாடக மேடைபோல் விளையாட்டரங்கு போல்
உற்சாகமான உண்மையான ஈடுபாட்டுடன்
ஊக்கமுள்ள பாத்திரமாக - அன்றாடக்
கருமங்களில் இறங்கு.
உனக்காக உலகநன்மைக்காக
ஒன்றிவிடு, மூழ்கி எழு, ஆனால்
தாண்டு விடாதே.

☞

நன்றி தாரகையே
நன்றி, என் ஞானவிழிப்புக்கு
சுடலை ஞானமுமல்ல, வாழும் ஆசையுமல்ல,
காலம் வரும் வரை வாழ வேண்டிய
நிர்ப்பந்திப்பு.
சுகமாக வாழுகின் சுழுகமாக்குவது
எம் பொறுப்பு.

சில்லென்ற குளிர்காற்று தழுவிச் செல்கின்றது.
மெல்லச் சூட்டின் தணிப்பு
கிழக்கு சிறிது வெளிக்கிறது
அழைக்கிறது என் துயிலாத விரிப்பு
அமைதி! அமைதி!! அமைதி!!!

சங்கத்தமிழ்மாலை 2002

இயற்கையின் மடியில்

இளநிலவில் இயற்கையின் மடியில் கடலன்னை
எத்தனை நாட்கள் மௌனமாய் மயங்கினோம்
எமைஇழந்து கண்களே ஊடகமாய்
உருகவைத்து போதை ஏற்றும் வனப்பு

காங்கேயன் கரையதனில் பாங்கான பால்நிலவில்
'ஹிஸ்' எனும் ஒலிசிந்தும் மென்சவுக்கங் காற்றினிலே
கீதமிசைக்கும் சிறுஅலைகள் - அம்
மௌனத்தின் ஆட்சியிலே சாட்சியாய் நீ
உன் அழகில் சொக்கிநின்றோம் கடல்தாயே
சுவாசத்தை உள்ளடக்கி சூழலின் ஈர்ப்பினிலே
வானமே கடலே நிலவே ஒன்றாய் கலந்தோம்
வேறு நினைவொழிய எப்படி இவ்விந்தை

தேடிச் செல்லும் அழகிய இடங்களில்
இன்னும் ஒன்று
கீரிமலைக் குன்றினிலே கீழிறங்கும் பாதையிலே
சடையம்மா மடங்கடந்து சிறுஊற்றில் கண்ணசைத்து
அடிவார மணற் பரப்பில் கீரிமுனிக் குகையருகில்
ஆறுமணி மாலை வைகாசிப் பௌர்ணமியில்
வந்து நிற்போம் கிரமமாக
உன்னழகைப் பார்க்கவென

இருதிசைகளைளைத் தாங்கிநிற்கும் இனியவளே
அத்தமனச் சூரியன் மேற்கே,
செந்தழலாய் வட்டத்தகடாய் சிவப்புச்சூரியன்.
கிழக்கே வெள்ளித் தகடாம் முழுநிலா
அள்ளிவீசும் வெண்கதிர்கள்.

சின்னஞ்சிறுஅலைகள் செங்கிரணம் படிந்து
பவளத் துண்டுகளாய் மினுமினுத்தல் ஓர்புறம்;
நட்டநடுக்கடலில் கருநீலம், மறுபக்கம்
வெள்ளிக்கதிர்படிந்து முத்துச் சிதறலாய்
வெள்ளி நிலா

☞

பளபளக்கும் மாயா ஜாலங்கள் என்னே
வானமும் கடலும் காட்டும் பரவசங்கள்
காலம் சென்று நினைத்தாலும்
ஞாலங்காட்டித் தித்திக்கும்
மேற்கும் கிழக்குமாய் ஓடுங் கண்கள்

மேற்கில் சூரியன் உள்ளே குதிக்கும்வரை
நினைவழிந்து நேரந்தெரியாது மனித
நடமாட்ட மற்ற அந்த மோனப் பெருவெளியில்
நின்றிருப்போம். இருட்டை உணரும்வரை
அள்ளி எடுத்த அமைதியும் ஆனந்தமும்
போதும் எமக்கு புத்துணர்வோடு
இன்னோர் வருடம் செயலாற்ற.

உன் தாயே உனை அடித்தால்....
(ஆழிப் பேரலை)

கடலம்மா கடலம்மா எமைவளர்த்த தாயே - உன்
உடலழகில் மயங்கிநின்ற காலமொன்றுண்டம்மா (கடலம்மா)

அழகுணர்வு அற்றவனும் உன் பயனில் தியங்கி நின்றான்
அறிஞரோடு புலவர்களும் உன் அழகில் மயங்கி நின்றார் - இன்றோ
உனைக்கண்டு பேரச்சமும் பீதியும்
கொண்டுஅவர் வாழ்கின்றார் (கடலம்மா)

உன்னருமை மாதாவோ
உனையடித்தாள் துவைத்தெடுத்தாள் உதைத்தெறிந்தாள்
ஆ அவள் உன் பூமித்தாய்
உளந்நொந்து தடுமாறி ஓடிவந்து சரண்புகுந்தாய்
உன்சேயின் கரமுனக்கு ஆதரவு தருமென்றே
ஓடிவந்து அடைக்கலமாய் மடிபுகுந்தாய்
பாய்ந்துவந்த வேகமதை சேயின்மடி தாங்காது
என்பதை நீ மறந்துவிட்டாய் அம்மா.

நிலைகுலைந்த உன் செயலால் என்னுறவை அழித்துவிட்டாய் - உன்
அம்மா அடித்த அடி உன்முதுகை வீங்க வைத்தால்
உன்கோபம் சேய்மீதா? அம்மா நீ சொல்லம்மா
கணவன் அடித்தகோபம் பிள்ளைமீது காட்டும்தாய்
சாகும்வரை அடிப்பாளோ?
உன் ஊழித் தாண்டவத்தை நீ அறியாயோ - இன்று
எம் வருகைக்காய் அமைதியாய் ஏங்கி நிற்கின்றாய்
எதுவும் நடக்கலைபோல் அமைதியாய் நீ யுறங்க
இழப்பிலே அழுகை, வயிற்றிலே பசி, பயனிலாத் தொழில்,
எங்கே எம் வலைகள்? எங்கே எம் தோணிகள்
வீடுகள் எங்கே பயிரிடும் நிலங்கள்எங்கே
எங்கே எம் குழந்தைகள் எங்கே நம் உறவுகள்
அடிமடியில் கட்டிவைத்தோ

☞

அடக்கமும் அமைதியும் காக்கின்றாய்? நடிப்பா?
கடற்தாயே உனைக்கண்டு அச்சமும் பீதியும்
கொண்டவர் வாழ்கின்றார்
இதுதகுமோ என்தாயே இதுஎன்ன தர்மமம்மா
சொல்தாயே சொல் (கடலம்மா) 2005

காதலுக்கும் காலம் உண்டோ

சுந்தர ரூபன் என்னினிய கண்ணாளன்
சாந்த மூர்த்தியாம் அவன்கீர்த்திபெரிதே
சிந்தையெலாம் நிறைந்து இன்றளவும் நின்று
செந்தமிழ் இன்பம்போல் நெஞ்சம் நிறைக்கின்றான்

"நனவெல்லாம நீயாகக்
        கண்துஞ்ச மறுக்குதையா
வருடங்கள் பலவாக
        நீ பிரிந்து சென்றாலும்
அணுவணுவாய் அனுபவித்த
        இன்பங்கள் மறப்போமா
உள்ளுணர்ந்தே சேர்ந்திருந்து
        துன்பத்திலும் கரைந்தோமே
இனியவனே என்னளவில்
        இன்னும் நீ வாழ்கின்றாய்"
                                        எறிநிலா வெண்பனி
                                                நினைவுகளை மீட்பது போல்
                                        வயதென்ன அமரக்
                                                காதலுக்கு எனக்கேட்பேன்
                                        துயரமா சொல்லையா
                                                இல்லவே இல்லையே
                                        'காதலுக்கும் காலமுண்டோ'
                                                என நீர் கேட்பீரே

அன்றொருநாள்,
                அடுப்படியில் அடியேன்
                முற்றத்தில் முல்லைப்
                பந்தல் சீராக்குகின்றாய்
                காப்பி கலந்து உனக்கு தரவந்தேன்
                கையலுவல் விட்டு
                சேர்த்தே கரம் பற்றும்.
                தோன்றிய முறுவல் மறைய

☞

அகத்தின் அழகு பிரதிபலிக்கும்.
கண்கள் கெஞ்சும்.
'என்ன' 'என்ன' என்றே கைபறிக்க
"வேர்த்து விறுவிறுத்த உன்னிலை கண்டு
ஆற்றேன்" என்றியம்பும்
அவ்வாறே எனக்கும் அவர்தோற்றம்
"கள்ளா உன்னை அறிவேன்"
என விரைந்து கருமத்தில் ஈடுபட
மெள்ள வந்து காதோரம்
சுடும் மூச்சுக்காற்று
கடுங்கோபம் கொண்டால்
"கழுவவா துடைக்கவா எனக் கேட்கும்
பட்டப்பகலிது பாலர் பயில்கின்றார்
எட்டிநின்றால் என்சமையல் முடியும்" என்றேனா
"காதலுக்கும் காலமுண்டோ" என்றியம்பும்
கட்டியணைக்க "அப்பா" என்றொருகுரல்
ஓடிவரும்
விட்டு விலத்த வெற்றிச் சிரிப்பெனக்கு,
"சிரிக்காதீர் உம் கண்ணில் ஏமாற்றம்
நானறிவேன்" என விள்ளும்
இதய வீணையில் நாதம் பிறந்த அந்தக் கணங்கள்

"உன் நினைவும் வாழ்வும் இன்ப ஊற்றாக
என்னுளத்தில் நிறைவதனால் என்றும்
உன்பிரிவை நானுணர்ந்த தில்லையே"
என்று நீர் பாடும்வரிகள்
இன்றெனக்கும் பொருந்தும், அன்பே!
ஒருநாளும் நின் பிரிவை
உணராத தன்மையினால்
எந்நாளும் நானோர்
சுமங்கலியாய் வாழ்கின்றேன்

பிரபஞ்ச ரகசியம்

காகத்தைப் பார்த்துக் குயில் கேட்டதாம்
'மனிதரின் செல்லப்பிள்ளை யான்
என்னிசையில் மயங்காதார் யாருளர்?
கீழ், மத்திய, மேல் ஸ்தாயிகளில்
அனாயாசமாய் உலவும் என்னைப்போல்
நீபாடுவாயா?
மக்களுக்கு மகிழ்ச்சி தருவாயா?
பட்டாசு விட்டும் நெருப்புக் காட்டியும்
ஓட்டிக் கலைபடுகிறாயே."

கறட்டு முறட்டென்று கத்தியது காகம்
வசைபாடத் தொடங்கியது
அமசடக்கி! நான்
கூடுகட்டுவேன் குஞ்சுபொரிப்பேன்
சோம்பேறி! உன்குஞ்சுகளுக்கும்
ஆயாவாய் இருக்கின்றேன்.
மக்கள் வாழு மிடமெல்லாம் சுத்திகரிப்பேன்
உறவாடுவேன் வருநிகழ்வைக் குறிகாட்டுவேன்
பகிர்ந்துண்பேன். உண்ணி பொறுக்குவேன்
எத்தனை செய்து மென்?

மனிதர் இக்காலம் மழுங்கிவிட்டார்
மின்னுவதெல்லாம் பொன் என்கிறார்
உன்னைப் பார்த்து சோம்பல் வளர்த்திட்டார்
இசை இனிமை எனத்தம் கடமை மறந்தார்
அத்தோடு என்மீதும் ஆராய்ச்சி.
காலங்காலமாய் கண்டறிந்த உண்மைகளை
விஞ்ஞான ஆராய்ச்சி எனக்கூறி
மறைக்கிறார்
சிறுபுத்திமனிதர்
அறிவரா பிரபஞ்ச ரகசியம்?

நான் உறவை அழைப்பதில்லையாம்
உணவைப் பகிர உறவினர் வந்தாலுமென,

பயந்தோ, பொறாமை கொண்டோ
கர்ணகடூரமாக
கத்துகிறேனாம். பொருந்துமா?
தங்களைப் போல் சுயநலமிகள்தான்
எல்லா உயிரினமுமென
எண்ணிவிட்டாரா?
அமானுஷ்ய சக்திகளுக்கு விளக்கம்தர
முடியாத முட்டாள்கள்.
தாம் கள்ளர் பிறரை நம்பார்.

நாங்களே உலாவாத
கட்டடக் காட்டுக்குள்
கண்ணாடிக் கூட்டுக்குள்
வாழும் விஞ்ஞானிகளுக்கு
என்ன தெரியும் எம்பெருமை

காக்கையிருக்கப் பனம் பழம்
விழுந்ததாம் எனும் பழமொழியால்
எதனையும் மூடிமறைப்பர்
அதற்கும் ஓர் அதிர்வு உண்டென
அறியாரா?
அரிசிப் பொரியோடு திருவாரூர்
போன கதைதான் இவர்கதை

உளமும் உடலும்

ஒரு பெண் எழுத்தாளர் முடங்குகிறார்

இசையால் எழுந்த ஓசை நயத்துடன்
இயல்பாய் எழுந்த சொற்களும் சேர
நயமாய் வருவது நற்காவியமாம்
கதையொடு கட்டுரை கவிதை எழுதியும்
சுவைதரு சொற்பொழி வுகளாற்றி வென்றும்
தகைசால் ஆசரியப் பணியும் தொடர்கால்
காவிய மெழுதக் காதல் கொண்டு
கற்பனை உலகின் வர்ணனை சேர்த்து
கருவும் தெரிந்து இயலும் வகுத்தபின்
காகிதமடுக்கி பேனாஎடுத்து
கதிரையிலிருந்து பிள்ளையார் சுழியிட
குமட்டிவந்தது, சகுனப்பிழையாய்
ஓடிச்சென்று வாந்தியெடுத்து
ஒருநாளும் வாராத சத்திஎன்னோ?
ஓஹோ நாட்கள் தள்ளிப் போயின.
கர்ப்பம் வந்து சிறகை ஒடிக்க
கண்களில் நிராசை ஏமாற்றம்
கன்னிமை இழப்பு தாங்கொணாக் கவலை
முகர்தலில் கூர்மை பிரட்டு, சுரப்பு
கொடுப்புள் நெல்லி விளாங்காய் அடைப்பு
மனச்சோர் வுடனே எதிர்காலம் திகிலுமாயிற்று
காலமும்செல்ல கனதியும் கூடக்
கொடியிடை பருக்க தனங்கள் பெருக்க
அணிநடைவண்ணம், அன்னநடையாக
இடைஇறங்கி இடைஞ்சல் கொடுக்க
வயிற்றுப் பாரம் பின்னே சாய்க்க
பேசுங்கண்களில் பயத்தின் சாடை
புதிய காவியத்தில் புலனைந்தும் செல்ல
பேனா முனையும் தூங்கிவழிந்தது
பெருமூச்சொன்று பிறந்து மடிந்தது
காலச்சூழலில் சுமப்பும் வளர்ப்பும்
காவியத் துறைக்கே விடுப்புத் தந்தது
கற்பனை வடிக்கும் திறனும் திணறுமே

அது ஒரு பொற்கூடு

சிட்டுக் குருவியாய் சினேகிதி யருடன்
சிரித்து மகிழ்ந்து ஆடிப்பாடி அலுவல்
செய்தும், கடைத்தெரு கோவில் சுற்றியும்
மட்டுப்பட்ட சுதந்திரம் துய்த்தவள்
மணவாழ்வொன்றில் தாலி ஏறக்
கணவன் இதயம் மாறிப் புக்கனள்

ஆதிக்கம் என்பது அதிகாரத் தாலா
அதீத அன்பின் சாகசத் தாலும்
அடக்குமுறை அரங்கில் ஏறும்.
ஆச்சி படுக்கையில், அவளைப் பார்க்கும் ஆசை
அழைத்துச் செல்ல வரு வேன் என்றான்
ஆயத் தளாகி வழிமேல் விழிவைக்க
"ஆருயிர் நண்பன் எதிர்கொள, மறந்தேன்
நேரஞ் செல்ல நெருடும் என்நெஞ்சு"
ஆரத் தழுவிக் குழைந்து, முத்தி
"அன்பே உறவின் அருமை அறிவேன்
ஆயினுமென் நான் மடையன் மறந்தேன்"

கலங்கிய கண்ணீர் துடைத்தான் அணைத்தான்
கட்டுக்கடங்காப் பரிவுடன் முத்தினான்
"கடும்பசி, உண்போம் பின்னர் செல்வோம்"
மலங்கிய மனைவியைத் தேற்றுவானாம்
மாய்மாலம் செய்து அழுது அரற்றி
"மழையும் வேறு இருண்டும் விட்டது"
இலங்கும் கண்களில் இலச்சினை குத்தி
"என் செய கண்ணே" என்றே ஏங்கினான்
இதயம் நெகிழப் பாட்டியை மறந்தாள்
கலங்குதலின்றிக் கணவன் மார்பில்,
கரங்களின் சிறையில் கட்டுண்டாள்
கட்டில் பதிலாய் கதைசொலக் களைத்தாள்

"ஹணி செல்லம் கையுறை எங்கே"
"குஞ்சு டார்லிங் உடுப்பு அழுத்தியதா"

"தித்திக்கும் பணியாரம் தெவிட்டாது உம்மைப்போல்"
"அலுவலகப் பணிசெய அழகு கெட்டுவிடும்
பூப்போல மேனி புண்பட்டுப் போகுமே!
என் தேவ தைக்கு இன்னுமோர் எஜமானா?
வேண்டிய நகை இழைப் பேன் வேண்டாமே"
பதறியணைப்பான் பல்லுரைகள் பகர்ந்திடுவான்

சாகசம் அறியாள் கட்டுண்டாள் அன்புக்கு,
காப்பும் கொலுசும் கைவிலங்கு கால்விலங்கா?
மூக்குத்தி வைரத்தில் மூக்கணாங் கயிறா?
கன்னி வயதில் வாராத ஆபத்து
தனிச் சென்றால் தான் வருமா? இப்போது?
சிந்தித்தாள்
தன்னுறவைப் பார்க்க, தன் நட்பைப் பேணி
வாய் விட்டுச் சிரித்து, விரும்பும் விடயங்கள்
பேசிப் பரிமாறி, கூடிக் கும்மாளம்
இடுவது எக்காலம்?
தன் ருசிக்கு நாக்கேங்கும்;
உடையின் நிறத்துக்கு உளம் ஏங்கும்;
கவிதை கதை எழுத கை ஏங்கும்;
வீட்டலுவல் செயக்கூட வேலையாள்
வீண்நேரம் போவதாய் உணர்ந்தாலும்
தட்டந் தனியே தவிக்கும் புறா வாய் - அவன்
அரட்டை அடித்து வருமட்டும் காத்திருப்பாள்
பொறாமையா? தனியுடைமையா? பொருளாதார
அடிமையாக்கலா? சிந்திக்கத் தெரிந்தாலும்
விடுபடமுடியாத அன்புச் சிறையே.
அடித்தாலும் எதிர்க்கலாம், ஆனால்.........
ஆம்! அது ஒரு பொற்கூடு
ஆத்மாவை இழந்த, ஆர்வமிகு புறாவுக்கு
அது ஒரு பொற்கூடு

யாதும்கூற வல்லீரோ!

குருமோகன்

கருக்கலைந்து உருக்குலைந்து கட்டிலிலே புரள்கையிலே
வருத்தத்தின் வேதனையோ முனகலுக்கு வித்திடும்
கருவிழிகள் நோயினது கூர்மையினைக் காட்டி நிற்கும்
திருநிறைந்து குலம்விளங்க வந்துதித்த குருமோகன்
அருகினிலே வந்தமர்ந்து ஆதரவாய் நோக்கி
சிறுவிரலால் மென்முகத்தை வருடுகிறான் மைந்தன்
அப்போது வயது மூன்று

"வா குஞ்சு வந்தேறி நாரியிலே குந்து
வலிபோகும் அம்மாக்கு" என்றேனா, ஓடிவந்து
ஏறி இருந்தான் காரோடினான். ஓ, சுகம் சுகம்
மக்கள் மெய் தீண்டல் உடற்கின்பமாம் - மற்று
வலியையும் போக்குமோ, கண்ணயர்ந்தேன் சிறிது

குதித்து விளையாடும் அக்காமார் சத்தம்
குழந்தைக்குப் பொறுக்குமோ?
தூக்கங் கலைக்காது மெதுவாக இறங்கு வராம்
அடிமேல் அடிவைத்து கதவுவரை முன்னேற்றம்
"அம்மா அம்மா" வேண்டுமென்றே முனகுகிறேன்
ஓடிவந்து மேலேறி முதுகினிலே குந்தி
"அனுங்காதீர் அம்மா" ஆளாகி வந்தபின்
மினுங்கற் சேலையொன்று வாங்கித் தருவேன்"
என்றானே வேறென்ன வேண்டும் இவ்வையத்தில்
அவனோ இன்றில்லை.

குகபாலிகா

அன்றொருநாள் அப்படித்தான்
அப்பா மடியில் அன்றலர்ந்த றோசாவாய்
"கண்ணே மணியே கற்கண்டே என்று உவந்து
கொஞ்சி விளையாடும் பாலகியாய்
தந்தை தோளேறிக் குதிரைவிடும் செல்லமகள்
"உப்புக் காவடா அப்பாவே" என்று

செல்லம் பொழிகிறாள்
அப்போது வயது மூன்று

“உப்புக்காவினால் என்ன தருவாய்
என் கற்கண்டே” என்றாரா
கண்ணை உருட்டிப் பிரட்டி
கையை உயர்த்திக் காட்டி
தலையை ஆட்டி யாட்டி
முகத்தில் தீவிரங் காட்டி.....

“பென்னம் பெரிசாய் வளர்ந்து
நெருப்பு அடுப்பில் சோறும்
காஸ் அடுப்பில் கத் தரிக்காயும்
காய்ச்சித் தருவேன்” என்றாளே
அவளும் இன்றில்லை

ஆனால்

பொருள் தேடுவதும்
பொங்கி வடிப்பதும்
இருபால் தொழிலென
இவர்க்கு யார் சொன்னார்
எழுந்தது கேள்வி
என்னுள ஆய்வில்

ஆடையணிகளை வீட்டின் தெரிவு
அம்மா கைப்பை காசு கொடுக்கும்
அப்பாவும் அம்மாவும் தொழிலுக்கேக
ஆங்கோர் பையன் சாதம்வடிக்க
அறிவுறுத்தாதே வீட்டுச் சூழல்

பரம்பரை அலகெனும் மரபணுச் சேர்க்கையா
பிறப்போடான இயல்பூக்கத் தொழிற்பாடா
வயதையும் மீறிய அவதான சக்தியா
அயலவர் சூழலின் அனுபவம் ஏதுமா
ஏதும் அறியேன் என்னருமைத் தோழர்களே
யாதும் கூற வல்லீரேல் உடன்பாடே.

தீர்வு திடமானது

(கவிஞர் ஒருவர் 'பிரிவுத்துயர்' எனும் தலைப்பில் கனடாவிலுள்ள தன் மனைவிக்கு இலங்கையிலிருந்து எழுதுவதான கவிதைக் கடிதத்துக்கு எழுதிய பதில்)

"ஓ என் இனியவளே
குளிர் தந்து எனைக்காக்க
என்னருகே நீ இல்லை
ஆறுதலும் தேறுதலும் தந்தணைக்க
உன் மென் கரங்கள்
என்னருகில் இல்லை இல்லை" - நின்
பிரிவுத்துயர் கேட்டுக்
கலங்கினேன் ஒரு கணம்.

கோடையில், என் இனியவனே!
குளிர்தரு மரம்
மாரியிலே சூடேற்றும் மின்னடுப்பு
நானென்றாய்
நீயும் அவ்வாறே எனக்கானாய்

ஆனால்,
மென்மொழியால் துன்பச்
சுமை நீக்கி
மென்கரத்தால் அணைத்து இதமூட்டி
அமைதியின் எல்லையிலே நீ
ஓய்ந்துறங்கும் வேளையிலே

நான்
மூட மறுக்கும் விழிகள்
பாரமேற்றிய சிந்தனைக் கடல்
சுமைதாங்கியாய் நின்றேன்
உள்ளக் குமுறல்களை
உனக்குரைத்தால்
"நீயுமா புரூட்டஸ்" என்பாய்
பயந்தேன்.

☞

ஒருவனுக்காய் வாழ்ந்து
சிறிசுகளைப் பார்த்து ஏங்கிப்
பற்றாக்குறையோடு பற்றற்ற
வெறுப்பின் சாயலோ?
படித்தும் பயன்படுத்தாத
கல்வியின் விரயம்
ஏமாற்றமோ!...

மண்ணரிப்பாய்
சுயத்தின் பிரகாசம் மங்கிய
ஏக்கம்,
நடிப்பு அன்புக்குப் போலி
தீர்வு திடமானது

இன்றோ,
கூதிர் காலத்துக் குளிர்
ஊசிகளாய்
எலும்பைத் துளைக்கிறது,
பளிங்குப் பனிக்கட்டி வழுக்குப்
பாறையாய் விழுத்துகிறது.
உடல் நோவின் ஊடே
ஆத்மாவின் நிறைவு.

குடும்பங்கள் பலதின் குளிர்மரமாய்
குழந்தைக் கூடுகளில்
அறிவூட்டும் மின்னடுப்பாய்
பாங்கான வாழ்வுக்குப்
பாங்கில் (வங்கியில்) லகரங்கள்.

அடிவானம் சிவந்தது
ஒளிக்கீற்று தெரிகிறது
வளமாக வாழ
வருகின்றேன்
உனைநாடி!

நான்காவது பரிமாணம்

புலம்பெயர் தமிழரின் உள்ளொளி

உறுதியும் திண்மையும் உச்சங்கள் பெற்றுய்ய
மறதியொடு மாய்மாலம் மாய்ந்திட - செறுகுருதி
பாய்ச்சிய வீரரின் தாயகக் கோட்பாட்டு
வீச்சினைக் காத்திடுவீர் வென்று

கொள்கைப் பிடியிலே கோலோச்சி நிற்காது
வெள்கிச் சிரஞ்சாய்க்கும் வீணரைநாம் - சுள்ளென்று
வாயாலே சுட்டாலும் தக்கதே! அவ்வினிமை
ஓயாதே லட்சியத்தின் ஊற்று

குன்றென நிற்றற்கும் கூடலரைச் சீர்செயவும்
மன்றலில் வாக்கினிமை நெஞ்சுறுதி - என்றென்றும்
வேண்டுமெனக் கேட்டபின், வாளா திருந்தாலோ
ஈண்டவை வந்திடுமோ இன்று

வேண்டுமே வேண்டுமென யாரைத்தான் வேண்டுகிறீர்
ஆண்டுபல சென்றாலும் நாமன்றோ - பூண்டுறுதி
உள்ளத்தை ஊக்குவித்து உன்னதங்கள் நேராக்கி
உள்ளொளியை ஓங்கவைப்போம் ஓர்ந்து.

அவள்

(ஜீன் லிற்றிள் எனும் பெண்கவிஞரின் கவிதைவரிகள் மொழிமாற்றம்)

காடுகள் ஊடாகப் பயணம் செய்வதற்கும்;
சமுத்திரத்தை நீந்தி முடிப்பதற்கும்,
எல்லைகாணாப் பாலைவனத்தைக் கடப்பதற்கும்
அடைவதில் சிரமம் மிகுந்த, அழகான
மலைகளில் ஏறுவதற்கும்
அவள் மிகவும் இளையவள் தான் - ஆயினும்
அவளைத் தனியே விடு!

அவளால் பெரும்பொதிகளைச் சுமக்கமுடியாது
அவற்றைத் தொடக்கி விடாதே
அவளால் பல்வகை வழிகாட்டல்களை
பின்பற்ற முடியாது

அவளுக்கு ஒரு திசையறி கருவியைக் கொடு. ஆம்,
பாடங்களையோ ஆலோசனைகளையோ அல்ல.
உல்லாசப் பிரயாணிகளின் வழிகாட்டிகளைத்
தூக்கி எறி! அவளைப் போக விடு!

குறியீடுகளை எழுதிக் கொள்
அவள் தானாகவே வழிகண்டு பிடிப்பாள்
உனது வரைபடம் காலாவதி ஆகிவிட்டது
அவள் தனக்காக ஒன்றை வரைவாள்
இத்தேசம் நன்றாக ஊடுருவி ஆராயப்படவில்லை
அதனை நாம் ஒவ்வொருவரும் கண்டுளோம்
நாங்கள் செய்யும் அட்டவணைகளோ படங்களோ
ஒரு நாளும் கையளிக்கப் படமுடியாதவை
ஏனெனில் பரிசோதிக்கும் போது அவை
முழுமையின் ஒரு சிறு துளியே
என நாம் கண்டு கொள்வோம்

அவள் ஒரு தாரகையைப் பின்பற்றிப் போவாள்
அதையும் அவள் கண்களே பார்க்கும். ☞

அது புதிதான உழவுக்கால் போன்று
புனித மேரி வகுத்த
புதிய பாதையாய்
தூயதாகலாம்

அவளது நாளேடு அவளுக்கே சொந்தமானது
அதுபற்றி அடிக்கடி விசாரிக்காதே.
முகவரி எழுதி, முத்திரை ஒட்டிய அஞ்சலட்டைகளை
அவளுக்குக் கொடுத்து விடாதே

அவள் தன் நேரத்தை வீணாக்கட்டும்
அவளது அதிசயங்களுள் மூழ்கித் திளைக்க
நீண்ட நேரங் கொடு.
அவளுடைய போக்கில் நம்பிக்கை வை
அத்துடன் அவளை சுதந்திரமாக
நடமாட விடு.

ஒரு நாளும் வாசலில் நின்று கையசைத்து
விடை கொடாதே.
யன்னலில் ஒரு ஒளி விளக்கை ஏற்றி வை
ஆனால் காத்திருக்காதே.

அவள் போயிருக்காவிட்டால்
நேரத்தோடு பக்குவப் பட்டிருப்பாள் - ஆனால்
அவளுக்கேற்ற நல்ல நேரம் வரும்போது
அவள் வீட்டுக்கு வருவாள்

தாய்

ஆங்கிலக் கவிஞர் ஒருவரின் பாடல்
(மொழி மாற்றுக் கவிதை)

பொறுமை அன்பு கருணை உண்மை
அனைத்தும் ஒருசேர எமக்கு இருப்பவர்
ஒரேஒருவரே அவரே எமது அன்னை

உலகம் முழுவதும் தேடினாலும்
உண்மை யுள்ளவராக அன்பைப்
பொழிபவர் ஒரே ஒருவரே
அவரே எம் அன்னை (பொறுமை)

தாம் செலுத்தும் நேசத்துக்கும் அருளுக்கும்
ஒருபோதும் கைம்மாறு கேட்காதவர் அவரே
பிரபஞ்சமே வெறுத்து ஒதுக்கினாலும்
திரும்பிப் போய் விழ
அவர் மடி காத்திருக்கும் (பொறுமை)

யாராலும் இட்டுநிரப்ப முடியாத ஒரேயொரு
இடம் அவருடையதே
அவரது நேசமுகத்தை விட்டுப் பிரியுமட்டும்
அவரது தேவை எவ்வளவென உணரமாட்டாய்
அவருக்குப் பதில் சொல்லும் நேரமெல்லாம்
உன்வார்த்தைகளைக் கவனமெடுத்துத்
தெரிவுசெய்
அவர் கிழண்டினாலும் ஒளிமழுங்கினாலும்
அவர் உன் தாய் என்பதை நினைவில் வை. (பொறுமை)

உன்தாயை உன் இதயத்தில் வைத்துப் பூசிப்பாய்
நீயும் அவரும் நிரந்தரமாகப் பிரியப்போகும் நேரம்
எவ்வளவு கெதியில் என உன்னால் சொல்லமுடியாது
அவரை எவ்வளவு நேசிக்கிறாய் என்பதை புலப்படுத்துவாய்
ஒவ்வொருநாளும் உற்சாகப் படுத்துவாயாக
ஆறுதலைக் கொடுப்பாயாக ஏனெனில்
அவர் உலகை விட்டுப் பிரிந்தபின்
சந்தர்ப்பத்தைத் தவறவிட்டேன் என அழுவாய் ஏங்குவாய்

கண் பேசும் காதல்

(ஆங்கிலக் கவிதையின் தழுவல்)

உன் நீலநிறக் கண்கள் எந்நேரமும்
 ஒளி வீசுகின்றன
 முறுவலித்துக் கொண்டே இருக்கின்றன
உன் அயலில் இருப்போர் இதயங்களை
 மகிழ்விக்கின்றன. ஏன்?
உன் கண்கள் பரிவுடன் வருடும் கண்கள்.

என் கண்கள் எப்போதும் சோகமயமானவை
 பாதிக்கப்பட்ட உணர்வுகளையும்
 அழுகைகளையும் காட்டுகின்றன
 என் நேரமும் அவை வெட்டவெளியை
 உற்று நோக்குகின்றன
என் கண்கள் உன் புன்சிரிப்புக்காக
 ஏங்குகின்றன.

 ஒருநாள் உன்கண்கள் என்கண்களைச்
 சந்திக்கின்றன
 உருண்டு திரண்டு வியப்பைக் காட்டி
 மருண்டு நோக்குகின்றன
என் சோகக் கண்கள் ஒளியூட்டப்படுகின்றன
உதய சூரியன்போல்.
உன் புன்சிரிப்புக் கண்களில்
 புனித காதலைக் கண்டு கொண்டேன்
என் கண்களிலும் காதல் ஒளிவீசத் தொடங்குகிறது

கண்டுபிடி

காகம் கரைகிறதாம் குயில் கூவுகுதாம்
யாருக்கு வேண்டும் இவை?
எல்லாச் சத்தமும் இயல்பில் இருப்பதே
மனிதன் பெயரிடுவதைத் தவிர,
வேறென்ன செய்கிறான்?
உன் ஓசைக்கு என்ன பெயர்?
பிறனுக்கு ஆலோசனை புத்திமதி
தன் தனக்கோ?
கண்டுபிடி.

மீளாஅடிமை

சிறகுகள் இன்னமும் வெட்டுப்படாத
புதிய கிளி ஒன்று
கூட்டுள் விடப்பட்டது
அழகிய பசுந்தான பச்சைக்கிளி
ஒய்யாரமாக உற்சாகமாக
கூடெங்கும் சுற்றிவந்தது

சிறகுகள் அரியப்பட்ட ஒளிமழுங்கிய
பழைய கிளிகள் அங்கே.
பொறாமையால் உள்ளம் வெந்தன
கொத்திக் கொத்தித் துன்புறுத்தின.
சட்டைசெய்யாத புதியது, தன்
விடிவுக்காய் தருணம் பார்த்திருந்தது.

உணவூட்டக் கூடு
திறக்கப்பட்டபோது
சுழன்று நுழைந்து வெளியே பறந்து
ஒரு கிளையிலமர்ந்தது.
பழையவை,போட்டியில்லையென ஆரவாரித்தன.
"நீங்களாக விடுதலையை உணராவிடின்
என்றென்றும் அடிமைகளே.
அடிமையில் ஊறி,
எதற்கும் பிறரை எதிர்பார்த்து
ஏமாறுங்கள்"

சிறகை விரித்துப் படபடவென அடித்து
வானத்தை நோக்கிப் பறந்தது
சுதந்திரப் பறவை

மகளிர் மாத்திரம்

பெண்களின் கவனத்தை ஈர்க்கும்
நடையுடை பாவனைக் கண்ணா!
உன்பார்வை அவரை மயக்கும்
உன் சிரிப்பு அவர்கள் கிறுக்கம்
உன் மேம்போக்கு அவருள்ளத்து இரசிப்பு
சிலந்தி வலையில் மாட்டிய சிறுபூச்சிகள்
என்னைப் படைத்தவன் ஏன் உள்ளழகைக்
காண வைத்தான்?
உன்கண்கள் மசுக்குட்டிநெளிப்பு
சிரிப்போ குரங்கின் இளிப்பு
இதயம், நெளியும் புழுக்கள் - அருவருப்பு
நடையோ அடிமைப் புத்தியின் சுளிப்பு
உன் கிராமம் உனக்கு வைத்தபெயர்
'பெண்டுகள் சங்கரி'

அறிமுகச் சிரிப்புக்குத்தானும் - என்
அதரங்கள் ஒத்துழைக்கவில்லை
பேசுவதற்குக்கூட என் சொற்கள்
கை கொடுக்குது இல்லை
என் முகபாவமோ
முட்டாள் தனமான பலவீனம்
இறைவா எனக்குப் பன்முகம் தாராயா
உள்ளத்தை ஒளித்தொரு
இனிமைகாட்டும் பொய்முகம் தாராயா?

குமுறலும் குறுங்கவியும்

(ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் ஏற்பட்ட உணர்ச்சித் துண்டுகள்)

கைம்மண்ணளவு

வில்லம்பு கொண்டு
வித்துவத்தைக் காட்டாதீர்
சொல்லம்பு கொண்டு
சோதிடத்தைத் துளைக்காதீர்
அறியாத கலையொன்றை
அறிந்ததுபோல் தூற்றாதீர்
இறந்தகாலம் மேதைகள்
இல்லாத காலமாக
அறிவிலி போல் எண்ணாதீர்
ஆழ்ந்தகன்றதுபிரபஞ்சம்

காதல்

கண்ணுங்கண்ணுங் கவ்வும்
காதல் பேசும் முத்தமிடும்
போதாதோ உனக்கு
ஐ லவ் யூ சொன்னால்தான்
காதலா? பாவம் கண்கள்
பனியின் விறைப்பிலோ

முதுகு சொறிதல்

மலராத மொட்டொன்று
மணிமகுடம் சூடியதே
பாடாத கவிதைக்காய்
பரிசுகள் பெற்றதுவே
மகுடியால் ஆட்டுவிக்க
தத்தோ மென்றாடியதே
எங்கேபோய் முட்டுவேன்
என்தலையை

நட்பு

என் நண்பனே
ஏன் இந்தக் கபடி ஆட்டம்
பச்சோந்தியாய் நீ
மாறினாலும்
வெறுக்க மனசில்லையே

தவளை

கழுதையறியுமோ
கற்பூரவாசனை
கறட்டுச் சுறட்டென்று
கத்துகிறாய் அவள்காலடியில்
அழகிய அவளோ புன்னகைத்து
அண்ணாந்து பார்த்து
எட்டாத சூரியனுக்காய்
ஏங்கி மலர்கிறாள்
கர்ண கடூரத்தைக்
கான மழையாக்கேன்!
காரிகையுன் காலடியில்

கோணேஸ்வரி

அரும்புமொட்டாகி
மலர்ந்து பிஞ்சாகி
புத்தெழில் பூத்துக்
குலுங்கிய பூவே
காற்றில் உன் மென்மை கசங்கியது
சூரியன் நின்வனப்பை வாட்டினான்
ராஜாளிக் கூட்டமொன்று
காம்போடு நுள்ளியதே

எழுத்தாளரா?

கருவேலங்குச்சி
பல்லுக்குத்த உதவும்
சொல்லுக் குதவுமோ

கதவம் திறவாய்!

பொங்குதமிழ் கண்டமக்கள்
குயின்ஸ்பார்க் நிலக்கீழ் நிலையம்
குவிந்து திரண்டு திண்டாட
தொகை கண்டு துவண்ட காவலர்
படலைகளைத் திறந்துவிட்டார்
சீட்டில்லாப் பயணம்
வாய்த்தது பலருக்கு
எப்போது அம்மா எங்களுக்கு.

யார் பேய்

பெண்ணெனில் பேயும் இரங்குமாம்
ஏன்? பேயெனில் பெண்ணும் இரங்குவாள் தானே
பெண்ணுக்குப் பயம் பேயில் இல்லை
பெண்ணுள்ளம் அருண்டது அல்லவே
மண்ணில் கல்போல் மனிதர் அல்லவா
பேயாய் பேதுறச் செய்வார்

ஆன்மா வெவ்வேறு

ஆன்மாவுக்கு ஆண்பெண் பால் இல்லை
மதம்சில கூறும் உண்மை அதுவே.
அடக்கல், சொற்கேட்க வைத்தல்,
அதிகாரம் செய்தல்,
எந்த ஆன்மா?
கணவன் ஆன்மா ஈ டேற
மனைவி நோன்பு இருப்பாளாம்
செய்யும் தவறுகளுக்கு தாளம் போடவாம்
களவு வஞ்சனை சூது; ஒத்தோட வேண்டுமாம். அவளே
பத்தினியாம்
அவள் ஆன்மா என்னவாவது
நரகிலும் அவனுடன் தானா
ஐயோ பாவம்!

அப்போதைக்கு இப்போது

தப்புத் தாளம் போட்டவன் அவன்
தலைமாறி விட்டான் தேடுதல்வேட்டை
காவலர் அவளைக் கைது செய்தனர்
இரும்புக் கூட்டில் இடிவாங்குகிறாள்
பொற்சிறையில் அடி உதை பொல்லடி
சொல்லெறி அவளுக்கு, அன்று.
அப்போதைக்கு இப்போது
வேறுபாடு சிறிது தான்
பாவத்தில் பங்கீடு இல்லை
நிம்மதி

கோபம்

கவனம்
இல்பொருள் கருஎடுப்பு
சொல்பொருளாக்கத் திரிப்பு
ஏனிந்த மோகம்?
வியப்பின் உச்சம் நடிப்பு
நடிபொருள் நரகத்துடிப்பு

நளாயினி

குஷ்டரோகிக்கு கூடல்கேட்கிறது
குமைந்தவளுக்குக் கூடமனதில்லை
குதூகலம் பொங்கக்
கூடையில் சுமந்தாள் - ஆயினும்
வெட்கங் கெட்ட வேதனையவளுக்கு
"ஆதவா நில்லங்கே!
அந்நியர் கண்டிடுவார்
ஊனச் செயலொன்றை இயற்றுகிறேனல்லவா"
ஆன்மாவும் உடலும் அருவருப்பு அதிர்வுகள்
காசுக்குப் போகிறவள் மாசுகளை வாங்கட்டும்
பிணைப் பில்லா அவளுக்கு இணைப்பெதற்கு?

வெட்டுண்டு போ

சிகையலங்காரமாம்!
சித்திர வதைபடும் என்
செறி நெடுங் கூந்தலே!
அடிமைப் படுத்தாதே வெட்டுண்டுயோ
வெள்ளம் பள்ளத்தில் பாயும்
பொருளியற் பண்டமா நீ
டொலரைக் கொடுத்து கழுத்துப்பிடிப்பு
பின்னிப்பின்னி
சிக்கடிக்கவும், பின்
நீவப்படவும் செடில்குத்தி, சோடனையென
முள்ளுமுடி ஏந்தவும்
நீ என்ன பெருந் தியாகியா
ஒழிந்து போ

தமிழ் ஈழமும் மாலையும்

மேதகு தலைவர் வாழ்க!

பொன்பூக்கள் கொண்டுநின் பொற்கோவில் நாம் போற்ற
மன்பதைக்காய் வீரப்போர் மாலையிட்ட - மன்னவனே
நுண்மதிசேர் நின்னுறுதி நொந்ததமிழ் மக்களுக்கோர்
தண்ணளியாய் தந்திட்டாய் தான்

பொங்கிவரும் பொற்றமிழால் போற்றியுனை வாழ்த்துவோம்
பொன்னகவை காணுமெம் புண்ணியனே - மங்கை
விலங்கொடிக்கும் வித்தகனாய் வைரவிழா செம்பவளம்
விளங்கவே காண்பீராம் வீறு

காதல் மனைமக்கள் கற்புடைத்தங், கத்தமிழர்
போராளித் தங்கைமார் தம்பிமார் - வானின்று
பூச் சொரியும் மாவீரர் புத்தம் புதுவினைஞர்
மூச்சொன்றி வாழ்த்துகின்றார் மொய்த்து.

தமிழர் தகவல் 2004

மாலை சூட்டும் நாள்

மங்கல விளக்கேற்றி மாலை சூட்டும்நாள்
இன்று வந்ததே
தமிழீழத் தாயகம் ஆனந்த தாண்டவம்
ஆடும் நாளிதே.

நம்தாய் நாட்டின் வளங்கண்டே
தாங்கொணாச் சினம் கொண்டே
வெம் பேயாய் அவள்மேனி
குத்ந்தித் துளைத்தனரே

வகைவகைக் குண்டுகள் எறிகணைகள்
செல்லுகள் பொறிவெடி கொண்டெம்
நகைமுகத்தாள் மேனி பிளந்து
உயிர் குடித் தனரே

பாதுகாப்பு வலைய மென்று
எல்லைபிரித்துச் சல்லடையாக
தீதுசெய்து கூறுபோட்டு
கீறிக் கிழித்தனரே

நெல்லின் விதைப்புப் போலவொரு
நிலக்கண்ணி செல்துண்டு - ரவையென
பல்லின இரசாயனம் விதைத்து
வளம் அழிந்தனரே

அஞ்சியஞ்சிஓடி அகிலமெலாம்
அகதிவாழ்வு புகலிடத்தில்
எஞ்சியோர் தம்முயிரைக் காக்கவென
ஓடி ஒளித்தனரே

பற்பல தலை முறை கண்ட
பாரிய வம்சங்கள் சிதறி
நிலைகுலைந் தோடிநிதம்

நீள வருந்தினவே

II

புத்திரருள் உரம்பூண்ட புலிகள் நம்மைந்தரம்மா
புத்துணர்வுடன் புறப்பட்டுவிட்டனர் தம்மானங்காக்க
அஞ்சாதீர்என அபயமளித்தவன் அடவேறு பிரபாகரன்
அண்டம் நடுங்கிட அணிவகுத்ததுபார் தமிழன் சேனைபடை

அஞ்சனைமைந்தன் ஆஞ்சனேயன்போல்
வண்டமிழ் வீரன் பிரபாகரனும்
சஞ்சீவி மலையின் மூலிகை களென
கொண்டுவந்தான் தமிழ்வீரர் படைத்திரள்

பஞ்செனப் படர்ந்து அன்னை வலிபுண் ஆற்றி
பண்டையவீரம் பன்மடங்காக்கினர்
கண்டபல களங்கள் சமவலு தந்தன
விஞ்ச எழுந்தது சமாதானப்புறா

விடியலில் தமிழீழத் தாயகம் பிறக்கும்
கடிதென வைகறை எழுந்து அலகிட்டு
அடாத்துப் பண்ணிய அந்நியப் படை பயில்
இடமெலாம் மஞ்சள் தெளித்து வேப்பிலை செருகி
தீப தூபங் காட்டிப் புனித தேசமாக்கி
துடக்குக் கழித்துத் துயர் நீக்கிடுவோம்

III

உதயசூரியன் எழுந்தனன் உணர்வு எழுச்சியோடு
இதயம் நிறை மகழ்ச்சி, பெருமிதம்
மங்கல விளக்கேற்றி மாவீரர் துதிபாடி
மாவிலை தோரணம் கதம்பமலர் சரம் கொண்டு
சாலைகள் ஆலயம் பள்ளிகள் மைதானம்
வழிபாதை எங்கும் கட்டி வரவேற்போம்

வண்ண வண்ண மாலைகள்
வகைவகையாய் தொடுத்து
எண்ண எண்ணக் குறையாது
எத்தனையோ வரிசையிலே
மல்லிகை மொக்கெடுத்து சூரிய சந்திரப் பிறையோடு
நெற்றிப் பட்டமும் இணக்கி தமிழீழத் தாய்தலைக்கு
மலராபரணஞ் சூடி முல்லை முகம்கொய்து மூக்குத்தி நாட்டி
சிரமிருந்து கால்போக பூக்களினாற் சோடனையாம்
வகை தொகையாய் மாலைகள்

வெண்டாமரை செந்தாமரை செவ்வந்தி செங்கழுநீர்
கொன்றை இருவாட்சி நந்தியாவர்த்தம் நித்யகல்யாணி
பலவர்ண றோஜாக்கள் அந்திமந்தாரை செவ்வரத்தை
பொன்னலரி மகிழம்பூ பன்னிறக் காணேசன் கார்டினியா
தாழை சாமந்தி துளசி ஆதியாம் தனித்தனி மாலை கட்டவே
வாழை நார்ப் பட்டெடுத்து நிலாவரையின் நீர்தெளித்து
செங்காந்தள் விரல்களால் மலர்மேனி வாடாது
கீரிமலைக் குளிர்மையிலே பூத்தொடுத்துப் பூமாலை
ஆராத்தித் தட்டெடுத்து ஆயத்தராய் நிற்போம்

மணிமுடி சூட்டி மாலைகள் போடவே
அணி வகுத்து நிற்கின்றார்
அயல்தேசப் பிரமுகர்கள்
தானைத்தலைவர் தனிப்பெரும்தலைவன் பிரபாகரன்
செங்கோல் கையேந்தி
அணிசிரசில் நிற்கின்றார்

சூரிய கிரணங்கள் மேலெழ
ஆரவாரித்து வெற்றிக் கொடியாட்டி
ஈழக்கொடி நாட்டி
தமிழீழத் தாயகமேயென
தமிழ்தேசியக் கீதம்பாடி
தாகம் தணிந்தொரு மாலை சூட்டிடுவோம்
தமிழீழத் தாய்க்கொரு மாலை சூட்டிடுவோம்
பொன்னொளி வீசிப் புன்முறுவல் மலர்
தன்னேரில்லாத் தலைவியாம் ஆரணங்கு

தமிழாரணங்கு
தலைநிமிர்ந்து நிற்கின்றாள்
பச்சைப் பசேல் எனவே.
மலையான துன்பங்கள் மாயமாய் மறைந்திடவும்
யாழ் கையிலேந்தி இன்னிசை தருகின்றாள்
வாழ்த்தொலிகள் வானளாவ மாலைகள் சூட்டுகின்றார்
அன்னை மகிழ்ந்து அன்பும் அருளும் பொங்கக் குனிந்து
தன்னை மீட்டவர்க்குத் தலை வணக்கம் செய்கின்றாள்

தாயவள் விடுதலைக்கு
தலைமை தாங்கி நின்றவனை
வாயார வாழ்த்தி வாகைமாலை சூட்டுகின்றாள்
ஆள்வலுப் பங்களித்த அத்தனைபேருக்கும்
தாள் வருந்த நடந்து சூட்டுகின்றாள் மாலை
ஆயுதவலு சேர்த்தோர்க்கும் திக்கெட்டும் சுழற்றி
ஆரங்கள் தொகைதொகையாய் அளித்து நிறைகிறாள்
வெற்றியிற் பங்கெடுத்த வேறுபல தொண்டர்க்கும்
இரத்தத்தால் மண்சிவக்க வைத்தமா வீரருக்கும்
ரோஜா மலர் மாலை பக்கவமாய் போட்டுவிட்டாள்
அன்னை முன்நாமும் ஆளுக்காள் மாலையிட்டு
ஆனந்த பரவசமாகி நின்றோம் காண்பீரே

அன்னே உனதடியைத் தொழுதோம்
ஆர்த்தெழுந்து பாடி ஆடி மகிழ்ந்தோம்
உண்மையுள்ள மக்களாக வாழ்வோம்
உறுதியோடு உம்மை நாங்கள் காப்போம்
சத்தியமே லட்சியமாய் கொள்வோம்
தரணியிலே தலைவன் புகழ் படிப்போம்
மங்களமே மங்களமே மங்களம்
மங்களமே மங்களமே சுபமங்களம்



வள்ளிநாயகி இராமலிங்கம் என்ற ஆசிரியரை, ஆசிரிய விரிவுரையாளரை, சமூகப் பணியாளரை, தமிழ்த் தேசிய பற்றாளரை தெரியாதவர்கள் சிலவேளை எவராவது இருக்கலாம். ஆனால், குறமகள் என்னும் எழுத்தாளரைத் தெரியாதவர்கள் தமிழ் இலக்கியப் பரப்பில் இருக்க முடியாது.

சிறுகதை, தொடர்கதை, நாவல், கவிதை, கட்டுரை, விமர்சனம் என்னும் அறுசுவைகளிலும் தனது பேனாவைக் கடந்த ஐம்பது ஆண்டுகளாகத் தவழவிட்டு, இலக்கிய உலகில் வேரோடி நிற்கும் குறமகள் அவர்கள், புகழ் பூத்த மூத்த எழுத்தாளர்.

தமிழீழத்தின் கலாசாரத் தலைநகரான யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவந்த ஈழகேசரி பத்திரிகையில் 1955ல் தமது முதலாவது சிறுகதையைப் பிரசுரித்து இலக்கிய வானில் பாதம் பதித்த இவர் இவ்வாண்டில் தமது எழுத்துப் பணியில் அரை நூற்றாண்டினைப் பூர்த்தி செய்துள்ளார். இதனால், 'குறமகள் இலக்கிய பொன்மகள்' என்றழைப்பது இப்போது மிகவும் பொருத்தமானது.

ஐம்பது ஆண்டுகளாக எழுதியவைகளை இவர் பக்குவப்படுத்தி வைத்திருந்தால், இதுவரை ஆகக்குறைந்தது பத்து நூல்களாவது பிரசுரமாகியிருக்கலாம். ஆனால் அடிக்கடி இடம்பெற்ற இடப்பெயர்வும், நிலப்பெயர்வும், புலநுழைவும், நலக்குறைவும் அதனைச் செய்ய விடவில்லை. குறமகள் கதைகள், உள்ளக்கமலமடி ஆகிய இரு சிறுகதைத் தொகுதிகளை மட்டுமே இதுவரை தந்த குறமகள், தமது எழுத்துலகப் பொன்விழாப் பரிசாக 'மாலை சூட்டும் நாள்' கவிதைத் தொகுதியைத் தந்துள்ளார்.

முறையான கவிதைப் பயிற்சியின் முதிர்ச்சியுடன் மூத்த எழுத்தாளர் என்னும் பக்குவ நிலையில் நின்று கவிகளை அதன் உருவமும் உள்ளடக்கமும் சிதையாது கோர்த்து அற்புதமான துளசி மாலையாக்கித் தந்துள்ளார். இது சாகா வரம் பெற்ற முற்றத்து ரோஜாவாக நின்று நறுமணம் பரப்பும் பேறு பெற்றது. குறமகளின் இலக்கியப் பயணம் நீண்டு நிலைபெற வாழ்த்துகின்றேன்!

திரு எஸ். திருச்செல்வம்